

சென்னை — பாரகன் & லக்ஷ்மியில் தினசரி மூன்று காட்சிகள்


சுறுசுறுப்பான கைகளில் அழுக்குப்படிகின்றது...
எங்கு அழுக்கிருக்கிறதோ அங்கு கிருமிகளாலான
அபாயம் ஏற்படும்!
அடிக்கடி லைப்பாயினால் சுத்தம்
செய்துகொள்ளுங்கள்!
LIFEBUOY
LIFEBUOY SOAP
லைப்பாய்
சோப்
அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து உங்களைக்காப்பாற்றுகிறது
L. 110-172 TM



சென்னை மாநகரமெங்கும்
செப்டம்பர் 3ம் தேதியன்று
மகத்தான ஆரம்பம்
சின்னப்பா
கண்ணாம்பா
அஞ்சலிதேவி...
கிருஷ்ணன்
துரைராஜ்
மதுரம்
லலிதா
பத்மினி
நடித்த
பாக்யா பிக்சர்ஸ்
மங்கையர்க்கரசி
டைரக்ஷன்
ஜித்தன் பானர்ஜி
அசோஸியேட்:-
P.T. மூர்த்தி
ஸ்டூடியோ: நியூடோன்
விபரங்களுக்கு:
F. நாகூர், 21, மண்டபம் ரோடு, சென்னை. 10.

கல்கி பொருளடக்கம்

மலர் 9 இதழ் 5	செப்டம்பர் 4	விரோதி ஆவணி 19உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.

அபகரணம்!



பாகிஸ்தானிலுள்ள வகுப்பு வெறியர்களிடமிருந்து தங்களுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இந்தியாவுக்கு ஓடிவந்து நிற்கும் அகதிகளின் சொத்துக்களையெல்லாம் பாகிஸ்தான் சர்க்கார் அபகரித்துக்கொண்டு வருகிறார்கள்

கல்கி

மலர் 9 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 5

என்ன செய்தி?

அரசாங்க தர்மம்

முடியரசு, குடியரசு போன்ற எந்த அரசாங்கமாயினும் அதன் பிரஜைகளின் உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அரசாங்கத்தின் முழுமுதற் கடமை அதுதான். அவ்வாறு பாதுகாப்பு அளிக்கத் தவறும் கூட்டத்தை அரசாங்கம் என்றோ, சர்க்கார் என்றோ அழைப்பது பொருந்தவே பொருந்தாது. பிரஜைகளின் உயிருக்குப் பாதுகாப்பு அளிக்காததுடன், அவர்களுடைய சொத்துக்களையும் அபகரித்துக் கொள்ளும் ஒரு கூட்டத்தை அரசாங்கம் என்பதைக் காட்டிலும் கொள்ளைக் கூட்டம் என்று குறிப்பிடுவதுதானே பொருத்தமாக இருக்கும்!

பொய், பித்தலாட்டம், வகுப்பு வெறி, துவேஷம் இவற்றை அடிப்படையாகக் கொண்டே பாகிஸ்தான் சிருஷ்டிக்கப்பட்டது. எனவே, மேற்படி 'லட்சணங்களை' அனுசரித்தே பாகிஸ்தானின் போக்கும் இருந்து வருகிறது. அந்த அவலட்சணங்களில் ஒன்றையாவது பாகிஸ்தான் சர்க்கார் கைவிட்டதாகத் தெரியவில்லை. பாகிஸ்தான் வாதிகளின் துவேஷப் பிரசாரம் காரணமாக இந்தியா பிளக்கப்பட்டது. வெறி பிடித்தவர்கள் கொலை, கொள்ளை, தீ வைத்தல் முதலிய காரியங்களில் ஈடுபட்டனர். அதன் விளைவாக லட்சோப லட்சம் பேர்கள் உற்றார் உறவினர், வீடு வாசல், சொத்து சுதந்திரம் எல்லாவற்றையும் விட்டு விட்டு இந்தியாவுக்கு ஓடி வந்து அடைக்கலம் புகுந்தார்கள்.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு ஓடிய முஸ்லிம்கள் இந்திய சர்க்காரின் நீதியையும் நேர்மையையும் பாரபட்சமற்ற தன்மையையும் நன்கு உணர்ந்து அங்கிருந்து மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய உயிருக்கும் சொத்துக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் பொறுப்பை இந்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டு அதைத் திருப்திகரமாக நிறைவேற்றியும் வருகிறார்கள். இப்போது இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குச் செல்ல விரும்பும் முஸ்லிம் ஒருவர் கூட இல்லை எனலாம். இந்தியாவிலுள்ள முஸ்லிம்களுக்கு அணுவளவும் தீங்கு நேரக் கூடாது என்ற தர்ம நியாயத்தை காந்திமகான் தமது உயிரையே அர்ப்பணம் செய்து ஸ்தாபித்தார். அந்த மகா புருஷரின் உபதேச மொழிகளைப் பின்பற்றி இந்திய சர்க்காரும் நடந்து கொண்டு இந்தியாவிலுள்ள கோடிக் கணக்கான முஸ்லிம்களின் மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்றிருக்கிறார்கள்.

உறுதி கூற முடியுமா?


ஆனால், பாகிஸ்தான் சர்க்கார் சம்பந்தப் பட்டவரையில் அவ்வாறு, அதாவது அங்குள்ள கோடிக்கணக்கான ஹிந்துக்களின் நம்பிக்கையை அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்று உறுதி கூற முடியுமா? பாகிஸ்தானிலிருந்து ஹிந்துக்கள் இந்தியாவுக்கு அடைக்கலம் புகுவது, பாகிஸ்தான் ஏற்பட்டு இரண்டு வருஷங்கள் ஆகியும் கூட நின்றபாடில்லை. இந்தியாவுக்கு ஓடிவந்த லட்சக் கணக்கான ஹிந்துக்களில் ஒருவர்கூட மறுபடியும் பாகிஸ்தானுக்குத் திரும்பிச் செல்லத் துணியவில்லை. அவர்கள் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேற்பட்ட சொத்துக்களைப் பாகிஸ்தானில் விட்டு விட்டு ஆண்டிகளாக வந்திருக்கிறார்கள். வேலியே பயிரை மேய்வதுபோல, அவ்வாறு வந்திருக்கும் அகதிகளின் சொத்துக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டிய பாகிஸ்தான் சர்க்காரே மேற்படி சொத்துக்களைப் பறிமுதல் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. "இந்தியாவுக்குச் செல்ல திட்டம் போட்டிருக்கிறார்கள்" என்று பழி சுமத்தி மற்றும் ஏராளமானவர்களுடைய சொத்துக்களை,—அவர்கள் அங்கிருக்கும்

போதே, — அநியாயமாகக் கைப்பற்ற முற்பட்டிருக்கிறார்கள்.

பாகிஸ்தானின் மேற்படி நடவடிக்கைக்கும் ஹிந்துக்களுக்கு பாகிஸ்தானில் இடம் கிடையாது என்று சொல்வதற்கும் அதிக வேற்றுமை இல்லை. அகதிகளின் சொத்துக்கள் விஷயமாக இந்திய சர்க்காருக்கும் பாகிஸ்தான் சர்க்காருக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்துக்கு விரோதமாக பாகிஸ்தான் ஏதாவது செய்வதும் அதை இந்திய சர்க்கார் கண்டிப்பதும் தினசரி நிகழ்ச்சிகளாக இருந்து வருகின்றன. எனினும், பாகிஸ்தான் சர்க்கார் தங்களுடைய விபரீதமான போக்கை மாற்றிக் கொள்ளாவிடில், இந்திய சர்க்கார் வாயளவில் கண்டிப்பதுடன் நில்லாமல் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும்படி நேரும் என்பது நிச்சயம்.

பொய்யையும் துவேஷத்தையும் அதர்மத்தையும் அடிப்படையாகக் கொண்ட பாகிஸ்தானின் அராஜகமான காரியங்கள் தற்காலிகமாய் லாபகரமாக இருக்கலாம். எனினும் அவற்றின் முடிவு என்ன என்பதற்கு ஹிட்லரின் வாழ்க்கையைக் காட்டிலும் சிறந்த உதாரணம் வேறு தேவையில்லை. யூதர்களின் சொத்துக்களை அபகரித்துக் கொண்டு, யூதர்களைத் தம்முடைய ராஜ்யத்திலிருந்துப் விரட்டிய ஹிட்லர்,—உலக நாடுகள் நடுங்கும்படியான வல்லமை வாய்க்கப் பெற்றிருந்த ஹிட்லர், தம்முடன் ஜெர்மனியும் ஜெர்மன் ஜனங்களும் அதோகதியாகும் படி செய்தார். அப்படியிருந்தும், அதே முறைகளைப் பின் பற்றும் இமிடேஷன் ஹிட்லர்கள் இன்னும் இருந்து வருவது ஆச்சரியம் அல்லவா?

நமக்குச் சொல்லுங்கள்



பத்திராதிபர் :—வாருங்கள்! ஜோசியரே! உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஜோசியர் :—இதோ இந்த 'வாரத்துக் காலபலன்' எழுதிக்கொண்டு வந்திருக்கிறேன். ஜோசியப் பகுதி உங்கள் பத்திரிகை வாசகர்களுக்குப் பிடித்திருக்கிற தல்லவா?

பத்திராதிபர் :—வாசகர்கள் கிடக்கிறார்கள்! நமக்கு ஒரு ஜோசிய பலன் பார்த்துச் சொல்லுங்கள். இந்த 'அட்வர்டைஸ்மெண்ட் டாக்ஸ்' வருமா, வராதா?

புல்லுருவிகளின் கைங்கர்யம்!

ஹைதராபாத்துக்கும் நிஜாம் மன்னருக்கும் புல்லுருவிகளாக இருந்து வந்த அந்நாள் மந்திரிகள் இன்னும் கூடத் தங்களுடைய கைங்கர்யத்தை விடாது நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். சமீபத்தில் பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி ஸர் ஜபருல்லாகான் ஹைதராபாத்துக்காக முதலைக் கண்ணீர் வடித்ததை அதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது. நிஜாம் சர்க்காரில் நிதி மந்திரியாக இருந்த நவாப் மோயின் நவாஸ் ஜங் இப்போது இந்தியாமீது புகார் கூறி ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு மகஜரை சமர்ப்பித்திருக்கிறார்.

நிஜாம் ஆட்சியில் ஹைதராபாத்தை 'முடிசூடா மன்னரா'க விளங்கிய சையது காஸிம் ரஸ்வி மீது வழக்கு நடந்து வருகிறதல்லவா? அந்த வழக்கில் ரஸ்வியின் சார்பில் வாதாட சரியான வக்கீல்களை நியமித்து வசதிகள் செய்து கொடுக்கவில்லை என்பதுதான் நவாஸ் ஜங் கூறியுள்ள புகார். பிரிட்டனிலிருந்து வந்த சில வக்கீல்கள் ரஸ்வியின் சார்பில் ஆஜராவதற்கு சட்டம் இடம் கொடுக்கவில்லை. அதைக் காரணமாக வைத்துக் கொண்டே நவாஸ் ஜங் மேற்படி புகாரைக் கிளப்பியிருக்கிறார். ஆனால். அந்த வழக்கில் வாதாட ரஸ்வியின் கோரிக்கைக்கு இணங்க சிறந்த வக்கீல்களை சர்க்கார் தங்களுடைய செலவில் நியமித்திருக்கிறார்கள். மற்றும் அவர் எதிர் வழக்காடுவதற்கு நியாயமான சகல வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறார்கள். அப்படியிருந்தும்கூட நிஜாம் சர்க்கார் மாஜி மந்திரி அத்தகைய புகார் கூற முற்பட்டிருப்பது, இந்தியாவுக்கு விரோதமாக ஏதாவது துஷ்பிரசாரம் செய்து கொண்டிருக்க வேண்டும் என்ற மனப்பான்மையையே வெளிப் படுத்துகிறது. ஹைதராபாத்தின் நண்பர்களைப்போல் வேஷம் போடும் விஷமிகளைக் கண்டு பொதுவாக உலகமும் குறிப்பாக முஸ்லிம்களும் இனியும் ஏமாந்து போகமாட்டார்கள்.

ஜில்லா போர்டு எச்சரிக்கை

சென்னை மாகாணத்தில் ஜில்லா போர்டு தேர்தல் நடத்துவது என்ற முடிவுக்குச் சென்னை சர்க்கார் வந்த போது அதனுடைய அவசியத்தைப் பற்றிப் பலரும் சந்தேகப்பட்டார்கள். இந்தச் சமயத்தில் தேர்தல் நடத்துவது உசிதமா, புத்திசாலித்தனமா என்றும் ஐயப்பட்டார்கள்.

ஜில்லா போர்டுகள் என்னென்ன வேலைகள் நடத்துவதற்காக ஏற்பட்டனவோ, அந்த வேலைகள் ஜில்லாபோர்டு இல்லாத காலத்தில் நடவாமல் நின்றுவிடவில்லை. ஒவ்வொரு ஜில்லா போர்டும் செய்துவந்த வேலைகளையெல்லாம் சர்க்கார் நியமித்த ஒரு நிர்வாக உத்தியோகஸ்தர் நடத்தி வந்தார். அந்தந்த ஜில்லாக் கலெக்டர் பொறுப்பு வகித்து மேற் பார்வை பார்த்தார். எல்லா வேலைகளும் நடந்து கொண்டுதான் வந்தன. ஜில்லா போர்டுகள் இல்லாத நாட்களில் நடந்ததைக் காட்டிலும் நன்றாகவே வேலைகள் நடந்து வந்தன.

"அப்படியிருக்கும்போது, ஜில்லா போர்டு தேர்தலுக்கு என்ன அவசியம் ஏற்பட்டது? அதனால் என்ன நன்மை அதிகமாக ஏற்பட்டு விடப் போகிறது?" என்ற கேள்விகள் எழுவது இயல்பே யல்லவா?

ஜில்லா போர்டு நிர்வாகத்தில் சில தீமைகள் உண்டு என்பது அனைவரும் அறிந்ததே. நாளடைவில் ஜில்லா போர்டு அங்கத்தினருக்குள் கட்சிப் பிணக்குகள் ஏற்படுகின்றன; 'கிளிக்'குகள் உண்டாகின்றன. காண்டிராக்டுகள் விஷயமான ஊழல்கள் மலிகின்றன. உள்ளபடி ஊழல்கள் இல்லாவிட்டாலும் ஊழல்களைக் கற்பனை செய்து ஜனங்கள் குற்றம் சாட்டுகிறார்கள். ஒவ்வொரு ஜில்லா போர்டு அங்கத்தினரும் ஜில்லாவின் பொது நன்மையை விட்டு விட்டுத் தத்தம் தொகுதிக்கு ஏதேனும் செய்யவேண்டும் என்று பார்க்கிறார்.

ஜில்லா போர்டு ஊழல்கள் அளவுக்கு மீறிப் போகும்போது மாகாண சர்க்கார் தலையிட்டு ஜில்லா போர்டைக் கலைக்க நேரிடுவதும் உண்டு.

ஜில்லா போர்டு அங்கத்தினர்களின் பிரயாணச் செலவு முதலியவற்றினால் பொதுப் பணம் விரயம் ஆவதைப் பற்றியோ சொல்லவேண்டியதில்லை.

இவையெல்லாம் ஜில்லா போர்டுகளின் நிர்வாகம் பற்றிய நம்முடைய பழைய அநுபவங்கள்.

இத்தகைய அநுபவங்கள் இருந்தும் இந்தச் சமயத்தில் ஜில்லா போர்டுகளுக்குத் தேர்தல் நடத்திப் புதிய ஜில்லா போர்டுகளை அமைப்பது, வழியிலே போகிற சனியனை விலை கொடுத்துவாங்கும் காரியமேயல்லவா?

மேற் கூறிய பிரதிகூலங்கள் எல்லாம் இருந்தபோதிலும், ஒரே ஒரு அநுகூலத்தை முன்னிட்டுச் சிலர் ஜில்லா போர்டு தேர்தல் நடப்பது அவசியந்தான் என்று நினைத்தனர்.

காங்கிரஸ் செல்வாக்கைப் பற்றி இப்போதெல்லாம் கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறதல்லவா? மாகாண மந்திரிகளின் காரியங்கள் பொது ஜனங்களுக்குக் காங்கிரஸிடம் வெறுப்பை உண்டுபண்ணியிருக்கிறது என்று சொல்லப் படுகிறதல்லவா? கல்கத்தாவில் ஸ்ரீ சரத் போஸின் வெற்றி மேற்படி சந்தேகத்தை அதிகப் படுத்தியிருக்கிறதல்லவா? எங்கே பார்த்தாலும் ஜனங்கள் காங்கிரஸைப் பற்றிப் புகார்கள் சொல்லி வருகிறார்கள் அல்லவா? ரயிலிலும் பஸ்ஸிலும் டிராமிலும் நாற்சந்தியிலும் மார்க்கெட்டிலும் சந்தையிலும் திருவிழாக்களிலும், — ஜனங்கள் கூடும் இடங்களில் எல்லாம்,—காங்கிரஸ் நிர்வாகத்தில் உள்ள ஊழல்களைப் பற்றிக் குறை கூறுகிறார்கள் அல்லவா? கதர் உடுத்தியவர்கள் கொஞ்சம் தலை குனிய வேண்டியிருக்கிறதல்லவா?—இவையெல்லாம் உண்மையாகவே பொது ஜனங்களின் அதிருப்தியைக் காட்டுகிறதா? அல்லது ஒரு சில விஷமிகளின் பேச்சைப் பிரமாதப் படுத்திக் கொண்டு வீணாகக் கவலைப் படுகிறோமா?—இந்த விஷயத்தை வியக்தமாக வெளிப்படுத்தி விடுவது எவ்வளவோ காரியங்களுக்கு, நல்லது என்று கருதப்பட்டது.

ஜில்லா போர்டு தேர்தல்களின் மூலம் காங்கிரஸின் செல்வாக்கு முன் போலவே இருக்கிறது என்பதாக நிரூபிக்கப் பட்டால் அது பெரிய அநுகூலம் என்பதில் சந்தேகமில்லை. வாய்ப் பேச்சில் எவ்வளவுதான் எதிர்ப்பு இருந்தாலும், தேர்தல் என்று வரும்போது சென்னை மாகாண மக்கள்

ஒரு முகமாகக் காங்கிரஸுக்குத்தான் வோட்டுப் போடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. மேலும் எதிர்ப்புக் கட்சி எதுவும் சரியாக அமைக்கப்பட்டு வேலை செய்யாத நிலையில், மஞ்சள் பெட்டியின் அபரிமிதமான வெற்றி நிச்சயம் என்றும், இதனால் காங்கிரஸின் மதிப்பும் செல்வாக்கும் உயரும் என்றும் நம்பினார்கள்.

ஆனால் இதுவரை வந்திருக்கும் ஜில்லா போர்டு தேர்தல் முடிவுகள் அந்த நம்பிக்கையைச் சிதற அடித்து விட்டன என்றே சொல்லவேண்டும்.

* * *

முதலில் திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை ஜில்லாக்களின் தேர்தல் முடிவுகள் வந்தபோது காங்கிரஸ் அபிமானிகளும் தேசபக்தர்களும் உற்சாகம் கொண்டார்கள். சிற்சில இடங்களில் எதிர்ப்பு பலமாயிருந்த போதிலும் காங்கிரஸுக்கே அபரிமிதமான வெற்றி ஏற்பட்டது. இந்த வெற்றிக்காக அந்த மூன்று ஜில்லாக்களின் காங்கிரஸ் ஊழியர்களை மனமார வாழ்த்துகிறோம்.

திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் நிர்வாகிகளும் தொண்டர்களும் ஜில்லா போர்டு தேர்தல் விஷயத்தில் அநுசரித்த முறையைப் பெரிதும் பாராட்டுகிறோம். ஜில்லா காங்கிரஸ் தலைவர், காரியதரிசி முதலியவர்கள் தேர்தலுக்கு நிற்கவில்லை. அபேட்சகர்களைப் பொறுக்கிய அட் ஹாக் கமிட்டி அங்கத்தினரில் யாரும் நிற்கவில்லை. ஆங்காங்கே கூடியவரையில் தகுதி வாய்ந்த அபேட்சகர்களைப் பொறுக்கி நியமித்தார்கள். பெருமிதமான வெற்றியும் கண்டார்கள். அதனால் தங்களுடைய மதிப்பையும் காங்கிரஸின் மதிப்பையும் உயர்த்திக் கொண்டார்கள். அவர்களை மீண்டும் வாழ்த்துகிறோம்.

* *

அடுத்தபடியாக தஞ்சாவூர், திரிச்சிராப்பள்ளி, தென்னாற்காடு ஜில்லா தேர்தல் முடிவுகள் வந்தன. இந்த முடிவுகள் காங்கிரஸ் அபிமானிகள் யாவருக்கும் மனச் சோர்வையும் கலக்கத்தையும் உண்டாக்கியிருக்கின்றன.

நீண்டகாலமாகத் தஞ்சை ஜில்லா தேசபக்திக்கும் காங்கிரஸ் அபிமானத்துக்கும் பெயர்போன ஜில்லா. சுயராஜ்யக் கட்சி ஆரம்பித்த காலத்தில் ஸ்ரீ ஏ. ரங்கசாமி ஐயங்கார் தேர்தலுக்கு நின்ற நாளிலிருந்து தஞ்சாவூர் ஜில்லாவைக் காங்கிரஸ் ஜில்லா என்று சொல்லுவதுண்டு. அறிவாளிகளும் தேசபக்தர்களும் நிறைந்த அந்த ஜில்லாவில் காங்கிரஸின் பெயரால் ஒரு லாந்தர் கம்பத்தை நிறுத்தி வைத்தாலும் வெற்றி பெறுவது வழக்கம். ஆகவே தஞ்சாவூர் ஜில்லாவில் ஐம்பத்திரண்டு ஸ்தானங்களிலும் காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றி பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் நடந்திருப்பது என்ன? தஞ்சாவூர் ஜில்லாவில் 39 ஸ்தானங்களைத்தான் காங்கிரஸ் கைப்பற்றியிருக்கிறது. பன்னிரண்டு ஸ்தானங்களை இழந்து விட்டிருக்கிறது.

பிரசித்த காங்கிரஸ் ஊழியரும் ஆகஸ்டு தியாகியும் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியும் சமீபத்தில் கம்யூனிஸ்ட் புரட்சிக்காரர்களால் அடிபட்டு உயிருக்கே அபாயமான நிலையில் கிடந்தவருமான ஸ்ரீ டி. கே. சீனிவாசய்யர் தோல்வியடைந்திருக்கிறார். அவரை எதிர்த்து வெற்றியடைந்தவர் இரண்டத்தனை வோட்டுகள் பெற்றிருக்கிறார். இதன் கருத்து என்ன? ஸ்ரீ டி. கே. சீனிவாசய்யருக்கு விரோதமாக என்னென்ன சக்திகள் வேலை செய்திருக்கின்றன?—இது ஆராயப்படவேண்டிய விஷயம்.

காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றியடைந்திருக்கும் பல இடங்களில் எதிர்க்கட்சி அபேட்சகர்களுக்கு ஏராளமான வோட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. இந்த அம்சத்தையும் கவனிக்க வேண்டியது அவசியம்.

தஞ்சாவூரில் காங்கிரஸுக்கு மெஜாரிட்டி கிடைத்து விட்டது. ஆனால் திரிச்சிராப்பள்ளி ஜில்லாவில் அதுவும் கிடையாது. மொத்தம் 52 ஸ்தானங்களில் 22 ஸ்தானங்கள்தான் காங்கிரஸுக்குக் கிடைத்தன. தமிழ் நாட்டில் சமீபகாலத்தில் இத்தகைய பெருந் தோல்வி காங்கிரஸ் அடைந்ததில்லை.

காங்கிரஸ் அபேட்சகர்களுடன் போட்டி விட்டவர்கள் அந்த ஜில்லாவில் அடைந்திருக்கும் பெருவாரியான வோட்டுகளைப் பார்க்கும்போது காங்கிரஸ் அபிமானிகளுக்குப் 'பகீர்' என்று வேதனை உண்டாகும். சில உதாரணங்களைப் பாருங்கள் :—

ஸ்ரீ ராஜா சிதம்பரம் (சுயேச்சை)	2637
ஸ்ரீ ஜி. வரதராஜ பிள்ளை (காங்கிரஸ்)	1669
ஸ்ரீ மாணிக்கசுந்தர முதலியார் (சுயேச்சை)	1125
ஸ்ரீ ஆறுமுக முத்துராஜா (காங்கிரஸ்)	451
ஸ்ரீ ரெங்கசாமிப் பிள்ளை (சுயேச்சை)	2931
ஸ்ரீ ராமசுப்புப் பிள்ளை (காங்கிரஸ்)	888

ஸ்ரீ கோவிந்தசாமிப் படையாச்சி (சுயே) 2265
ஸ்ரீ பரமப் படையாச்சி (காங்கிரஸ்) 541
ஸ்ரீ திருமலை மூப்பனார் (சுயேச்சை) 1741
ஸ்ரீ ஆதிவராகம் பிள்ளை (காங்கிரஸ்) 522

ஒரு காலத்தில் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கே திரிச்சிராப் பள்ளி தலைமை ஸ்தானமா யிருந்தது. டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், டாக்டர் டி. வி. சாமிநாத சாஸ்திரி, ஹனுப் மூர்த்துலா சாஹிப் ஆகியவர்கள் காங்கிரஸ் நிர்வாகிகளா யிருந்தபோது திரிச்சிராப்பள்ளிக் கோட்டை காங்கிரஸ் கோட்டையாகவும் இருந்து வந்தது. ஸ்ரீ ரத்தினவேலுத் தேவரின் காலத்திலும் திருச்சியில் காங்கிரஸ் கொடி கம்பீரமாகப் பறந்தது.

அந்த ஜில்லா இப்போது ஏன் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறது?

ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் ஸ்ரீ ஜி. வரதராஜன் தேர்தல் முடிவுக்குப் பிறகு தமது பதவியை ராஜிநாமா செய்திருக்கிறார். ஆனால் தோல்விக்குப் பொறுப்பாளி அவர்தானா? அல்லது பின்னாலிருந்து சூத்திரக் கயிற்றை இழுப்பவர்கள் அவரைப் பலி கொடுத்திருக்கிறார்களா?—தமிழ் நாட்டுக் காங்கிரஸ் வாதிகள் நன்றாகச் சிந்திக்க வேண்டிய விஷயம்.

* * *

தென்னாற்காடு ஜில்லாவுக்கு வந்தால் நிலைமை இன்னும் மோசமாகவும் பயங்கரமாகவும் தோன்றுகிறது. இந்த ஜில்லாவில் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு எதிராக வன்னிகுல க்ஷத்திரிய சங்கத்தார் அபேட்சகர்களை நிறுத்தி வைத்தார்கள். நிறுத்தி வைத்ததோடு மட்டும் அல்ல; பல தொகுதிகளில் அச்சங்கத்தார் பிரமாதமான வெற்றியும் அடைந்திருக்கிறார்கள்.

எப்போது ஒரு சாதி ஸ்தாபனத்தின் பெயரால் அபேட்சகர் நிறுத்தப்பட்டு அத்தகைய அபேட்சகர்கள் காங்கிரஸ் அபேட்சகர்களைத் தோற்க அடித்து வெற்றி பெற்றார்களோ, அப்போது அந்த ஜில்லாவில் காங்கிரஸுக்குக் குழி தோண்டப்பட்டு விட்டது என்றே சொல்ல வேண்டும்.

வன்னிகுல க்ஷத்திரியர்கள் என்று சொல்லப்படும் படையாச்சிமார்கள் தென்னாற்காடு ஜில்லாவில் பெரும்பான்மையோர். ஆகையால் அவர்கள் ஜில்லா போர்டில் பெரும்பான்மையோராக வருவதில் ஆட்சேபணை எதுவும் இருக்க முடியாது. ஆனால் அவர்கள் சாதியின் பெயரால் நின்று வெற்றி பெற்று வருவது பெரிதும் வருந்தத் தக்கது. காங்கிரஸ் ஸ்தாபனத்தில் அவர்கள் பெருவாரியாகச் சேர்ந்து காங்கிரஸின் பெயரால் அபேட்சகராக நின்று ஜயித்திருந்தால் எவ்வளவோ திருப்திகரமா யிருக்கும். அந்தமாதிரி நடைபெற முடியாமல் தடையாக நின்ற சக்திகள் யாவை? இதைப் பற்றி ஆராய வேண்டும்.

தமிழ்நாட்டில் 1920-ம் ஆண்டிலிருந்து சாதிகளின் பெயரால் பல விதக் கிளர்ச்சிகள் நடந்து வந்திருக்கின்றன. ஆதியில் ஜஸ்டிஸ் கட்சி அத்தகைய பிரசார முறையைக் கையாண்டு வந்தது. பிற்பாடு காங்கிரஸ் ஸ்தாபனத்துக்குள்ளேயே சாதி மனப்பான்மை புகுந்து கொண்டது. அதைச் சிலர் தூபம் போட்டு வளர்த்து வந்தார்கள். அவர்களுடைய காரியத்தின் பயன்களைத்தான் இப்போது தென்னாற்காடு ஜில்லாவில் பார்க்கிறோம். இந்தச் சாதி மனப்பான்மைக்கு விரைவில் ஒரு சரியான பூட்டுக்கட்டை போடாத வரையில் தமிழ்நாடு சின்னாபின்னமாய்ப் போய் விடும் என்பதில் சந்தேகமில்லை.

* *

ஜில்லா போர்டு தேர்தலில் காங்கிரஸ் சில ஜில்லாக்களில் அடைந்திருக்கும் தோல்வியை அலட்சியம் செய்வதற்கில்லை. தேசபக்தர்கள் அதன் காரணங்களைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

ஆயிரம் ஆண்டு அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியா தேசத்துக்குப் பூரண சுதந்திரம் கொண்டு வந்த ஸ்தாபனம் காங்கிரஸ் ஸ்தாபனம்.

தாதாபாய் நௌரோஜி முதல் காந்தி மகாத்மா வரையில் போற்றி வளர்த்த ஸ்தாபனம் காங்கிரஸ் ஸ்தாபனம்.

அத்தகைய மாபெரும் ஸ்தாபனத்தின் மீது பொது ஜனங்கள் வெறுப்புக் கொண்டு விட்டார்கள் என்று சொல்ல முடியுமா? ஒருநாளும் இல்லை.

ஜவாஹர்லால் நேருவைத் தலைவராகக் கொண்ட இந்திய சுதந்திர சர்க்கார்மீது வெறுப்புக் கொண்டு விட்டார்கள் என்றுதான் சொல்ல முடியுமா? அதுவும் இல்லை.

ஜவாஹர்லால்ஜி போகுமிடங்களில் எல்லாம் எத்தனை லட்சக் கணக்கான மக்கள் கூடி அவரை ஆர்வத்துடன் வரவேற்கிறார்கள் என்பதைப் பார்த்தால் நமது தலைவர்களிடம் பொது மக்களின் பக்தி சிறிதும் குன்றவில்லை யென்பது தெரியவரும்.

காங்கிரஸ் தோல்விக்குக் காரணங்களை வேறு இடங்களில் பார்க்க வேண்டும்; ஜனங்களின் அதிருப்திக்குக் காரணங்களையும் வேறு இடங்களில் தேடிப் பார்க்க வேண்டும்.

(1) மாகாண காங்கிரஸ் சர்க்காரின் யோசனையற்ற காரியங்கள், (2) மாகாண காங்கிரஸ் நிர்வாகத்தின் சீர்கேடுகள், (3) அந்தந்த ஜில்லா காங்கிரஸ் நிர்வாகத்திலுள்ள ஊழல்கள், —இவைதான் மக்களின் அதிருப்தியை வளர்த்து விட்டிருக்கின்றன.

ஜில்லா போர்டுகளுக்கு வோட்டுக் கொடுத்த வோட்டர்கள் சொத்து சுதந்திரமுள்ளவர்கள்; கல்வி யறிவுள்ளவர்கள்; தேச நிலைமை தெரிந்தவர்கள்.

இவர்களிடத்தில் இவ்வளவு அதிருப்தி பரவி யிருக்குமானால், நாளைக்கு வயது வந்தவர்களுக் கெல்லாம் வோட்டுரிமை என்ற அடிப்படையின் பொதுத் தேர்தல் நடைபெறும்போது அதன் முடிவு எப்படி யிருக்கும் என்று யார் சொல்ல முடியும்?

ஜில்லா போர்டு தேர்தல் முடிவுகள் காங்கிரஸின் நிர்வாகிகளுக்கு ஒரு படிப்பினையாகும். அதை அவர்கள் உணர்ந்து வருங்காலத்துக் காரியத் திட்டங்களை அமைக்க வேண்டும்.

மறக்க முடியாது!

"காதற்ற ஊசியும் வாராதுகாணும் கடைவழிக்கே!" என்னும் பட்டினத்தடிகளின் வாக்கு சத்திய வாக்குத்தான். உலகத்தின் உடைமைகளில் எதையும் ஒருவன் இந்த உலகைவிட்டுப் போகும்போது அவனுடன் கூட எடுத்துப் போக முடியாது. ஆனாலும் ஒருவன் மறு உலகத்துக்குப் போகும்போது அவனுடன் தொடர்ந்து செல்லக்கூடிய செல்வங்கள் சில இருக்கவே செய்கின்றன. "இவர் உத்தமர்; தயாளு" என்று நாலுபேர் சொல்லும் நல் வார்த்தையும் அவருடைய பிரிவை எண்ணி நண்பர்கள் வடிக்கும் புனிதமான கண்ணீரும் கூடச் சென்று ஒருவரைச் சொர்க்க லோகத்தில் சேர்த்து விடுகின்றன.

அவ்விதம் தாம் பழகிய நண்பர்கள் எல்லாரும் கூறிய புகழுரைகளுடனும் வடித்த கண்ணீருடனும் மேலுலகம் சென்றவர் ஸ்ரீ எஸ். துரைசாமி அவர்கள். பிரசித்தி பெற்ற மோட்டார் வர்த்தகப் பிரமுகரான ஸ்ரீ டி. வி. சுந்தரமையங்காரின் இரண்டாவது புதல்வர் அவர். ஸ்ரீ துரைசாமியுடன் ஒருமுறை பழகியவர்கள் அவருடைய சிநேகிதர்கள் ஆகியே தீருவார்கள். ஒருமுறை சிநேகிதர்கள் ஆனவர்கள் என்றைக்கும் சிநேகிதர்களாகவே யிருப்பார்கள்.

ஸ்ரீ துரைசாமியைப் போல் சரள சுபாவம் உடையவர்களையும் சிநேக தர்மத்தை அறிந்தவர்களையும் பார்ப்பது மிக அபூர்வம். அவரைப்போல் நல்ல காரியங்களுக்குத் தாராளமாக உதவி செய்யும் மனப்பான்மை யுடையவர்களையும் இடது கை அறியாமல் வலது கையால் கொடுக்கும் வள்ளல்களையும் காண்பது அபூர்வத்திலும் அபூர்வம்.

அத்தகைய தயாளசீலர் அகால மரணத்துக்கு உள்ளானார் என்பதை நினைக்கும்போது விதியின் கொடுமையை எத்தனை சிந்தித்தாலும் போதாது என்று தோன்றுகிறது. அருமை மனைவியையும் ஆசைக் குழந்தைகளையும் பெற்றோர்களையும் சகோதரர்களையும் உற்றார் உறவினரையும் இங்கே தவித்துத் துடிக்கும்படி விட்டுவிட்டு ஸ்ரீ துரைசாமி லண்டன் வைத்தியசாலையில் மரண மடைந்தார் என்பது எவ்வளவு கொடூரமான விஷயம்? அத்தனை பேரும் அவருடைய தேகத்தின் வரவை எதிர்பார்த்து ஒரு வாரம் காத்திருந்தார்கள் என்பது எத்தனை பரிதாபமான விஷயம்?

"கல்கி" பத்திரிகையின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட ஒவ்வொரு பொதுக் காரியத்துக்கும் ஸ்ரீ துரைசாமி அவர்கள் தயங்காது தாராளமாகப் பொருளுதவி செய்திருக்கிறார். ஊக்கமும் உற்சாகமும் அளித்திருக்கிறார். நல்ல காரியங்களுக்கு "இல்லை" என்ற வார்த்தையே அவருடைய அகராதியில் இல்லை; அவருடைய காதில் அந்த வார்த்தை வராது.

ஸ்ரீ துரைசாமியுடன் பழகியவர்கள் யாராலும் அவரை மறக்க முடியாது என்றென்றைக்கும் மறக்க முடியாது.

ஸ்ரீ துரைசாமியின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறுவது யாராலும் இயலாத காரியம். அவருடைய மனைவி மக்களுக்கும் மற்ற உறவினருக்கும் இந்த மனோவேதனையைத் தாங்கும் சக்தியை இறைவன்தான் அருள வேண்டும். தர்மராஜன் தன்னுடைய கொடூரச் செயலுக்காக அவர்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும்.



இ கிராமபோன் கம்பெனி, லிமிடெட்

கல்கத்தா - பம்பாய் - மதராஸ் - டில்லி

செப்டம்பர் 11வ

மகாகவி பாரதியார் அரசியல் வாழ்க்கையில் தீவிர தேசியவாதியாகவும் திலகர் கட்சியைச் சேர்ந்தவராகவும் இருந்தார். ஹிந்து தர்மத்தின் வேதாந்த நூல்களைக் கரை கண்டவராயினும் அஹிம்சா தர்மத்திலோ அன்பு நெறியிலோ அவ்வளவு பற்றுக் கொண்டவர் என்பதாக அவருடைய பாடல்கள் பலவற்றிலிருந்து தெரிய வராது. ஆனால் தீர்க்கதரிசனம் வாய்ந்த அந்த மகாகவிக்குக் காந்திமகான் இந்திய அரசியலில் தலைமை வகிக்கத் தொடங்கியதும் அவராலேயே இந்த நாடு விடுதலை படைக்கப்போகிறது என்பது தெரிந்து விட்டது. அஹிம்சா தர்மத்திலும் அன்பு நெறியிலும் நம்பிக்கை பிறந்து விட்டது. அதன் விளைவாக,

"பகைவனுக் கருள்வாய்!
நன்னெஞ்சே!"

என்னும் அற்புதமான பாடல் பொங்கி எழுந்தது. அந்தப் பாடலின் சிகரம் என்று சொல்லத் தக்க வரிகள் பின்வருமாறு:—

"தின்னவரும் புலிதன்னையும் அன்போடு
சிந்தையிற் போற்றிடுவாய்-நன்னெஞ்சே!
சிந்தையிற் போற்றிடுவாய்!
அன்னைபராசக்தி அவ்வுருவாயினள்
அவளைக் கும்பிடுவாய் - நன்னெஞ்சே!
அவளைக் கும்பிடுவாய்!"

காந்தி மகாத்மா போதித்த அஹிம்சா தர்மத்தின் உயிர்நிலையான கருத்து அடங்கிய மேற்படி பாரதியார் பாடலை நமது அட்டைப் படம் சித்திரிக்கிறது.

* * *

எட்டயபுரத்தில் செப்டம்பர் 11வ நடைபெறப் போகும் பாரதியார் விழாவைப் பற்றிய விவரங்கள் முன்னொரு இதழில் வெளியிடப்பட்டன. சென்னை மாகாணப் பிரதமர் கனம் பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா விழாவைத் திறந்து வைக்கிறார் என்றும், ஆஸ்தான கவி நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை தலைமை வகிக்கிறார் என்றும் தெரிவித்திருந்தோம்.

இசைப் பெருஞ் செல்வியார் ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் அவர்களும் சங்கீத வித்வான் ஸ்ரீ வி. வி. சடகோபனும் கச்சேரி செய்வார்கள் என்றும் அறிவித்திருந்தோம். இன்னும் ஒரு அருமையான நிகழ்ச்சி புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. 11வ இரவு ஸ்ரீ வி.வி. சடகோபன் கச்சேரி முடிந்த பிறகு ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் காந்தி மகான் கதையைக் காலட்சேபம் செய்ய ஒத்துக் கொண்டிருக்கிறார். ரேடியோவிலோ நேரிலோ ஸ்ரீ சுப்புவிடம் காந்தி மகான் கதையைக் கேட்டுப் பரவசமடைந்தவர்களுக்கு அதைப் பற்றி நாம் ஒன்றும் சொல்ல வேண்டியதல்லை. கேட்காதவர்கள் கேட்டுத்தான் காந்தி மகான் கதா காலட்சேபத்தின் பெருமையை அறிந்து கொள்ளலாம். பிறர் சொல்லித் தெரிந்துகொள்ள முடியாது.

12வ காலையில் நடக்கும் சொற்பொழிவு நிகழ்ச்சியின் இடையே மகாகவி பாரதியாரின் தாய் மாமனுன ஸ்ரீ சாம்பசிவய்யர் அவர்கள் தமது புதல்வியருடன் பாரதியார் பாடல்களைப் பாடுவார்கள். மற்றப் படி மாறுதல் எதுவும் இல்லை.

* * *

எட்டயபுரம் விழாவுக்கு வெளியூர்களிலிருந்து வர விரும்பும் அன்பர்கள் அனைவரும் பாரதியார் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்துவிட்டால் அவர்களுக்கும் விழாவின் நிர்வாகிகளுக்கும் மிகவும் சௌகரியமாக இருக்கும். வருஷ சந்தா ஆறு ரூபாய் அனுப்பிப் பாரதி சங்கத்தில் அங்கத்தினராக வேண்டும்.

நாட்டில் உள்ள உணவு நெருக்கடி நிலைமை அனைவரும் அறிந்ததே. ஆகையால் தமிழ் மக்கள் அனைவரையும் விழாவுக்கு "வருக!" என்று அழைத்தால், அது வெறும் சம்பிரதாய அழைப்பாகவே முடியும். திருச்சி ரேடியோ நிலையத்தார் எட்டயபுரம் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பிப் பாரதியார் கைங்கரியம் செய்ய இசைந்திருக்கிறார்கள். ஆதலின் ரேடியோ மூலம் தமிழ் மக்கள் அனைவரும் எட்டயபுரம் பாரதி விழா நிகழ்ச்சிகளைக் கேட்டு ஆனந்த மடையக் கோருகிறோம்.

பாரதியார் சங்கம்

முந்தைய ஜாபிதா வெளியான பிறகு பாரதியார் சங்கத்தில் வருஷ சந்தா ரூபாய் ஆறு செலுத்தி அங்கத்தினர் ஆனவர்கள்:—

ஸ்ரீ. என். பாலகிருஷ்ணன், பாளையங் கோட்டை.

ஸ்ரீ வி. பி. எஸ். வைரவ ராஜு, தஞ்சை, இருங்கியாநகரம்.

ஸ்ரீ சின்ன அன்னமலை, தியாகராய நகர்.

ஸ்ரீ கவிஞர் ராமலிங்கம் பிள்ளை, நாமக்கல்.

ஸ்ரீ ஆர். கோவிந்த நாய்க்கர், மேற்குத் தாம்பரம்.

ஸ்ரீ எஸ்.வி. பாவரவா, ஆர்.எஸ். மெடிக்கல் ஹால், காரைக்காடு.

ஸ்ரீ என். நரசிம்மன். லக்ஷ்மி மில்ஸ், கோவில் பட்டி.

ஸ்ரீ எம். ராமய்யா, கொட்டகுடி.

ஸ்ரீ டி. எஸ். கணபதி, அனவரத நல்லூர்.

ஸ்ரீ லோபஸ். ஸ்ரீ வைகுண்டம்.

ஸ்ரீ எம். சின்னத்தம்பி தேவர், ஸ்ரீவைகுண்டம்.

ஸ்ரீ சங்கரலிங்கம் பிள்ளை. ஸ்ரீவைகுண்டம்.

ஸ்ரீ சங்கரன், செய்துங்க நல்லூர்.

ஸ்ரீ வெங்கடாசலக் கோனர், விட்டலபுரம்.

ஸ்ரீ அன்னமலை, செய்துங்க நல்லூர்.

ஸ்ரீ சங்கரத்தேவர், கருங்குளம்.

ஸ்ரீ எம். வி. வி. பிச்சாண்டியாப் பிள்ளை, ஸ்ரீ வைகுண்டம்.

ஸ்ரீ ரங்காச்சாரி, ராஜா பிரஸ், ஸ்ரீவைகுண்டம்.

ஸ்ரீ சதாசிவம், பண்ணையார், கருங்குளம்.

ஸ்ரீ சுப்ரமண்ய பிள்ளை, லேகாமி பிரஸ், ஸ்ரீ வைகுண்டம்.

டாக்டர் வெங்கட சுப்ரமண்யம், ஸ்ரீவைகுண்டம்.

ஸ்ரீ எம். ஆர். எம். ராமபிள்ளை, வியாகதார், லேகலை.

ஸ்ரீ த. செந்தி பெருமாள், பேரூர்.

ஸ்ரீ எம். எஸ். ராமச்சந்திரன் பிள்ளை, அனவரத நல்லூர்.

ஸ்ரீ பி. அப்பாத்துரை அய்யர், வஞ்சகோரம், ஸ்ரீ வைகுண்டம்.

ஸ்ரீ சங்கரலிங்கம், கர்ணம், அனவரத நல்லூர்.

ஸ்ரீ நாயப்பனாசாரி, விட்டலபுரம்.

ஸ்ரீ பரமசிவன் செட்டியார், மளிகை, விட்டலபுரம்.

ஸ்ரீ எம். சுந்தரம், எட்டயபுரம்.

ஸ்ரீ ஏ. ஏ. எஸ். வி. அண்ணாமலைச் செட்டியார், நத்தம்.

ஸ்ரீ வி. நடேசன், சேலம்.

ஸ்ரீ எஸ். என். ஏ. நாராயணசாமி நாயகர், கோவில்பட்டி.

ஸ்ரீ ஏ. சிவராம கிருஷ்ணய்யர், கடயநல்லூர்.

ஸ்ரீ வி. முத்தப்பாக் கவுண்டர், கோவில் பட்டி.

ஸ்ரீ கே. வி. எஸ். வாஸ், கொழும்பு.

ஸ்ரீ கே. பாலசுப்ரமணிய ஐயர், மயிலாப்பூர்.

ஸ்ரீ வி. என். குமாரசாமி, தண்டையார் பேட்டை, சென்னை.

ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி குமாரசாமி, தண்டையார்பேட்டை, சென்னை.

ஸ்ரீ எம். அருணாசலம், தூத்துக்குடி.

ஸ்ரீ எஸ். வி. சுவாமிநாதன், புது டில்லி.

ஸ்ரீ என். சுப்பையா அம்பலம், அச்சம் பட்டி.

ஸ்ரீ கே. கணேஷ், தூத்துக்குடி.

ஸ்ரீ ஏ. கே. செல்லக்கிளம், திருப்பாச்சேத்தி.

ஸ்ரீ எம். எஸ். ராமச்சந்திரன், மதுரை.

ஸ்ரீ எம். ஏ. ஷேக் இப்ராஹிம், பேட்டை.

ஸ்ரீ டி. ராமசாமி, தூத்துக்குடி.

ஸ்ரீ திருப்பதி சீனிவாசன், அனவரதநல்லூர்

ஸ்ரீ வைகுண்ட கோனர், வசவப்பபுரம்.

ஸ்ரீ செல்லையா பிள்ளை, வசவப்பபுரம்.

ஸ்ரீ நாராயணய்யங்கார், வசவப்பபுரம்.

ஸ்ரீ வேலுக் கோனர், வசவப்பபுரம்.

ஸ்ரீ சங்கரநாராயணப் பிள்ளை, அனவரத நல்லூர்.

ஸ்ரீ முத்துசாமி ஆசாரி, ஆழ்குடி.

ஸ்ரீ ரா. நாராயண பிள்ளை, அனவரத நல்லூர்.

ஸ்ரீ பதிபர்வதவர்த்தினியம்மாள், அனவரத நல்லூர்.

ஸ்ரீ கு. நல்லசிவம் பிள்ளை, அனவரத நல்லூர்.

மக்களின் கல்வி

“ பரிசோதகர் ”

கல்வி இலாகாவில் நான் ஒரு சிறிய ஊழியன். பத்திரிகைகளுக்கு எழுதும் உரிமையில்லாதவன். அதிலும் அரசாங்கத்தின் கொள்கை, திட்டம் பற்றி ஆராயவும், அறிந்து கண்ட கருத்துக்களை வெளியிடவும் சிறிதும் அதிகாரமற்றவன். ஆயினும் சில சமயங்களில், புறத்தே நிகழும் செயல் காரணமாக, நெஞ்சம் உணர்ச்சி வசமாகிறது; மனத்துட் கிளர்ந்த எண்ணங்களை வெளியிட்டாலன்றி மனம் சாந்தியடைவதில்லை.

“அடிப்படைக் கல்வி” “ஆதாரக் கல்வி” முறையை நாடெங்கும் பரப்பவேண்டுமென ஆட்சி புரியும் கட்சியைச் சார்ந்த பெரியார்கள் ஆணையிடுகின்றனர்; அண்ணல் காந்தி பெயரால். அதற்கிணங்க, அமைச்சர்கள் கொள்கையை மாற்றித் திட்டம் வகுக்க முற்படுகின்றனர். மந்திரிகளின் கொள்கைக் கிணங்கி இலாகாத் தலைவர்கள், வழி வகை செய்கின்றனர். புது முறைக் கல்வியைப் பரப்புவதற்குப் பல லக்ஷம் ரூபாய்கள் செலவிட ‘பட்ஜெட்’ தயாரிக்கப் படுகிறது. ஏற்கெனவே மேற் கொண்டிருந்த திட்டங்கள் அரைகுறையாக விடப்படுகின்றன. அரசாங்கத்தின் கொள்கையும் திட்டமும் நிலையற்ற தன்மையை அடைகின்றன. முன்னேற்றம் தடைப்படுகிறது; பண விரயம் அதிகமாகிறது. இதுவே இந்நாள் ஆரம்பக் கல்வித்துறையில் உள்ள அவலநிலை.

தமிழ் நாட்டில் ‘ஆதாரக் கல்வி பண்டிதர்கள்’ என்று சொல்லக்கூடியவர்களை நேரில் சந்தித்து, சந்தேகத்திற்கிடமான பிரச்னைகள் பற்றி விளக்கம் கோரிய போது, அவர்களிடமிருந்து திருப்தி தரும் பதில் கிடைக்கவில்லை.

புது முறை பற்றி ஒன்று பட்ட அபிப்பிராயம் இல்லை. மாறுபாடுகளும் குறைபாடுகளும் உளவே என்றால், “ஐயா, நீங்கள் பழைமையில் ஊறிப்போன மனம் படைத்தவர். பழங்காலத் தமிழ்ப் பண்டிதரைப் போலத் தமிழ் போதிக்க விரும்புகிறவர். மொழிப் பயிற்சி யற்ற உங்கள் சந்தேகம், தமிழபிமான மிகுதியால் ஏற்பட்டது. மேலும், புது முறையை நீங்கள் அனுதாபத்துடன் ஆராய்வதில்லை. குறை காணும் நோக்குடன் பார்த்தால் இப்படித்தான் சந்தேகங்கள் இருக்கும். நம்பிக்கையுடன் புது முறையைப் பயிற்சி செய்து பாருங்கள்; நன்மை தெரியும்” என்று தெளிவில்லாத பதிலைச் சலிப்புடன் சொல்லுகின்றனர்.

வர்தாக் கல்வி முறையில் எனக்குப் பயிற்சியில்லை. மேல்வாரியாகக் கவனித்த அளவில் இத் திட்டத்தில் எழுத்தறிவுக்குப் போதிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லையென்று கண்டேன். இதுவரை உரிய மதிப்புப் பெறாதிருந்த தொழில் பயிற்சிக்கும், உடலுழைப்புக்கும் விசேஷ சிறப்புக் கொடுக்கப்பட்டிருப்பது நியாயமே. ஆனால் புது மோகத்தில், பழைய லக்ஷியத்தைப் புறக்கணித்துவிட்டதாகவே தெரிகிறது. இது, பிள்ளை வரத்துக்குப் போனவள் புருஷனைப் பறிகொடுத்தது போன்ற துர்ப்பாக்கியம் என்பது என் அபிப்பிராயம்.

எப்படியாயினும், இத் திட்டம் நாட்டுக்குப் புதிது. இன்னும் ஆராயப்பட வேண்டிய நிலையில் உளது. ஒரு சில இடங்களில் பரீக்ஷார்த்தமாக நடத்திப் பார்ப்பதில், செலவு அதிகமாகிறது. நற்பலனே கிடைப்பதாயினும், நாடெங்கும் இம் முறையைப் பரப்ப, இது சமயம் முடியாது. அதற்கு வேண்டிய இடமும் பொருளும் ஏவலும் நினைத்த மாத்திரையில் நிரூபிக்கக் கூடியவை யல்ல! ஆகலின் இந்த நல்ல முறையை வளர்ப்பவர் வளர்க்கட்டும். வசதியுள்ள தனிகர்கள், தரும சீலர்கள், ஸ்தாபனங்கள், கழகங்கள் ஆங்காங்கு தனிப்பட்ட முறையில் இந்தப் புது முறைக் கல்வி நிலையங்களை நடத்தட்டும்; அரசாங்கம் இவற்றிற்குத் தாராளமாக உதவி செய்யட்டும். ஆனால் இத் திட்டத்தை இன்றைய நிலையில் அரசாங்க முத்திரைத் திட்டமாகக் கொண்டு நாடெங்கும் ஒரே காலத்தில் பரப்ப முயற்சிப்பது விரும்பத் தக்கதல்ல.

இனி நாட்டின் இன்றைய நிலை என்ன? உடனடியாகக் கவனிக்க வேண்டியது என்ன? என்பதைப் பார்ப்போம். நம் நாட்டு மக்களில் 100-க்கு 80 பேர் எழுதப் படிக்கத் தெரியாத தற்குறி நிலையில் இருக்கின்றனர். இவர்களுக்குத் தாய் மொழியும் பேச்சளவில்தான் தெரியும். எல்லாருக்கும் எழுத்தறிவு ஓரளவு தெரியவேண்டுமென்பதை மறுக்கும் காலமல்ல இது. ‘எழுத்தறிவு’ என்பது தாய்மொழியில் தாராளமாய் வாசிக்கவும் எழுதவும் நிலையான திறமை பெறுதலாம். இத்துடன், நாட்டு அளவைகளில் (நீட்டல், நிறுத்தல், முகத்தல் முதலியன) நால்வகை விதிகளிலும் (கூட்டல் கழித்தல் பெருக்கல் வகுத்தல்) கணக்குச் செய்து சரியான விடைகளை விரைவில்

காணக்கூடிய 'எண்ணறிவு'ம் இன்றியமையாது வேண்டப்படும்.

நாகரிகம் வளர்ந்துள்ள இந்நாளில், எழுத்தறிவும் எண்ணறிவும் மக்களின் தினசரி வாழ்க்கையில் இன்றியமையாச் சாதனங்களாகி வருவதைக் கூர்ந்து கவனித்தால் அறியலாம். எந்த நிலையில் இருப்பவனாயினும், இவ்விரு திறமைகளைப் பெற்றவன், இவற்றைப் பெறாதவனைக் காட்டிலும் வாழ்க்கைப் போரில் வெற்றி பெற அதிகத் தகுதி யுடையவனாகிறான்.

நாட்டு மக்களில் பத்துக்கு எட்டுப் பேர் இத் திறமைகளைப் பெறுகிறவரை உண்மையான ஜனநாயகமோ, வாழ்க்கைத்தர உயர்வோ, பொருளாதார சமத்துவமோ ஏற்படுவது இயலாத காரியம். சுரண்டலும் சூதுப் குறையா. ஏமாறுபவர் கூட்டம் பெரிதாக இருக்கும் வரை, ஏமாற்றும் கும்பல் தழைக்கத்தான் செய்யும். எனவே, எண்ணும் எழுத்தும் எல்லாருக்கும் இன்றியமையாது வேண்டப்படுபவை என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டும். இவற்றை எல்லாரும் எளிதில் பெற வகை செய்வது தான் தன்னுடைய முதற் கடமை யென்பதையும் அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டும். இவை பற்றி 7-8-49 கல்கியில் வெளியாகி யுள்ள குறிப்புகள் எனக்குப் பெருமகிழ்ச்சி யளிக்கின்றன.


நாட்டின் பொருளாதார நிலைமையின் சுருக்கத்தையும், நிறைவேற்றப்பட வேண்டிய வேலையின் பெருக்கத்தையும் சேர்ந்து கவனித்தால் உங்கள் யோசனையின் சிறப்பு விளங்கும். தற்போது ஆரம்பப் பாடசாலைகளுக்கான பாடத் திட்டத்தில் உள்ள பாடங்கள் பலவற்றையும் விட்டொழித்து எண், எழுத்து இரண்டுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் பள்ளிப் படிப்புக்கு வேண்டப்படும் நேரத்தைப் பாதியாகக் குறைக்க முடியும்.

தினசரி 5-மணிக்குப் பதிலாக 2½ மணியாகப் பள்ளி நேரத்தை மாற்றலாம் என நீங்கள் கூறுகிறீர்கள். நம் மாபெருந் தலைவர், மாட்சிமை தங்கிய கவர்னர் ஜெனரல் ராஜாஜி அவர்கள் பம்பாயில் கூறியபடி, வாரத்தில் 6 நாட்களுக்குப் பதில் 3 நாளைக்குப் பாடசாலை நடத்தலாம். இது போன்ற மாற்று யோசனைகள் கவனித்துத் தீர்மானிக்க உள்ளன. வாரத்தில் மூன்று நாள் பள்ளி, மூன்று நாள் வேலை யென்பதைவிட, தினசரி அரை நாள் வாரம் முழுதும் தொடர்ந்து பள்ளிக்கு வந்து பயில்வது சிறுவர்களுக்கு ஏற்றது என்று நான் கருதுகிறேன். நிற்க.

குறிக்கோளை அளவாக்கி, நடைமுறையில் மேலே குறித்தன போன்ற சிக்கன முறைகளைக் கைக்கொள்வதன் மூலம், இன்று ஆரம்பக் கல்விக்காகச் செலவிடப்படும் தொகையையும், இன்றுள்ள பள்ளிகளையும் ஆசிரியர்களையும் கொண்டே இப்போது படிக்கும் மாணவ மாணவிகளைப்போல் இன்னும் அவ்வளவு பேர்களைப் படிப்பிக்க முடியும்.

ஆரம்பக் கல்வி பற்றி நீங்கள் குறிப்பிட்ட சீர்திருத்தம், இன்றைய நிலையில், நம் நாட்டுக்குப் பெரிதும் வேண்டப்படுவது. ஆதலின், பொது மக்கள் தொடர்ந்து கிளர்ச்சி செய்து, அரசாங்கத்தின் கொள்கையையும் திட்டத்தையும் காலத்திற்கு ஏற்ற வகையில் ஒழுங்கு செய்யவேண்டும்.

"எழுத்தறிவும், எண்ணறிவும் பெறுவதுதான் ஆதாரக் கல்வி" என்று என் போன்ற கல்வி இலாகா ஊழியர் சொல்ல முடியுமா? ஏனையவர் சொன்னாலும் அவர்களும் 'காங்கிரஸின் எதிரிகள்' என்ற பழியைச் சுமக்க நேருமன்றோ?



புரசைவாக்கம் ஸ்ரீ டி. கே. சுந்தரேசய்யர் அவர்களின் குமாரி ஸ்ரீமதி சுந்தரிக்கும், ஸ்ரீ வெங்கட்ராமய்யரின் குமாரன் சிரஞ்சீவி ஸ்ரீனிவாசன் B. A.,க்கும் சென்ற ஆகஸ்டு மாதம் 21-ந் தேதி சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. நண்பர்களும், உறவினரும், பல பிரமுகர்களும் விஜயம் செய்து நம் பதிகளை வாழ்த்தினார்கள்.



அத்தியாயம் 40

"பாக்கியசாலி சீதா!"

டாக்டர் இஞ்செக்ஷன் ஏதோ செய்வதற்காக மருந்து தயாரித்துக் கொண்டிருந்தார். பாமா அவருக்கு உதவி செய்து கொண்டிருந்தாள்.

ராகவன் சீதாவின் தலையைத் தன் மடியில் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தான். அடிக்கடி அவன் விம்மும் சத்தம் கேட்டது.

சீதா தட்டுத் தடுமாறிச் சொன்னாள் :—"நீங்கள் ஏன் அழவேண்டும்? எனக்கு இதைவிட வேறு பாக்கியம் கிடைக்குமா? கஸ்தூரிபாய் தெய்வத்தைப் போல நானும் தாலி கட்டிய புருஷன் மடியில் படுத்துச் சாகவேண்டும் என்று தவம் செய்து கொண்டிருந்தேன். அந்தத் தவம் பலித்துவிட்டது. என்னைப் போல பாக்கியசாலி யார்? நீங்கள் அழ வேண்டாம்!" என்றாள்.

சௌந்தரராகவனைத் துக்கம் ஒரு பக்கமும் வெட்கம் இன்னொரு பக்கமும் பிடுங்கித் தின்றன.

"சீதா! இந்தமாதிரி யெல்லாம் பேசாதே! உனக்கு உடம்பு ஒன்றுமில்லை. சீக்கிரம்சுகமடைந்து பிழைத்து எழுந்திருப்பாய்!" என்றான்.

"அதெல்லாம் இல்லை. நான் இனி வெகுநேரம் உயிரோடிருக்க மாட்டேன். அதென்னமோ அப்படி எனக்குத் தோன்றுகிறது. அதைப் பற்றி நான் கவலைப்படவும் இல்லை. தாரிணி அக்காவும் நீங்களும் பேசிக் கொண்டிருந்ததை நான் ஒட்டுக் கேட்டேன். அதற்காகத் தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள். 'உங்களை மணந்து கொள்ளச் சம்மதம்' என்று தாரிணி அக்கா சொன்னதை என் காதால் கேட்டேன். உடனே புறப்பட்டு வந்து விட்டேன். எனக்கு இனி ஒரு குறையும் இல்லை. அக்கா இப்போது எங்கே? அவளைக் கொஞ்சம் வரச் சொல்லுங்கள். அவளுக்கு என் நன்றியைத் தெரிவிக்கவேணும்."

"வஸந்தியை அழைத்துக்கொண்டு வரத் தாரிணி போயிருக்கிறாள். நீ நினைப்பது போலெல்லாம் ஒன்றும் நடவாது, சீதா! என்னைப் பரிதவிக்க விட்டு நீ போவது கடவுளுக்கே பொறுக்காதே!" என்றான் ராகவன். அதே சமயத்தில் கடவுளை நினைத்து, "பகவானே! இந்த ஒரு தடவை மட்டும் சீதாவைக் காப்பாற்றி விடு! அப்புறம் நான் யோக்கியமாய் நடந்து

கொள்கிறேன். இனிமேல் ஒரு பிசகும் செய்யமாட்டேன். சுயநலத்துடன் ஒரு போதும் நடந்துகொள்ள மாட்டேன்!" என்று மனமாரப் பிரார்த்தனை செய்தான். ராமேசுவரம் முதல் காசி வரையில் உள்ள கோயில் தெய்வங்களை யெல்லாம் வேண்டிக்கொண்டான். அந்த நிமிஷத்துக்கு முன்னால் ராகவன் எந்த நாளிலும் அவ்வளவு தீவிர ஆஸ்திகனாக இருந்ததில்லை.

இன்செக்ஷன் மருந்து ஏற்றிய ஊசியுடன் டாக்டர் வந்தார். ஊசி குத்திவிட்டு, "சரி, நான் இப்போது போய் வருகிறேன். காலையில் நிலைமை எப்படியிருக்கிறது என்று டெலிபோன் செய்யுங்கள்!" என்றார்.

டாக்டருடன் வாசல் வரையில் சென்ற பாமா திரும்பி வந்ததும் ராகவனைப் பார்த்து, "உங்கள் மனைவிக்கு உங்களிடம் ஏதாவது சொல்லிக்கொள்ள வேணுமா, மனதில் ஏதாவது ஆசை இருக்கிறதா என்று கேட்டுவிடுவது நல்லது" என்றாள்.

ராகவன் கோபமுற்று "இது என்ன நான்ஸென்ஸ்? நீங்கள் வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்தால் மிக்க நலமாயிருக்கும்!" என்றான்.

அப்போது சீதா, "அவர் மேல் எதற்காக வீணில் கோபித்துக்கொள்கிறீர்கள்? அவர் கேட்கச் சொல்வது நியாயந்தான். என் மனதில் ஒரு ஆசை இருக்கத்தான் இருக்கிறது. நான் கண்ணை மூடியபிறகு நீங்கள் தாரிணி அக்காவைக் கட்டாயம் கலியாணம் செய்துகொள்ள வேண்டும். அக்கா எனக்கு வாக்குக் கொடுத்திருக்கிறாள். அதை மீறமாட்டாள்" என்றாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் தாரிணியும் சூரியாவும் வஸந்தியுடன் வந்து சேர்ந்தார்கள். எத்தனை எத்தனையோ கஷ்டங்களைப் பார்த்திருந்த வஸந்திக்குத் தன் தாயாரின் நிலைமை எந்தவித உணர்ச்சியையும் தரவில்லை. பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள். "இத்தனை நாள் எங்கே அம்மா ஒளிந்துகொண்டிருந்தாய்?" என்றாள்.

சீதா தன்னுடைய துவண்ட கைகளைத் தூக்கிக் குழந்தையைத் தன் முகத்தோடு சாத்திக்கொள்ள முயன்றாள். ஆனால் அவளுடைய கையில் அதற்கு வேண்டிய பலம் இல்லை.

அதைப் பார்த்த தாரிணி குழந்தையின் முகத்தைத் தாயின் முகத்தோடு சேர்த்து வைத்தாள்.

சீதா அண்ணாந்து நோக்கினாள். முகமூடி தரித்த உருவம் தெரிந்தது.

மிக மெல்லிய குரலில் "இது யார்?" என்று கேட்டாள்.

"என்னை உனக்குத் தெரியவில்லையா, சீதா!" என்றாள் தாரிணி. அவள் யார் என்பதைக் குரலிலிருந்து சீதா தெரிந்துகொண்டாள்.

"வந்து விட்டாயா, அக்கா! ரொம்ப சந்தோஷம். என் மனது குளிர்ந்து விட்டது. நீ இவரிடம் பேசிக்கொண்டிருந்ததை நான் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்தேன். எனக்கு இனிமேல் ஒரு கவலையும் இல்லை. ஆனால் முகத்தை ஏன் மூடிக் கொண்டிருக்கிறாய்? திறந்துவிடு! அக்கா! நான் சாவதற்கு முன்னால் உன்னுடைய முகத்தை ஒரு தடவை பார்க்க வேணும். பார்த்து விட்டால் அந்த ஞாபகமாகவே மேல் உலகத்துக்குப் போவேன். போகும்போது வானத்தில் பூரண சந்திரனைப் பார்த்து அக்காவின் முகத்தைப்போல் அழகாயிருக்கிறதா என்று ஒத்துப் பார்த்துக்கொண்டு போவேன்!......"

இப்படிப் பேசிக்கொண்டேயிருக்கையில் சீதாவின் கண்கள் தாமாக மூடிக் கொள்ளத் தொடங்கின.

தாரிணி சீதாவின் கையைப் பிடித்து நாடி பார்த்தாள். மிக மெலிவாயும் அதி வேகமாயும் அடித்தது. கூண்டிலிருந்து கிளி பறந்து செல்லும் காலம் நெருங்கிவிட்டது என்பதைத் தாரிணி நன்கு உணர்ந்தாள்.

"சீதா! இதோ என் முகத்திரையை எடுக்கிறேன். கண்ணைத் திறந்து ஒரு தடவை என்னைப் பார்! பயந்து போய் விடாதே! உன்னுடைய குழந்தை வஸந்தியை நான் காப்பாற்றுவதற்கு முயற்சித்தபோது இந்த மாதிரி ஆயிற்று. ஆனால் இதற்காக நீ வருத்தப்பட வேண்டாம்......"

இந்த வார்த்தை ஒன்றும் சீதாவின் காதில் விழவில்லை.

திரைவிலகி தாரிணியைப் பார்த்தவுடனே சீதாவின் முகம் அணையுக்

தறுவாயில் தீபம் சுடர் விடுவது போல் காந்தி வீசிப் பிரகாசித்தது.

முன்னைக் காட்டிலும் மெதுவான குரலில்,—வியப்பும் ஆனந்தமும் ததும்பிய குரலில்,—சீதா கூறியதாவது:—"அக்கா! உன் முகந்தான் என்ன அழகாயிருக்கிறது? முன்னே நான் பார்த்தபோது இருந்ததைக் காட்டிலும் இப்போது உன்முகத்தில் களை சொட்டிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட அழகை இந்த உலகத்தில் நான் பார்த்ததேயில்லை. தேவலோகத்திற்குப் போனால் அங்கேயும் உன்னைப் போன்ற ரூபவதியைப் பார்ப்பேனா என்பது சந்தேகந்தான். உன்னைப் பார்த்துக் காதலித்த என் கணவர் என்னைக் காதலிக்கவில்லையென்றால் அதில் அதிசயம் என்ன இருக்கிறது? நான் பாக்கியசாலி, அக்கா! ஒரு குறையும் இல்லாமல் மன நிம்மதியுடன் நான் போகிறேன். ஒருவரும் எனக்காகத் துக்கப்பட வேண்டாம்! சூரியா எனக்காக ரொம்ப வருத்தப்பட்டு உருகுவதாய்ச் சொல்வான். வேண்டாம் என்று சொல்லு!"

சீதா தன்னுடைய பெயரைச் சொன்னது காதில் விழுந்ததும் சூரியா அருகில் வந்து அவள் முகத்துக்கு அருகில் குனிந்து "சீதா! நான் இதோ இருக்கிறேன்" என்றான். அச்சமயம் சௌந்தர ராகவன்கூடச் சூரியாவைத் தடுக்க முயலவில்லை.

சீதா மிக மெல்லிய குரலில், "லலிதாவுக்குக் கடிதம் எழுது; என்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டதாக எழுது!" என்றாள்.

"இவ்வளவுதானா? சீதா! எனக்கு நீ சொல்லவேண்டியது வேறொன்றுமில்லையா?" என்றான் சூரியா.

"இல்லை, வேறொன்றும் இல்லை. சூரியா! நான் பாக்கியசாலி! சீக்கிரம் கல்யாணம் செய்து கொள்!" என்றாள் சீதா.

• • •

சீதா பாக்கியசாலிதான்; இல்லை என்று யார் சொல்ல முடியும்?

சூரியா விம்மினான். சௌந்தர ராகவன் கதறினான். தாரிணியும் வஸந்தியும் பாமாவும்கூடத் துயரத்தின் மிகுதியால் அலறி அழுதார்கள்.

ஆனால் சீதாவின் காதில் அதெல்லாம் விழவில்லை. அவளுடைய உணர்விலும் தோன்றவில்லை.

சீதாவின் உயிர் அநித்தியமான உடலை விட்டுப் பிரிந்தது. ஆகாச வெளியில் மிதந்து சென்றது.

மேலே மேலே மேலே போய்க் கொண்டே இருந்தது. வானவில்லின் வர்ணங்களிலே தோய்ந்து சென்றது. வெள்ளிய மேக மண்டலங்களின் வழியாகப் புகுந்து சென்றது. மந்தமாருதம் ஏந்திக் கொண்டு வந்த சுகந்த பரிமளத்தை முகர்ந்துகொண்டு சென்றது. இனிமையின் எல்லை என்று சொல்லக்கூடிய இசை இன்பத்தை அநுபவித்துக்கொண்டு சென்றது.

சிறிது நேரத்துக்கெல்லாம் தேவலோகத்துப் பாரிஜாத, மந்தார விருட்சங்களின் மலர்கள் போல பொலவென்று உதிர்ந்தன. அவை கீழே விழுந்து விடாமல் சீதாவின் உயிரைச் சுற்றிச் சுழன்று கொண்டே வந்தன.

தங்க நிறமும் ரோஜா நிறமும் மாந்தளிரின் நிறமும் கொண்ட திவ்ய மேனிகளுடனே கந்தர்வ கின்னரர்கள் வான வெளியில் ஆங்காங்கே நின்று "வருக! வருக!" என்று இன்னிசையுடன் வரவேற்றார்கள்.

சீதாவின் உயிர் மேலே மேலே போய்க் கொண்டிருந்தது.

அற்புத சௌந்தர்யம் வாய்ந்த தேவகணங்களின் உருவங்கள் மெல்லிய மேகத் திரைக்குள்ளே மறைந்து மறைந்து காணப்பட்டன.

ஆகா! அந்த உருவங்களில் சிலவற்றைச் சீதாவுக்குத் தெரியும்; நன்றாகத் தெரியும். அதோ லைலாவும் மஜ்னுவும் ஆடிப்பாடிக் கொண்டு போகிறார்கள். அதோ சத்தியவானும் சாவித்ரியும் கைகோத்துக் கொண்டு உலாவுகிறார்கள். இதோ உல்லாசமாய் அன்னப்படகில் மிதந்து செல்கிறவர்கள் ரோமியோவும் ஜூலியத்துமாகவே இருக்கவேண்டும். நளனுக்கும் தமயந்திக்கும் என்ன அவசரமோ தெரியவில்லை! இறகு கட்டிக் கொண்டு அவர்கள் பறக்கிறார்கள். பறந்தால் பறக்கட்டும்; இவர்களையெல்லாம் பார்த்து இப்போது என்ன ஆகவேண்டும்? நாம் பார்க்க விரும்பியது ஸ்ரீமதி கஸ்தூரி பாயை அல்லவா? அவர் எங்கே இருப்பார்?



சொர்க்க லோகங்களி லெல்லாம் மேலான சொர்க்க லோகத்திலேதான் இருப்பார்!—இன்னும் மேலே போக வேண்டியதுதான்.

ஆகா! இது என்ன பிரகாசம்? இது என்ன ஜோதி? தேஜோ மய மான உருவம் ஒன்று எங்கிருந்தோ வருகிறதா? அடடா! அதோ போகி றதே? இவர்கள்,— நம்மைச் சுற்றி நிற்கும் தேவ கந்தர்வ கின்னரர்கள்,—என்ன பேசிக் கொள்கிறார்கள்? மின்னலைப்போல் தோன்றி, கோடி சூரியர்களைப்போல் பிரகாசித்து, ராம பாணத்தைப் போல் விரைந்து செல் லும் வடிவத்தைச் சுட்டிக் காட்டி என்ன சொல்லிக் கொள்கிறார்கள்?— தெரிகிறது, தெரிகிறது! "காந்தி மகாத்மாவின் ஜோதி" என்றல்லவா ஒருவருக் கொருவர் சொல்லிக் கொள் கிறார்கள்? — வான வெளியிலே பொழிந்த நறு மலர்களும், வீசிய மந்த மாருதமும், மிதந்து வந்த தேவகான மும் தேவர் தேவயரின் உபசரிப்பும், —எல்லாம் காந்தி மகாத்மாவுக்காகத் தான் போலும்! நான் பாக்யசாலி தான்; சந்தேகமில்லை. மகாத்மாவின் ஆவி வானுலகம் செல்லும் அதே நாளில் நாமும் இங்கே வரும்படி யான பேறு கிடைத்ததல்லவா?

ஆனால் அவரை விடக்கூடாது; விட் டுப் பிரியக் கூடாது. அந்த ஜோதி போன வழியே போனால் அன்னை கஸ்தூரிபாயைக் காணலாம். காந்திஜி யின் ஆத்மா கஸ்தூரிபாயின் ஆத்மா இருக்கும் இடத்தைத் தேடிக்கொண்டு போகாமல் வேறு எங்கே போகும்?

ஜோதி போன வழியிலேயே சீதா வின் ஆவியும் சென்றது. மேலே மேலே மேலே போய்க் கொண்டே இருந்தது. ஆனால் விரைவில் அந்த ஜோதி போன வழி தெரியாமல் போய் மறைந்து விட்டது.

ஆயினும் சீதாவின் ஆசை நீங்க வில்லை; நம்பிக்கை குன்றவில்லை. வான வெளியிலே போய்க் கொண்டே யிருந் தால் எப்படியும் அந்த ஜோதியைக் கண்டு பிடிக்காமலா போவோம்?

சீதாவின் ஆவி பற்பல உலகங்களை யும் தாண்டிக் கொண்டு சென்றது. நட்சத்திர மண்டலங்களைச் சுற்றி வட்ட மிட்டுக் கொண்டு சென்றது.

ஆகா! எத்தனை உலகங்கள்! எத்தனை சூரியர்கள்! எத்தனை சந்திரர்கள்! எத்தனை நட்சத்திரங்கள்! 'அகிலாண்ட கோடி' என்று சொல்வது எவ்வளவு உண்மை? இவ்வளவையும் தாண்டி அப்பாலே போக முடியுமா? அப்பாலுக்கு அப்பாலே என்பது ஒன்று உண்டா?

உண்டு; அவசியம் உண்டு. அத்தனை அண்டங்களையும் புவனங்களையும் சூரிய சந்திரர்களையும் கணக்கில்லா நட்சத்திர மண்டலங்களையும் தாண்டி வந்தாகி விட்டது. இனி ஒரே நீல நிறத்து வான வெளிதான்! முடிவில்லாத வான வெளி; எல்லையில்லாத நீலநிறம்; ஒன்றுமில்லாத சூனியம்; ஆதியும் அந்தமும் இல்லாத ஆனந்த வெள்ளம்.

சீதா பாக்கியசாலி என்பதைக் குறித்துச் சந்தேகம் என்ன?

அத்தியாயம் 41

சூரியாவின் இதயம்

சூரியா அடிக்கடி ஆத்ம பரிசோதனை செய்து கொள்வதுண்டு. தன்னுடைய வெளி மனம் என்ன நினைக்கிறது, தன்னுடைய அறிவு என்ன முடிவு சொல்லுகிறது, தன்னுடைய இதய அந்தரங்கத்தில் எத்தகைய ஆசை குடி கொண்டிருக்கிறது என்பதை யெல்லாம் அலசி ஆராய்ந்து பார்ப்பான். எந்த விஷயத்திலேனும் மனதில் குழப்பமிருந்தால், மனத்திற்கும் அறிவுக்கும் இதயத்துக்கும் வேற்றுமை இருப்பதாகத் தோன்றினால், அந்த விஷயத்தைப் பற்றித் தீர்க்கமாகச் சிந்தனை செய்வான். தன்னுடைய உணர்ச்சிகளில் உள்ள குழப்பத்தைப் போக்கித் தெளிவுபடுத்திக் கொள்ளும் பொருட்டுச் சில சமயம் அவன் 'டைரி' எழுதுவதும் உண்டு.

பிப்ரவரி மாதம் 10-ம் தேதியன்று சூரியா தன்னுடைய 'டைரி'யில் பின் வருமாறு எழுதத் தொடங்கினான்.

"இன்று சீதாவின் பத்தாவது நாள் கிரியைகள் முடிவடைந்தன. அவளுடைய கணவன் சௌந்தர ராகவன் பக்தி சிரத்தையுடன் வைதிகக் கிரியைகளைச் செய்தான். இத்தனை நாளும் வைதிகத்தில் இல்லாத பற்று திடீரென்று ராகவனுக்கு ஏற்பட்டிருப்பதை நினைத்தால் வேடிக்கையாக இருக்கிறது. ராகவனுடைய சிரத்தையைக் காட்டிலும் வேடிக்கை என்னவென்றால், அந்தப் புண்ணியவதி பாமா காட்டிய வைதிக சிரத்தைதான். சீதாவின் சரமக் கிரியைகளை யெல்லாம் அவள்தான் நடத்திவைத்தாள் என்று சொல்ல வேண்டும். ராகவனுக்கு அது விஷயத்தில் கொஞ்சங்கூடக் கஷ்டமோ கவலையோ ஏற்படாமல் பாமா தன்னுடைய வீட்டிலேயே சகல வசதிகளும் செய்து கொடுத்தாள். சீ! இது என்ன வெட்கக்கேடு! இதுவும் ஒரு மானிட ஜன்மமா? பெண்டாட்டியைப் பறி கொடுத்தவன் கொஞ்ச நாளைக் காவது காத்திருக்கக் கூடாதா? அதற்குள்ளே இப்படி நாலுபேர் பார்த்துச் சிரிக்கும்படி நடந்து கொள்ளவேண்டுமா? பெண்ணைப் பிறந்த அந்தப் பாமாதான் கொஞ்சம் கண்ணியமாக நடந்துகொள்ளக் கூடாதா?

சீதா! இப்பேர்ப்பட்ட இதயமற்ற கிராதகனிடமிருந்து விடுதலையடைந்து நீ போய்ச் சேர்ந்தாயே? யமன் கருணையில்லாதவன் என்று சொல்லுவது எவ்வளவு அறிவீனம்? உன்னை யமதர்ம ராஜன் கொண்டு போனதைப் போல் கருணையுள்ள செயல் வேறு என்ன இருக்க முடியும்?......

சீதா விஷயத்தில் என்னுடைய கடமையைச் சரிவரச் செய்துவிட்டேனா? என் அத்தைக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டேனா?—இந்த எண்ணம் எனக்கு அடிக்கடி தோன்றிக் கொண்டுதானிருக்கும். வாழ்நாள் உள்ளவரையில் அந்தக் கேள்விகள் மனதில் உதயமாகிக் கொண்டுதானிருக்கும். ஆயினும் என்னாலியன்றவரை என் கடமையைச் செய்துதானிருக்கிறேன். என் உயிரைத் திரணமாக மதித்துச் சீதாவைக் காப்பாற்றி யிருக்கிறேன். ஆனால் என்ன பிரயோஜனம்? சீதாவுக்காக நான் செய்த ஒவ்வொரு உதவியும்

அவனுக்கு அபகாரமாகவே முடிந்திருக்கிறது. உண்மையில் அவனுடைய துயர வாழ்க்கைக்குக் காரணமானவன் நானே. சீதாவின் தகப்பனாருடைய தந்தியைமட்டும் அன்று நான் தடுத்து மறைத்திரா விட்டால்,......

சீதாவின் தகப்பனார்,—அத்திப்பேர் துரைசாமி ஐயரின் வாழ்க்கையும்.—முடிந்துவிட்டது! பரிதாபம்! பரிதாபம்!—சீதா பலதடவை சொன்னாளே? அந்தத் துப்பாக்கியை அவர் தூர எறிந்திருக்கக் கூடாதா?—அந்தத் துப்பாக்கியினால் அவருக்குச் சாவு என்று ஏற்பட்டிருக்கும்போது எப்படித் தூர எறிந்திருக்க முடியும்!

ஒருவிதத்தில் பார்த்தால் அவருக்கு இது நல்ல முடிவுதான்! அவருடைய இரு புதல்விகளில் ஒருத்தி செத்துவிட்டாள். இன்னொரு பெண் சாவைக் காட்டிலும் பயங்கரமான கதியை அடைந்திருக்கிறாள். இத்தகைய கொடூரத்தை எந்தத் தகப்பனார்தான் சகிக்க முடியும்? இதற்கெல்லாம் காரணம் தன்னுடைய தீச்செயல்களே என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு செத்துப் போனார். பாவம்! நான் பானிபத் பட்டணத்துக்குப் போவதற்குள்ளே அநாதைப் பிரேத சம்ஸ்காரத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டார்கள். மனிதருக்கு இறந்த பிறகு நல்ல யோகம். காந்தி மகான் காலமான செய்தியைக் கேட்டுத் துக்கம் தாங்க முடியாமல் சுட்டுக்கொண்டு செத்தார் என்று பத்திரிகைகளில் செய்தி வந்திருந்தது. இதுவும் ஒருவிதமான யோகந்தானே!......

சீதா இறந்துவிட்டாள்; துரைசாமி ஐயரும் போய்விட்டார். ஆனால் தாரிணி உயிரோடிருக்கிறாள்.

செத்துப் போனவர்களை மறந்துவிட்டு உயிரோடிருப்பவர்களைப் பற்றிக் கவனிக்க வேண்டும்.

தாரிணி விஷயத்தில் நான் என்னுடைய கடமையைச் செய்யத் தயாராயிருக்கிறேனா? என்னுடைய இதயத்தின் உணர்ச்சியும் உள்ளத்தின் ஆசையும் என் அறிவு சொல்லும் முடிவும் ஒன்றாயிருக்கின்றனவா? தாரிணியிடம், இன்றைக்கு நான் சொன்ன வார்த்தைகள் எல்லாம் சத்தியமானவைதானா? என் இதயத்திலிருந்து உண்மையாகச் சொன்னவைதானா? அல்லது வீம்புக்காகவோ ஜம்பத்துக்காகவோ அவசரப்பட்டுச் சொல்லிவிட்டேனா? இன்று நான் சொன்ன வார்த்தைகளுக்காகப் பிறகு எக்காலத்திலேனும் வருத்தப் படுவேனா?......

காந்தி மைதானத்தில் பழைய இடத்தில் இன்று மாலை நாங்கள் சந்தித்தோம். எங்கள் வருங்கால வாழ்வைப் பற்றிப் பேசினோம். அந்தச் சம்பாஷணையை ஒருவாறு இங்கே எழுதப் பார்க்கிறேன். எழுதிய பிறகு படித்துப் பார்த்தால் ஒருவேளை என்னுடைய பிசகை நானே தெரிந்துகொள்ள முடியும் அல்லவா?

முதலில் கொஞ்ச நேரம் சீதா, துரைசாமி ஐயர் — இவர்களுடைய பரிதாப மரணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

தாரிணி விம்மினாள்; அழுதாள். அவளுடைய கண்ணிலிருந்து கன்னத்தில் வழியும் கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்ற ஆர்வம் என் மனதில் எழுந்தது. ஆனால் அதற்குத் துணிவு வரவில்லை. ஏனெனில் அவள் முகத்தை முகமூடியால் மறைத்துக் கொண்டிருந்தாள். எதற்காக என்று தான் எனக்குத் தெரியுமே! அன்றைக்கு,—சீதாவின் உயிர் பிரிந்த அன்றைக்கு,—ஒரு நிமிஷம் பார்த்தேன்! ஐயோ! அதை நினைக்கவே பயங்கரமாயிருக்கிறது.

ஆயினும் அதனாலே தாரிணியின் விஷயத்தில் என்னுடைய மனம் சிறிதாவது சலித்ததா? ஒரு நாளும் இல்லை. அவளுடைய முகத்தை விகாரப் படுத்துவன வென்று மற்றவர்கள் நினைக்கக் கூடிய காயங்கள் அவளுடைய சௌந்தர்யத்தை அதிகமாக்குகின்றன என்றே நான் எண்ணுகிறேன். சீதா உயிர்விடும் தறுவாயில் அவளுடைய கண்களுக்கு அப்படித் தானே தோன்றியது?

என்றாலும், தாரிணியின் முகமூடியை நீக்குவதற்கோ, கண்களைத் துடைப்பதற்கோ எனக்குத் தைரியம் வரவில்லை. ஒருவாறு விம்மலும் அழுகையும் நின்றபிறகு, 'தாரிணி! எத்தனை நேரம் போனதைப் பற்றியே

வருத்தப் பட்டுக் கொண்டிருப்பது? வருங்காலத்தைப் பற்றி யோசிக்க வேண்டாமா? என்ன செய்வதாக உத்தேசம்?' என்று நான் கேட்டேன். பேச்சை அப்படித் திருப்பினால் அவளுடைய அழுகை நிற்கும் என்பதற்காகத்தான் அவ்விதம் கேட்டேன்.

'எனக்கு ஒரு உத்தேசமும் இல்லை. யோசனை செய்யும் சக்தியும் இல்லை. நீங்கள்தான் ஏதாவது யோசனை சொல்ல வேண்டும். உங்களுடைய வருங்காலத் திட்டம் என்ன?' என்று தாரிணி கேட்டாள்.

'என்னுடைய திட்டத்தை இப்போது எப்படிச் சொல்ல முடியும்? உங்களுடைய உத்தேசம் தெரிந்த பிறகுதான் என்னுடைய திட்டம் தயாராகும்' என்றேன்.

'எந்த விஷயத்தில் என்னுடைய உத்தேசம் தெரிய வேண்டும்? என் தந்தையைப்போல் உயிரை விட்டுவிட எனக்கு இன்னும் தைரியம் வரவில்லை!' என்றாள் தாரிணி.

'உயிரை விடுவதற்குத் தைரியம் வேண்டாம்; உயிரோடிருப்பதற்குத்தான் தைரியம் வேண்டும்' என்று நான் சொன்னேன்.

'அந்தத் தைரியம் எனக்கு வேண்டிய அளவு இருக்கிறது. மேலும், வஸந்தி விஷயமான பொறுப்பு ஒன்றும் எனக்கு இருக்கிறதல்லவா?' என்றாள் தாரிணி.

'வஸந்தி விஷயமான பொறுப்பும் உங்களுக்கு இருக்கிறது. சீதாவுக்கு நீங்கள் கொடுத்த வாக்குறுதியும் இருக்கிறது. தாரிணி! அந்த வாக்குறுதியின்படி நீங்கள் சௌந்தர ராகவனைக் கலியாணம் செய்து கொள்ள விரும்பினால் அதற்கு நான் குறுக்கே நிற்கமாட்டேன்!' என்றேன்.

தாரிணி சிரித்தாள். அந்த நேரத்தில் அவள் அவ்விதம் சிரித்தது எனக்குப் பிடிக்கவில்லை.

'என்னத்திற்குச் சிரிப்பு?' என்று கேட்டேன்.

'நான் விரும்பினால் மட்டும் என்ன பிரயோஜனம்! அதற்குச் சௌந்தர ராகவன் அல்லவா இஷ்டப்பட வேண்டும்?' என்றாள் தாரிணி.

'இது என்ன பேச்சு? உங்களை விரும்பி மணந்துகொள்ள இஷ்டப்படாத மூடன் இந்த உலகத்தில் யார் இருக்கமுடியும்?' என்றேன்.

'சூரியா! நீங்கள்கூட இப்படிப் பொய் வார்த்தை சொல்லுவது எனக்கு அதிசயமாயிருக்கிறது. இந்த முகமூடியை நீக்கி என் முகத்தின் கோர ஸ்வரூபத்தைப் பார்த்த யார்தான் என்னை மணந்து கொள்ளத் துணிவார்கள்? சௌந்தரராகவனாகட்டும், வேறு யார்தான் ஆகட்டும்!' என்றாள் தாரிணி.

'மன்னிக்க வேண்டும், தாரிணி! சௌந்தர ராகவனுடைய சுபாவம் தெரிந்தும் நான் அவ்விதம் எதிர்பார்த்தது பிசகுதான்!' என்றேன்.

'அவரை மட்டும் சொல்வானேன்! இந்த உலகத்தில் பிறந்த எந்தப் புருஷனும் இப்படிப்பட்ட கோரமுகம் உடையவளைக் கலியாணம் செய்து கொள்ள மாட்டான்' என்றாள்.

'நிறுத்துங்கள், தாரிணி! அப்படிச் சொல்லவேண்டாம். சௌந்தர ராகவனோடு எல்லாரையும் சேர்த்து விட வேண்டாம். ராகவனுக்கு முகத்தின் அழகு ஒன்றுதான் தெரியும்; அகத்தின் அழகைப் பற்றி அவன் அறிய மாட்டான். உண்மைக் காதல் என்பது இன்னதென்றும் அவனுக்குத் தெரியவே தெரியாது. ஆக்ரா கோட்டையில் அக்பர் சக்கரவர்த்தியின் அரண்மனையில் உங்களை முதன் முதலில் பார்த்ததிலிருந்து நான் உங்களைக் காதலித்து வருகிறேன். ஆனால் உங்கள் முகத்தை நான் காதலிக்கவில்லை; உங்களைக் காதலிக்கிறேன்!' என்று ஆவேசமாகப் பேசினேன்.

தாரிணி சற்று மௌனமாயிருந்தாள். பிறகு, 'சூரியா! உங்களுடைய காதலைப் பற்றி எனக்கு எப்போதும் சந்தேகம் இல்லை. ஆனால் காதல் வேறு; கல்யாணம் வேறு. கலியாணம் என்றால் புருஷன் மனைவியின் கரம் பிடிக்க வேண்டும் அல்லவா? பிடிப்பதற்குக் கை இல்லாவிட்டால்......?' என்றாள்.

நான் குறுக்கிட்டு, 'ராகவனுக்கு அது ஒரு தடையாயிருக்கலாம். கை கோத்துக்கொண்டு 'பார்ட்டி'களுக்குப் போக முடியாததை எண்ணி அவன் கலியாணம் வேண்டாம் என்று சொல்லலாம். ஆனால் என் விஷயத்

தில் அது ஒரு தடையாகாது. கரம் பிடிப்பதுதான் கலியாணம் என்று நான் கருதவில்லை. மனம் பிடிப்பது தான் கலியாணம். நம் இருவருடைய மனமும் ஒத்திருப்பது போல் வேறு எந்தத் தம்பதிகளின் மனமும் ஒத்திருக்கப்போவதில்லை. வேறு என்ன தடை? நீங்கள் சொல்ல வேண்டியதுதான்; உடனே கலியாணத்துக்குத் தேதி குறிப்பிட்டு விடலாம்!' என்றேன்.

உணர்ச்சி மிகுதியினால் தொண்டை அடைக்க, ஆனந்த மிகுதியினால் நாத் தழுதழுக்க, தாரிணி, 'சூரியா! உங்களைப் போன்ற உத்தமர் ஒருவர் இந்த உலகத்தில் இருக்கிறார் என்பதை நினைக்கும்போது எனக்கும் இந்த உலகத்தில் உயிரோடிருக்கலாம் என்ற ஆசை உண்டாகிறது. உங்களுடைய உயர்ந்த நோக்கத்தை நன்கு அறிந்து கொண்டேன். ஆயினும் யோசனை செய்வதற்கு எனக்குச் சிலநாள் அவகாசம் கொடுங்கள்!' என்று சொன்னாள். பிறகு இருவரும் பிரிந்தோம்.

* * *

மேலே நான் எழுதியிருப்பதையெல்லாம் இன்னொருதடவை படித்துப் பார்த்தேன். தாரிணியிடம் நான் கூறிய வார்த்தையெல்லாம் உண்மைதானா என்று சிந்தித்தேன். என் இருதயத்தின் ஆழத்தை எட்டிச் சோதனை செய்து பார்த்தேன். சந்தேகமே இல்லை. தாரிணியிடம் நான் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் உண்மைதான். அவளிடம் நான் கொண்ட காதலுக்கு ஆதி அந்தமில்லை; அழிவில்லை, முடிவில்லை. அது உடம்பைப் பற்றிய காதல் அல்ல; முகத்தையோ நிறத்தையோ பற்றிய காதல் அல்ல; மனதுக்கு மனம் கொள்ளும் காதல் அல்ல. இரண்டு ஆத்மாக்கள் இதயாகாசத்தில் ஒன்று சேரும்போது ஏற்படும் புனிதமான தெய்வீகக் காதல். எங்களுடைய காதலுக்கு ஒப்புமில்லை; உவமையும் கிடையாது.

சீதாவின் பேரிலும் முதல் தடவை அவளை நான் பார்த்த நாளிலிருந்து எனக்கும் பாசம் ஏற்பட்டது உண்மை தான். அதற்கும் இதற்கும் எவ்வளவோ வித்தியாசம். சீதாவுக்காக நான் என் உயிரைக்கொடுக்கத் தயாராயிருந்தேன். ஆனால் என் இதயத்தை அவளுக்குக் கொடுக்கத் தயாராயில்லை. சௌந்தர ராகவனிடம் வந்த கோபத்தினால் சில சமயம் சீதாவின் விடுதலைக்கு நான் விசித்திரமான சாதனங்களை எண்ணியதுண்டு. "விவாகப் பிரிவினை செய்வித்துச் சீதாவை நான் கலியாணம் செய்துகொண்டால் என்ன?' என்ற அசட்டு எண்ணம் ஒரு தடவை உண்டாயிற்று. அதை மனம் விட்டு அத்திம்பேரிடங்கூட ஒரு தடவை சொல்லிவிட்டேன். ஆனால் என் மனதில் ஒரு லவலேசமும் சீதா விஷயத்தில் களங்கம் ஏற்படவில்லை. இது சௌந்தர ராகவனுக்கும் நன்றாய்த் தெரியும். ஆகையினால்தான் அவனுக்குச் சீதாவும் நானும் நெருங்கிப் பழகுவதில் கோபம் உண்டாவதேயில்லை. தாரிணிக்கும் எனக்கும் சிநேகம் என்பது பற்றித்தான் அவன் குரோதம் கொண்டான். அந்தக் கோபத்தினால் என்னைக் கொன்று விடவும் போலீஸாரிடம் என்னைப் பிடித்துக் கொடுத்து விடவும் யத்தனித்தான்.

அவனுக்கு இப்போது படுதோல்வி தெய்வாதீனமாக நேர்ந்துவிட்டது. உடலழகு ஒன்றையே கருதும் அந்தச் சுயநலம் பிடித்த தூர்த்தன் இனி என்னுடன் போட்டியிட முடியாது. அவனுடைய காதல் எல்லாம் வெறும் பொய் என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. அவன் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். அந்தப் பாமாவையே அவன் கட்டிக்கொண்டு அழட்டும்!

தாரிணி இனிமேல் என்னுடையவள்; எனக்கே அவள் முழுதும் உரியவள். என்னிடமிருந்து இனி யாரும் அவளை அபகரிக்க முடியாது.

இதை நினைத்தால் எனக்குக் குதூகலமாய்த்தானிருக்கிறது. சீதா இறந்ததையும் அவள் தகப்பனார் சுட்டுக்கொண்டு செத்ததையும் நினைக்கும்போது கஷ்டமாயிருந்தாலும், தாரிணி எனக்கே உரியவளாகிவிட்டாள் என்பதை நினைத்தால் உற்சாகம் உண்டாகிறது.

கலியாணத்துக்குத் தேதி குறிப்பிட வேண்டும்; காஷ்மீருக்குப் போக ஏற்பாடு செய்ய வேண்டும்."

(அடுத்த இதழில் முடியும்)

ஆஸ்தான கவிஞர்

பகீரதன்

சென்ற ஆகஸ்டு மீ 24உ யன்று அகஸ்தியரும், வள்ளுவரும், கம்பரும், இளங்கோவடிகளும் வானுலகில் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். அந்தச் சமயத்தில் 'தமிழ் வாழ்க!' என்று ஒரு குரலோசை கேட்டது. எல்லோரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர். தலையில் பஞ்சாபிய சிப்பாயைப் போன்ற முண்டாசும் கையில் துப்பாக்கியைப் போல ஒரு தடியையும் பிடித்துக்கொண்டு முறுக்கிவிட்ட மீசையுடனும் ஒளிவீசும் கண்களுடனும் கம்பீரமாக ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

"ஓகோ! பாரதியாரா? என்ன இன்றைக்கு என்றுமில்லாத உற்சாகம்?" என்று கேட்டார் அகஸ்தியர்.

"பூலோகத்திலிருந்து யாராவது புதிதாய் வந்திருப்பார்கள். அவர்கள் தமிழ்நாட்டில் ஏதாவது தமிழ் விழா நடைபெறுகிறது என்று சொல்லியிருப்பார்கள். உடனே நம் பாரதியாருக்கு உற்சாகம் பொங்கி வந்திருக்கும்!" என்று கம்பர் சொல்லிவிட்டுக் கடகட வென்று சிரித்தார்.

"கவிச் சக்கரவர்த்தி கம்பரே! நீர் வாழ்ந்த காலத்தில் தமிழ் விழா என்பது அதிசயமாக இராது. நான் தமிழ்நாட்டில் வாழ்ந்தபோது தமிழர்கள் பாமரராய், விலங்குகளாய், பான்மை கெட்டு, செவிடர்களாய், குருடர்களாய் வாழ்ந்தார்கள். அப்படியிருந்த தமிழர்கள் இன்று நமது பரம்பரையில் வந்த ஒரு தமிழ்க் கவியை அவருடைய ஜீவிய காலத்திலேயே பாராட்டப் போகிறார்களாம். உடனே புறப்படுங்கள்; தமிழகத்துக்குப் போய்வரலாம்" என்றார் பாரதியார்.

"நமது தெய்வத் தமிழ்நாட்டுக்குப் போய் வருவதில் எனக்கு ஒரு ஆட்சேபணையும் இல்லை!" என்று சொல்லிக் கொண்டு கம்பர் புறப்பட, எல்லாரும் கிளம்பினார்கள்.

அகஸ்தியரும், கம்பரும், வள்ளுவரும், இளங்கோவடிகளும், பாரதியாரும் வான வீதி வழியாகத் தமிழ்நாட்டைச் சுற்றிக் கொண்டு வருகையில், தியாகராஜ நகரத்தின் ராமகிருஷ்ணா உயர்தரப் பாடசாலைக்கு மேலே வந்தார்கள். "தமிழன் என்று சொல்லடா! தலைநிமிர்ந்து நில்லடா!" என்ற கோஷம் காதில் விழுந்தது. அங்கேயே நின்று ராமகிருஷ்ணா உயர்தரப் பாடசாலையின் மண்டபத்துக்குள் ஒருவருக்கும் தெரியாமல் வந்து பார்த்தார்கள்.

அந்த மண்டபத்துக்குள் ஜனங்கள் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக நெருக்கியடித்துக்கொண்டு வீற்றிருந்தனர். ஹாலைச் சுற்றியிருந்த வராந்தாவில் ஒருவரையொருவர் முண்டியடித்துக்கொண்டும் தலையோடு தலை மோதிக்கொண்டும் நின்று கொண்டிருந்தனர். மண்டபத்துக்கு வெளியிலேயோ ஆயிரக்கணக்கான ஜனங்கள் நின்று தெருவெல்லாம் பெருகிய தமிழ் முழக்கத்தைக் கேட்டுக்கொண் டிருந்தனர்.

விதம் விதமான புஷ்பங்களால் அலங்காரமாக அமைக்கப்பட்டிருந்த விமானத்தின் மத்தியில் போட்டிருந்த சிம்மாசனங்களில் மகாராஜா பட்டமகிஷியுடன் வீற்றிருப்பது போல இருவர் உட்கார்ந்திருந்தனர்.

"பாரதியாரே! அதோ அந்தப் புஷ்பரதத்துக்குள் அமர்ந்திருப்பவர்கள் யார்?" என்று கேட்டார் கம்பர்.

"அவர்தான் நமது பரம்பரையில் வந்த நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை. இவரைப் பார்த்துத்தான் நான் ஒரு தடவை 'பாண்டியா! உனக்குப் பாடல் வருகிறது!' என்று சொன்னேன். அது பலித்து விட்டது!" என்றார் பாரதியார்.

"உம்முடைய வாக்குப் பலிக்காமல் போகுமா?" என்றார் அகஸ்தியர்.

"இந்தக் கூட்டம் எதற்காகக் கூடியிருக்கிறது?" என்றார் கம்பர்.

"தங்களுக்குச் சோழ மன்னரும், சேர மன்னரும் சபை கூட்டிப் பொன்னாடை போர்த்தியதாகச் சொல்வீர்களே, அது போல இன்று தமிழ்நாட்டுப் பொது மக்கள் மகாநாடு கூட்டி நாமக்கல் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்துப் பாராட்டப் போகிறார்கள்" என்றார் பாரதியார்.

பிறகு அகஸ்தியரும், வள்ளுவரும் கம்பரும், இளங்கோவடிகளும், பாரதியாரும் ஆஸ்தான கவிஞர் விழாவில் அந்தர்யாமிகளாகக் கலந்துகொண்டு ஆனந்தித்தார்கள்.

* * *

பாரதியார் சங்கத்தின் ஆதரவில் மேற்படி வைபவம் நடந்தது. கல்கி ஆசிரியர் தலைமை வகித்தார்.

"ஆகஸ்டு மாதம் 14உ யன்று சென்னை சர்க்கார் ஆஸ்தான கவிகளைப் பாராட்டுவதற்காக ராஜாஜி ஹாலில் ஒரு விழா நடத்தினார்கள். அந்த விழா கொஞ்சம் இரகசியமாகவே நடந்தது. மந்திரி பிர



ஆஸ்தான கவிஞருக்கு அரும்புலவர் பொன்னாடை போர்த்துகிறார்.

தானிகன், ஜட்ஜுகள் புடை சூழக் கவர்னர் பவநகர் ராஜாவும் ராணியும் நடுநாயகமாக மேடைமீது வீற்றிருந்தார்கள். மேடைக்குக் கீழே ஆஸ்தான கவிகளை உட்கார வைத்திருந்தனர். ஒவ்வொரு கவியின் பெயரையும் சொல்லி ஆள் காட்டி விரலை ஆட்டிக் கூப்பிட்டதும் கவிஞர்கள் மேடைக்கு வந்தார்கள். அந்த விழாவிற்குப் புலவர்கள் வந்திருக்கவில்லை; கவிகளைக் காண முடியவில்லை; எழுத்தாளர்களையும் ரசிகர்களையும் தேடினாலும் அகப்படவில்லை; தேச பக்தர்கள் திரண்டு வரவில்லை. இதைப் பார்த்த பிறகுதான் கவிஞரையும் அவருடைய பத்தினியையும் இங்கே புஷ்ப விமானத்தின் கீழ் சிம்மாசனத்தில் அமர்த்திப் பாராட்டுகிறோம். எழுத்தாளர்களுக்குள்ளே சிறந்த எழுத்தாளராய், புலவர்களுக்குள்ளே பெரிய புலவராய், ஆசிரியர்களுக்குள்ளே தலைசிறந்த ஆசிரியராய், காந்தி மகானின் பரமபக்தராய் உள்ள திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களைக் கொண்டு நம் காந்தியக் கவிஞருக்குப் பொன்னாடை சூட்டிப் பாராட்டுகிறோம்" என்று விழாத் தலைவர் கல்கி ஆசிரியர் சொன்னபோது மண்டபம் அதிரும்படி மக்கள் கரகோஷம் செய்தனர்.

வேறு பல காரியங்களில் தமிழர்களிடையே வித்தியாசங்கள் பல இருந்த போதிலும் கவிஞரைப் பாராட்டுவதில் அவர்கள் வேற்றுமை பாராட்டவில்லை என்பதை அன்று வந்திருந்த புலவர்களும், பத்திரிகை ஆசிரியர்களும், எழுத்தாளர்களும், தேச பக்தர்களும், கவிகளும், ரசிகர்களும், ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் குதூகலமாக நிரூபித்துக் காட்டினார்கள். ஐந்தரை மணிக்கு ஆரம்பிக்கவேண்டிய விழாவுக்கு ஜனங்கள் நாலரை மணியிலிருந்தே வந்து கூடிவிட்டனர். ஐந்தரை மணி சுமாருக்குக் கவிஞர் மேடைக்கு வந்த போது ஜனங்கள் கவிஞர்மீது பூமாரி பெய்து தங்கள் அன்பைக் காண்பித்துக் கொண்டனர்.

வயது முதிர்ந்த காலத்திலும் திரு. வி. க. அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் தமக்கே உரிய தனித் தமிழில் அணி அணியாக வார்த்தைகளைக் கொட்டி அற்புதமாகப் பேசினார். "நாமக்கல் கவிஞரின் மேன்மை அவருடைய பேச்சிலும், எழுத்திலும், செய்கையிலும் மிளிர்ந்து கொண்டிருக்கும் சாந்தத்தில் இருக்கிறது. வெறியைச் சமனப்படுத்தும் தன்மை கவிதைகளுக்கு உண்டு. சாந்தமும் சமாதானமும் சேர்ந்ததுதான் தமிழ்மொழியும் தமிழ்க் கவிஞரும். நாமக்கல் கவிஞர் எப்பொழுதும் காந்தியடிகளைப் பற்றியே சிந்தித்துக் கவி பாடுகிறார். அவருக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்" என்று கூறிவிட்டு, தகத்தகவென்று கண்ணைப் பறித்துக் கொண்டிருந்த பொன்னாடையைப் பிரித்து தம்முடைய நடுங்கும் கைகளினால் நடுங்காமல் போர்த்தினார் ராயப்பேட்டை முனிவர். அந்தச் சமயத்தில் நாலா பக்கத்திலிருந்தும் மக்கள் மலர்களைத் தூவினர். சங்கம் முழங்கியது. மேளம் ஒலித்தது. 'தமிழ் வாழ்க!' என்று கோஷமிட்டு மக்கள் குதூகலப்பட்டனர். கவிஞர் தம் தர்மபத்தினியுடன் திரு. வி. க. வை நமஸ்கரித்தார். அவரும் கவிஞரை வாழ்த்தி நெற்றியில் திருநீறு பூசி ஆசீர்வதித்தார். பிறகு கவிஞர் சபைக்குத் தம்முடைய வணக்கத்தைத் தெரிவித்துவிட்டுப் பொன்னாடை பளபளக்கப் பொங்கிவரும் சந்தோஷம் முகத்தில் பிரதிபலிக்க ஆசனத்தில் அமர்ந்தார்.

கவிஞரைப் பாராட்டுவதில் ஆண்களுக்குப் பெண்கள் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிப்பதற்காக லேடி வெல்லிங்டன் காலேஜின் விஞ்ஞானப் பேராசிரியையான ஸ்ரீமதி ராஜேஸ்வரி அம்மாள் முன் வந்தார். அவர் மேடைமீது வந்தவுடனே ஜனங்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க அடித்துவிட்டு ஆஸ்தான கவிஞருக்குத் தன் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டார்.

பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ எ. எஸ். ஞானசம்பந்தமும், தமிழ் எழுத்தாளர்கள் சார்பில் பெரிய பிரசண்டவிகடன்

ஆசிரியர் ஸ்ரீ நாரண துரைக்கண்ணனும் கவிஞரை வாழ்த்தினார்கள்.

ஆஸ்தான கவிகளுக்குச் சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாக்களில் தனி இடம் கொடுத்துக் கௌரவிக்கவேண்டும் என்று சொன்ன ஸ்ரீ சிவஞான கிராமணியாரின் யோசனையை ஜனங்கள் கரகோஷத்தின் மூலம் வரவேற்றனர்.

“வெல்லப் பிள்ளையாருக்கு அந்தப் பிள்ளையாரிலிருந்தே கொஞ்சம் கிள்ளி எடுத்து நைவேத்தியம் செய்வதுபோல் நாமக்கல் கவிக்கு என்னுடைய பாராட்டுதலை ஒரு பாட்டின் மூலமாகவே சொல்லப் போகிறேன்” என்று கூறி ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்பு பின்வரும் பாமாலையைச் சூட்டினார்:-

“கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுதென்ற
கவிஞனுக்குக் கவியில் மாலை—சூடுவோம்

சத்தியத்தின் பேர்விளங்க
சங்கநாதம் செய்துவந்த
தமிழனுக்குத் தமிழ்மாலை—போடுவோம்

ஆடுராட்டே என்ற பாட்டை
பாடும் வாய்க்குச் சீனியாலே
லாடுபண்ணிப் போட எண்ணுறேனையா!

நாடுநாட்டை என்று சொல்லிப்
பாடும் நாட்டுப் பாவலர்க்கு
மாடுமந்தை ஓட்ட எண்ணுறேனையா!

(நீங்கள்) எழுத்தெழுத்தாச்
சேர்த்துச் செய்த பாடலைப்போலே
(நாங்கள்) இழையிழையாக்
கோர்த்து நெய்த ஆடையினலே
எதுகைமோனை முடிவு பார்த்துப்
பாடினப் போலே
இருபுறமும் சரிகையுள்ள
ஆடையினலே

போற்றிப்போற்றி நாட்டைக் காத்த
புலவனுன்னையே

போற்றிப்போற்றி வாழ்த்தியே பொன்
னுடை போர்த்துறோம்.”


“தலைவர் ராஜாஜியின் தலைமையில் நடந்த உப்பு சத்தியாக்கிரகத்தில் அடியேனும் ஈடுபட்டேன் என்பதை விளம்பரப் படுத்திக்கொள்வதற்காக வரவில்லை. அந்தச் சமயத்தில் நாமக்கல் கவிஞரின் வழி நடைப் பாட்டான ‘கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது’ என்ற பாட்டானது அந்த இயக்கத்துக்கே உயிரூட்டுவதாக இருந்தது என்பதைச் சொல்வதற்காகவே வந்தேன்” என்று தினமணி ஆசிரியர் ஸ்ரீ ஏ. என். சிவராமன் ஆஸ்தான கவிஞரின் கீர்த்தியை விளம்பரப்படுத்தினார்.

டாக்டர் மு. வரதராசனும் சித்தனை ஆசிரியர் ஸ்ரீ சீனிவாசராகவனும் நாமக்கல் கவிஞரின் கவி நயங்களைப் பாராட்டிக் கவிஞருக்குப் பல்லாண்டு கூறினர்.

‘தமிழன் என்று சொல்லடா!’ என்று மார்பைத் தட்டிக்கொண்டு சொற்பொழிவாற்றினார் ஸ்ரீ மீனாட்சிசுந்தரனார்.

“நான் பேசாமல் எந்த விழாவும் சிறக்காது” என்று கூறிச் சென்னை நகரத்திலிருக்கும் 15 லட்சம் ஜனத் தொகையுடன்

பொன்னுடை போர்த்தும் வைபவத்தைப் பார்க்கக் கூடியிருந்த ரசிகர் மகாசபை.





ஆஸ்தான கவியும் அவருடைய வாழ்க்கைத் துணைவியும் குழந்தைகளும்.

வருவோர் போவோரான இரண்டு லட்சம் ஜனங்களையும் சேர்த்துப் பதினேழு லட்சம் ஜனங்களின் சார்பாக மேயர் ஸ்ரீ ராமசாமி நாயுடு கவிஞரைப் பாராட்டினார்.

தமிழர்கள் தமக்கு அளித்த கௌரவத்தைக் கவிஞர் எப்படிப் பாராட்டினார் என்பது அவருடைய குரலிலேயே தொனித்தது.

" அகர முதல எழுத்தெல்லாம்
ஆதிபகவன் முதற்றே உலகு "

என்ற கடவுள் வணக்கத்துடன் பேச ஆரம்பித்தார். தாம் இன்று இத்தனை கௌரவத்துக்கும் உரியவனானது தற்பொழுது கவர்னர் ஜெனரலாக இருக்கும் ராஜாஜி அவர்கள் ஆரம்ப முதல் தமக்கு அளித்து வந்த ஆதரவினாலேயே என்று தமது முன்னுரையில் தெரியப்படுத்தினார்.

" தமிழ்த் தாயின் பெயரால் இந்தத் தெய்வ மகா சபையில் பொன்னாடை போர்த்தி என்னைக் கௌரவித்தது என்று முன் தமிழ்த் தெய்வத்துக்குப் பூட்டுகின்ற பொன்னாடையாகவும் எனக்கு முன்னே வாழ்ந்து பாடி வழிகாட்டிச் சென்றுள்ள தமிழ்ப் புலவர்களின் அமர சபைக்குச் சூடிய பொன்னாடையாகவுமே நான் நினைக்கிறேன். மகா கவி பாரதியின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் புராதன கவிகளின் லட்சியங்களின்படி நான் நடக்க முயன்று வந்திருக்கிறேன்" என்று கூறியபோது ஆஸ்தான கவிஞரின் குரல் தழுதழுத்தது.

" கவிஞர்களை எந்த யுனிவர்ஸிடிகளும் உற்பத்தி செய்து விட முடியாது. பிறக்கும்போதே பராசக்தியின் அருளுடன் பிறக்கிறவர்கள் தான் கவிஞர்களாக முடியும். ஆகையால் சர்க்கார் நாமக்கல் கவிஞரை ஆஸ்தான கவியாக ஐந்து வருஷத்துக்கு மட்டும் நியமித்திருப்பதை மாற்றிவிட வேண்டும். கவிஞரின் ஆயுள் பூராவும் அவர் ஆஸ்தான கவிஞராக இருக்க வேண்டியது தான். வேறு புதுப் புது ஆஸ்தான கவிகளை வேண்டுமானால் அவ்வப்போது நியமித்துக் கொள்ளட்டும். கவிகளுக்குக் கொடுக்கும் ஆயிரம் ரூபாய் வருஷ சன்மானத்தினால் தமது சர்க்காருக்குப் பெரிய கஷ்டம் ஒன்றும் வந்துவிடாது " என்று விழாத் தலைவர் கல்கி ஆசிரியர் தமது முடிவுரையில் கூறியதைச் சபையோர் மிகுந்த குதூகலத்துடன் வரவேற்று ஆமோதித்தனர்.

இடையிடையே கவிஞரின் பாடல்களைப் பாடிக் காட்டிச் சபை நடவடிக்கைகளின் விறுவிறுப்பை மங்காது காத்து வந்த ஸ்ரீ சின்ன அண்ணாமலை கடைசியில் ' சங்கநாதம் கேட்குது ' என்ற பாட்டைப் பாடினார். அப்பொழுது சபையோர் உற்சாக மிகுதியால் தாளம் போட்டு மகிழ்ந்தனர்.

" படையாமல் உண்ணும்
தமிழ் நாடு வாழ்க !
பகை யாரும் எண்ணாத
தமிழ் நாடு வாழ்க !
அடையாத துன்பங்கள்
அவை வந்தபோதும்
அநியாயம் எண்ணாத
தமிழ் நாடு வாழ்க ! "

என்ற வாழ்த்துப் பாடல் சபை கலைந்து போகும் போது எல்லோருடைய காதிலும் ரீங்காரம் செய்துகொண்டிருந்தது.

புகையிலைத் தொழிலுக்கு ஆபத்து

ரஜனி


கொழும்பு, 24—8—49

வட இலங்கைத் தமிழர்களுக்கு ஜீவ நாடியாயிருக்கும் புகையிலைப் பயிர்த் தொழில் க்ஷீணதசை யடைந்திருப்பதைப் பற்றிச் சென்ற வாரம் மிகுந்த கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் வர்த்தகமும் கைத்தொழிலும் சுபிட்சமாக நடந்து குபேர பூமியாக விளங்கிய யாழ்ப்பாணத்திலே வறுமையும் வியாதியும் இன்று தாண்டவமாடுவதென்றால், அது பெருமை யடையக் கூடிய நிலைமை யல்ல. புகையிலைத் தொழில் ஒன்றுதான் வட இலங்கையிலும் கீழ் மாகாணத்திலுமுள்ள தமிழ் விவசாயிகளுக்கு ஜீவனோபாயம் அளித்து வருகிறது. அந்தத் தொழிலுக்கும் ஆபத்து உருவாகி வருவது தமிழர்களுக்குக் கலக்கத்தை உண்டுபண்ணி யிருக்கிறது.

சென்ற வாரம் யாழ்ப்பாணம் முனிசிபல் விசேஷக் கமிட்டி, சுருட்டு உற்பத்தியாளர்களை ஒரு மகாநாடு கூட்டி நிலைமையை ஆராய்ந்தது. இந்தியாவிலிருந்து ஏராளமான பீடியும் மட்ட ரக பீடிப் புகையிலையும் இறக்குமதியாவதுடன் கள்ளத்தனமாகக் கடற் சுங்க வரி கொடாமலும் புதுச்சேரி—காரைக்கால் வழியாக பீடிப்புகையிலை பெருவாரியாக இங்கு வருகிறது. இலங்கைப் புகையிலையை ஏராளமாக வாங்கி வந்த திருவாங்கூரும் கொச்சியும் உள் நாட்டிலேயே புகையிலைச் சாகுபடியை அதிகரித்துக்கொண்டு அதற்குப் பாதுகாப்பளிப்பதற்காக இலங்கைப் புகையிலைக்கு அதிகத் தீர்வை விதிக்க உத்தேசித்திருக்கின்றன. இலங்கையில் கட்டுப்பாடு இல்லாமல் எல்லோரும் சுருட்டு உற்பத்தியி லிறங்குவதனால் சுருட்டின் தரம் குறைந்து சுருட்டு உபயோகிப்பவர்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. இதுமாதிரிப் பல காரணங்களினால் யாழ்ப்பாணப் புகையிலைத் தொழில் ஏக காலத்தில் பாதிக்கப்பட்டு ஏராளமான புகையிலை விலை போகாமல் தேங்கிக் கிடக்கிறது. ஏராவூர் என்ற ஒரு ஊரில் மட்டும் இருபது லட்சம் ரூபாய் மதிப்புள்ள புகையிலை பண்டகசாலைகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளதாம். பிரதம மந்திரி ஸ்ரீ சேனநாயகா கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்யும்பொழுது புகையிலை உற்பத்தியாளர்கள் இதைப் பற்றி அவரிடம் முறையிடத் தீர்மானித்திருக்கிறார்கள்.

இதற்கிடையில் இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் பீடி, பீடிப் புகையிலை ஆகியவற்றிற்கு ஒரு கோட்டா முறையை ஏற்படுத்தி, தீர்வையையும் உயர்த்த வேண்டுமென்றும், உள்நாட்டில் சுருட்டு உற்பத்திக்கு லைசென்ஸ் முறையை ஏற்படுத்தி மட்டரக சுருட்டு உற்பத்தியைத் தடுக்க வேண்டுமென்றும் சுருட்டுத் தொழிலுக்கு அரசாங்கம் வேறு பல உதவிகளையும் செய்ய வேண்டுமென்றும் யாழ்ப்பாணத்தில் கூடிய மகாநாடு இலங்கை சர்க்காரை வேண்டிக் கொண்டுள்ளது.

கல்வி பயின்ற இலங்கைத் தமிழர்களுக்கு முன்பெல்லாம் கொழும்பிலும் மலாயாவிலும் நல்ல வேலைகள் கிடைத்து வந்தன. ஆயிரக் கணக்கில் தமிழர்கள் மலாயா நாட்டுக்குச் சென்று குடியேறினார்கள். இன்று இலங்கையில் கல்வி பயின்றவர்களுக்கிடையில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து விட்டதோடு, மலாயாவிலும் இலங்கையர்களை நாடுவோர் இல்லை. இத்துடன் புகையிலைத் தொழிலும் நசித்து வருவதால் ஒரு பெரிய பொருளாதார நெருக்கடி தமிழர்களுக்கு



பேரன்:—என் பாட்டி! நீதான் ஸ்ரீ ஜெயந்திக்குப் பண்ணின சீடையெல்லாம் தின்னுட்டியாமே? அது வாஸ்தவந்தானா?


ஏற்படவிருக்கிறதென்றும் விவசாயத்தில் கவனம் செலுத்தினால்தான் இந்த நெருக்கடியைச் சமாளிக்க முடியுமென்றும் யாழ்ப்பாணம் சர்க்கார் உதவி ஏஜண்டு ஒரு பலமான எச்சரிக்கையை விடுத்திருக்கிறார். தென்னிலங்கையில் சிங்கள கிராமவாசிகளுக்கு இலவசமாக நிலமும் விவசாயக் கருவிகளும் பண உதவியும் கொடுத்து விவசாயத் தொழிலில் ஈடுபடச் செய்ய அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய்களை இது வரையில் செலவிட்டிருக்கிறது. இதே போல வட இலங்கையில் தரிசாகக் கிடக்கும் நிலங்களை உடனே சர்வே செய்ய வேண்டுமென்றும் அவற்றில் தமிழ்க் குடியானவர்களுக்கு இலவசமாக நிலமும் விவசாயக் கருவிகளும் கொடுத்து குடியேற்ற வேண்டுமென்றும் பார்லிமெண்டில் கோரப்பட்டும் இதுவரை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. இவ்விஷயத்தில் இனியும் அரசாங்கம் தாமதிப்பது பழிச் சொல்லுக்கே இடமளிப்பதாயிருக்கும்.

ராஜினாமாக் கோரிக்கை

சென்ற வாரம் தமிழ் காங்கிரஸ் ஜில்லாக்கமிட்டி ஆதரவில் யாழ்ப்பாணத்திலே ஒரு பிரம்மாண்டமான பொதுக்கூட்டம் நடந்தது. அக்கூட்டம் மந்திரி ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் பரிபூரண நம்பிக்கை தெரிவித்ததோடு தமிழ் காங்கிரஸில் கலாட்டா செய்து வரும் ஸ்ரீ செல்வநாயகம், ஸ்ரீ வன்னியசிங்கம் ஆகிய இருவரையும் காங்கிரஸிலிருந்து வெளியேறிவிட வேண்டுமென்றும் அவர்களிருவரும் பார்லிமெண்டு அங்கத்தினர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்ய வேண்டுமென்றும் செப்டம்பர் 4ம் தேதி காங்கிரஸின் பொதுச் சபை கூட வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதே சமயத்தில் டாக்டர் நாகநாதன், செல்வநாயகம் முதலியோர் கொழும்பில் காங்கிரஸ் காரியக் கமிட்டியைக் கூட்டி யாழ்ப்பாணம் ஜில்லாக் கமிட்டியை 'ஸஸ்பெண்டு' செய்திருக்கிறார்கள். செப்டம்பர் 4ம் தேதி காங்கிரஸ் பொதுச் சபை கூடி முடிவு செய்வது அநேக இலங்கைத் தமிழர்களுக்கும் அதி முக்கியமானதாயிருக்கும். காங்கிரஸில் இரு போட்டி முகாம்களைச் சேர்ந்தவர்களும் ஒருவரை யொருவர் பத்திரிகைகளிலும் பொது மேடைகளிலும் ஏசுவது தமிழர் அனைவரையுமே தலைகுனியச் செய்கிறது. சிங்களவர்களுக்கு இது கொண்டாட்டமாயிருக்குமென்பதைச் சொல்லத் தேவையில்லை. இந்த நிலைமை நீடிக்கத் தமிழர்கள் நிச்சயம் இடமளிக்கக் கூடாது.

நாகரிகம் முற்றுகிறது!





மழைக்காலம்

எக்ஸிமா

"உடனேயே நிவாரணமடைகிறது"

என்கிறார் கெமிஸ்டு



"கால்களில் எரிச்சலளித்து வந்த எக்ஸிமாவை உங்கள் அற்புதமான தயாரிப்புதான் உடனே நிவாரணமளித்தது என்று கூற முன் வருகிறேன். தடிப்பான தோலை மென்மையாக்கவும், ஏற்பட்ட எரிச்சலைப் போக்கவும் ஒரே ஒரு பாட்டில் வெல்டர்மா சரியாக இருந்தது. இதே சரும நோயினாலோ அல்லது இதைப்போல வேறுவித சரும நோயினாலோ அல்லல் படுகிறவர்களுக்கு வெல்டர்மாவைத்தான் சிபாரிசு செய்ய வேண்டும் என்று கூறத் தேவையில்லை." — CL.

வைத்தியர்களும் வற்புறுத்துவது:

எக்ஸிமா, கொப்புளங்கள், சிராய்ப்பு பருக்கள் முதலிய சகல சரும நோய்களும் வெல்டர்மாவிலுள்ள 'கிருமி நாசன சக்திகளிரண்டுக்கும், அடங்கி குணமாகி விடுகின்றன. இந்த நவீன மருந்து முற்றிலும் விநோதமானது. 'நீரில் எண்ணெய்ச் சேர்க்கை' என்னும் ஆதாரம் வைத்திய ஆராய்ச்சியிலேயே மிகவும் அபூர்வம். முதலாவதாக நோய்ப்பட்ட இடத்திலுள்ள விஷத்தை வெளியேற்ற உதவுகிறது. நோய் தொற்றி விடுமென்ற அபாயமே இல்லை. இரண்டாவதாக வெல்டர்மாவின் இருவித கிருமி நாசன சக்திகளும் (ஒவ்வொன்றும் வெவ்வேறு வித விஷக் கிருமிகளுக்குச் சத்துரு) போட்ட மாத்திரத்திலேயே வியாதி தொற்றியிருக்கும் மூலஸ்தானத்திற்குச் சென்று விடும். எரிச்சல் அடங்கி விச்ராந்தி ஏற்படுகிறது. ஆனால், வெல்டர்மாவை முதல் தடவையாக உபயோகிக்கும்போது சற்று விருவிருப்பை உண்டாக்கும். வெல்டர்மாவிலுள்ள இருவித கிருமிநாசன சக்திகளும் வேலை செய்யத் தொடங்கி விட்டன என்பதற்கு இதுதான் அறிகுறி.

கிருமிகளைக் கொல்ல கார்பாலிக் களிம்பைவிட பத்து மடங்கு அதிக சக்தி வாய்ந்தது. இருந்தாலும் ஆறுதல் தரும். வெகு மோசமான சரும நோய்களுக்கெல்லாம் வெல்டர்மாவைத்தான் சரும வைத்திய நிபுணர்கள் வற்புறுத்துகிறார்கள். வைத்திய சாலைகளிலும் ஆராய்ச்சி சாலைகளிலும் பரிசீலனை செய்யப்பட்டது. தூய வெண்மையானது. கறை படாது. வழ வழப்பானது, ஆனாலும் பிசுக்கற்றது. உபயோகிக்கத் தகுந்தது. வெட்டுக்காயங்களையும் சிராய்ப்புகளையும் விரைவில் ஆற்றி விடுகிறது.

ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிமிடெட்
பம்பாய் — கல்கத்தா — டில்லி — மதராஸ்



DOUBLE-ANTISEPTIC

Valderma

THE *Non-Greasy* BALM

No. 2

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

கல்கி

16. பஞ்சாப் படுகொலை

(தொடர்ச்சி)

ஏப்ரல் மாதம் 13உ தமிழ் நாட்டில் புது வருஷப் பிறப்பு தினம் வருவது வழக்கம் அல்லவா? வட இந்தியாவில் பல மாகாணங்களில் ஏப்ரல் 13உ ஹிந்துக்களுக்கு வருஷப் பிறப்பு தினம். அமிருதஸரஸில் அன்றைக்கு ஒரு பெரிய பொதுக்கூட்டம் கூடும் என்று காலையில் விளம்பரம் செய்யப்பட்டது. கூட்டம் நடக்கும் இடம் ஜாலியன் வாலாபாக் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தியாவின் சுதந்திரப் போராட்ட சரித்திரத்தில் ஜாலியன் வாலாபாக் என்றும் அழியாத பெருமை பெற்றதாகும். ஆகையால் அந்தப் பெயரை நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும்.

'பாக்' (Bagh) என்னும் ஹிந்தி வார்த்தைக்குத் 'தோட்டம்' என்று பொருள். ஆனால் ஜாலியன் வாலாபாக்கில் அப்போது தோட்டம் இல்லை; மரமே கிடையாது. அது வெறும் வெட்ட வெளியான மைதானமாயிருந்தது. அதைச் சுற்றி மூன்று பக்கங்களில் உயரமான மச்சு வீடுகள் இருந்தன. அந்த மச்சு வீடுகளின் பின்புறத்து நெடுஞ் சுவர்கள் மைதானத்தைச் சுற்றிக் கோட்டைச் சுவர்களைப் போல் நின்றன. ஒரே ஒரு பக்கத்தில் மாத்திரம், ஒரு ஆள் உயரமான மதில் சுவர் இருந்தது.

மைதானத்துக்குள் ஜனங்கள் வருவதற்கும் திரும்பிப் போவதற்கும் வழி ஒன்றே ஒன்றுதான். அந்த ஒரு வழியும் மிகக் குறுக்கலானது. ஒரே சமயத்தில் ஏழெட்டுப் பேருக்குமேல் அதன் வழியாக மைதானத்துக்கு உள்ளே வரவோ வெளியே போகவோ முடியாது.

இப்படிப்பட்ட ஜாலியன் வாலாபாக் மைதானத்தில் அன்று பிற்பகலிருந்தே ஜனங்கள் வந்து கூட ஆரம்பித்தார்கள். வயதானவர்கள், வாலிபர்கள், ஸ்திரீகள், குழந்தைகள் எல்லாருமாகப் பெருங் கூட்டம் சேர்ந்துவிட்டது. டாக்டர் சத்தியபாலும் டாக்டர் கிச்சிலுவும் என்ன ஆனார்கள் என்று ஜனங்களுக்கு இன்னமும் தெரியவில்லை. காந்திஜியை டில்லிக்கு அப்பால் பால்வால் ஸ்டேஷனில் இறக்கிக் கைது செய்து கொண்டு போய் விட்டார்கள் என்ற செய்தி வந்திருந்தது. டில்லியில் சுவாமி சிரத்தானந்தர் தலைமை வகித்து நடத்திச் சென்ற ஊர்வலத்தின் பேரில் போலீஸார் 'துப்பாக்கிப் பிரயோகம் செய்வோம்' என்று சொன்னபோது சுவாமி சிரத்தானந்தர் தமது மார்பை மூடியிருந்த சட்டையை எடுத்து விட்டுச் "சுடுங்கள்!" என்று சொன்ன செய்தியும் வந்திருந்தது. 10-ந் தேதியிலிருந்து அமிருதஸரஸில் நடந்து வந்த இராணுவ அதிகார அமுல் மக்களின் உள்ளத்தில் கொதிப்பை உண்டு பண்ணியிருந்தது. ஆகவே ஜாலியன் வாலாபாக்கில் இருபதினாயிரம் ஜனங்களுக்கு மேல் கூடி விட்டார்கள். அங்கே கூட்டம் போடுவது சட்ட விரோதம் என்றோ, அதிகாரிகள் கூட்டத்தைத் தடுத்திருக்கிறார்கள் என்றோ, அந்த ஜனங்கள் அறிந்திருக்கவில்லை.

கூட்டம் அமைதியாகவே ஆரம்பமாயிற்று. சிறிது நேரம் நடந்தது. ஹன்ஸ்ராஜ் என்னும் தொண்டர் பேசிக்கொண்டிருந்தார். திடீரென்று படைகள் வரும் சத்தம் கேட்டது. நூறு இந்திய வீரர்களும் ஐம்பது ஐரோப்பிய சோல்ஜர்களும் அடங்கிய படை மைதானத்துக்குள் பிரவேசித்தது. இந்தப் படைக்கு ஜெனரல் டையர் என்பவர் தலைமை வகித்தார். இவர் கவசம் பூண்ட இயந்திர பீரங்கி ஒன்றும் கொண்டு வந்திருந்தார். ஆனால் குறுகிய நுழை வாசல் வழியாக அதை மைதானத்துக்குள்ளே கொண்டு வர முடியவில்லை. ஆகையால்

கவச பீரங்கியை வெளியிலேயே நிறுத்தி விட்டுத் தம்முடன் வந்த வீரர்களுடன் ஜெனரல் டையர் மைதானத்துக்குள் பிரவேசித்தார். அவர் பிரவேசித்த இடத்துக்குப் பக்கத்திலேயே கொஞ்சம் உயரமான மேடை ஒன்று இருந்தது. அந்த மேடையில் வீரர்களை நிறுத்தினார். இந்திய வீரர்களை முன்னாலும் ஐரோப்பிய வீரர்களைப் பின்னாலும் நிறுத்தினார். "உடனே கலைந்து போங்கள்!" என்று ஜனங்களைப் பார்த்து உத்தர விட்டார். அந்த உத்தரவு போட்டு இரண்டே இரண்டு நிமிஷம் பொறுத்து விட்டுச் "சுடுங்கள்" என்று வீரர்களுக்கு உத்தரவிட்டார்!

இருபதினாயிரம் பேர் அடங்கிய அந்தப் பெருங் கூட்டத்தில் சோல்ஜர்கள் வந்திருக்கிற விஷயம் ஒரு சிலருக்கு மட்டுமே தெரிந்தது. ஜெனரல் டையரின் உத்தரவு யாருக்குமே காதில் விழவில்லை. ஆனால் துப்பாக்கிகள் வெடி தீர்க்கும் சத்தம் ஏக காலத்தில் இருபதினாயிரம் பேரின் காதிலும் விழுந்தது. உடனே ஜனங்கள் எழுந்து ஓட ஆரம்பித்தார்கள். ஆனால் எங்கே ஓடுவது? மைதானத்துக்குள் வரும் குறுகிய பாதை வழியாக அவ்வளவு பேரும் ஓட முடியாது. குறைந்தது அதற்கு இரண்டு மணி நேரம்வேண்டும். சுற்றிலும் மூன்று பக்கம் நெடுஞ்சுவர்கள் நின்றன. ஒரு பக்கத்தில் மட்டும் தாழ்ந்த மதில் சுவர் நின்றது. அதை நோக்கி ஜனங்கள் ஓடி மதில் மேல் ஏறிக் குதிக்கத் தொடங்கினார்கள். அந்தக் குட்டையான மதில் சுவரை நோக்கியே துப்பாக்கி குண்டுகளும் அதிகமாக வந்தன. ஏறிக் குதிக்க முயன்றவர்களில் பலர் குண்டு பட்டுச் செத்து விழுந்தார்கள்! அந்த மதில் சுவர் ஓரமாகப் பிணங்கள் குவிந்தன!!

ஜெனரல் டையரின் வீரர்கள் அரை மணி நேரம் சுட்டார்கள். மொத்தம் 1600 குண்டுகள் சுட்டார்கள். கொண்டு வந்திருந்த தோட்டாக்கள் எல்லாம் தீர்ந்து போன பிறகுதான் சுடுவதை நிறுத்தினார்கள்!

பின்னால், பஞ்சாப் சம்பவங்களைப் பற்றி விசாரிப்பதற்கு இந்திய சர்க்கார் நியமித்த ஹண்டர் கமிட்டியின் முன்பு ஜெனரல் டையர் சாட்சி கூறியபோது "சுட்டேன்! சுட்டேன்! தோட்டா தீரும் வரையில் சுட்டேன்!" என்று மார் தட்டிக் கொண்டு சொன்னார்.

"நீங்கள் சுட ஆரம்பித்தவுடனேயே ஜனங்கள் கலையத் தொடங்கிவிட்டார்களே? அப்புறம் எதற்காகச் சுட்டீர்கள்?" என்று கேட்டார்.

"ஜனங்களைக் கலைப்பதற்காக மட்டும் நான் சுடவில்லை. ஜனங்களுக்குப் பாடம் கற்பிப்பதற்காகச் சுட்டேன். எத்தனை பேரைக் கொல்லலாமோ அவ்வளவு பேரையும் கொல்லுவதற்குச் சுட்டேன்! அப்போதுதான் மறுபடியும் ஜனங்கள் என்னுடைய உத்தரவை மீறத் துணிய மாட்டார்கள் என்பதற்காகவே அம்மாதிரி செய்தேன்! இன்னும் அதிக தோட்டாக்கள் கைவசம் இருந்திருந்தால் இன்னும் அதிக நேரம் சுட்டிருப்பேன்!" என்று ஜெனரல் டையர் சொன்னார்.

ஜெனரல் டையர் அன்று சுட்டதில் மொத்தம் 400 பேர் உயிரை இழந்தார்கள். ஆயிரம் பேருக்கு மேல் காயம் பட்டு விழுந்தார்கள்.

தோட்டாக்கள் தீர்ந்தவுடனே ஜெனரல் டையர் தம் வீரர்களுடன் அங்கிருந்து புறப்பட்டுப் போய்விட்டார்.

செத்தவர்களின் உடல்கள் இரவெல்லாம் அந்த மைதானத்திலேயே கிடந்தன. காயம்பட்டு விழுந்தவர்கள் இரவெல்லாம் அங்கேயே முனகிக் கொண்டும் ஓலமிட்டுக் கொண்டும் கிடந்தார்கள்.

அவர்களில் பலர் "தாகம்! தாகம்!" என்று தவித்தார்கள். ஒரு வாய் தண்ணீர் கொடுப்பதற்கு அங்கே யாரும் இல்லை. அக்கம்பக்கத்தி லிருந்தவர்கள் கதிகலங்கிப் போய் வீட்டுக்குள்ளேயே இருந்து விட்டார்கள். இந்த மாதிரி ராட்சதச் செயல் நடக்கக் கூடும் என்று அவர்கள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

காயம்பட்டவர்களுக்குத் தாகத்துக்குத் தண்ணீர் கொடுப்பதற்கோ அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்துவதற்கோ சிகிச்சை செய்வதற்கோ ஜெனரல் டையர் எத்தவித ஏற்பாடும் செய்யவில்லை.

மறுநாள் காலையில் ஜெனரல் டையருக்கு ஒரு தந்தி வந்தது. "சரியான காரியம் செய்தீர். லெப்டினெண்ட் கவர்னர் உம்முடைய செயலை அங்கீகரிக்கிறார்!" என்று அந்தத் தந்தி கூறியது.

* * *

ஜெனரல் டையருடைய பயங்கர வேலைகள் ஜாலியன் வாலாபாக் படுகொலையுடன் முடியவில்லை. கற்பனைக் கெட்டாத பல கொடுமைகளை அவர் நிகழ்த்தினார். அமிருதஸரஸ் நகரத்துக்குக் குழாயில் ஜலம் வருவதையும் தீபங்களுக்கு மின்சார சக்தி கிடைப்பதையும் நிறுத்தி விட்டார். வீதிகளில் இரண்டு பேருக்கு மேல் சேர்ந்து நடக்கக் கூடாது என்று உத்தரவு போட்டார். கடைகளைக் கட்டாயமாகத் திறக்கச் செய்து இராணுவ

அதிகாரிகள் சொன்ன விலைக்குச் சாமான்களை விற்கும்படி செய்தார். பைசைக்கிள்களையும் வண்டிகளையும் கட்டாயமாகக் கைப்பற்றினார். தெரு மூலைகளில் முக்கோணங்களை நாட்டி, இராணுவ உத்தரவுகளை மீறி நடப்பவர்களையெல்லாம் சவுக்கினால் அடிக்கும்படி செய்தார்.

ஜெனரல் டையருடைய உத்தரவுகளுக்குள்ளே யெல்லாம் மிகப் பயங்கரமானது, 'வயிற்றினால் ஊர்ந்து செல்லும்' உத்தரவு ((Crawling order). மிஸ் ஷெர்வுட் என்னும் ஐரோப்பிய ஸ்திரீ ஒரு சந்தின் வழியாகப் போய்க்கொண்டிருந்தபோது இராணுவச் சட்டக் கொடுமைகளினால் வெறி கொண்டிருந்த சில மக்கள் அவளைத் தாக்கினார்கள். ஆனால் அதே சந்தில் வசித்த நல்ல மனிதர்கள் ஓடிவந்து அந்த ஐரோப்பிய ஸ்திரீயைக் காப்பாற்றி விட்டார்கள்.

இந்தச் செய்தி ஜெனரல் டையருக்குத் தெரிந்ததும் அவர் உடனே இரணியகசிபுவாக மாறினார்! அந்தச் சந்தின் மூலைக்கு வந்து "இனி இந்தச் சந்துக்குள் போகிறவர்கள் எல்லாரும் வயிறு தரையில்படும்படி ஊர்ந்து போக வேண்டும்" என்று கட்டளை யிட்டார். அந்தச் சந்தில் குடியிருந்த ஜனங்கள் அனைவரும் வெளியில் போக வேண்டுமானாலும் மறுபடி திரும்பி வீட்டுக்கு வர வேண்டுமானாலும் வயிற்றினால் ஊர்ந்து செல்ல வேண்டியதாயிற்று!

அமிருதஸரஸில் ஜெனரல் டையர் ஏற்படுத்திய இராணுவக் கோர்ட்டார் இராணுவ உத்தரவை மீறியதற்காக 298 பேரை விசாரணை செய்தார்கள். அவர்களில் 51 பேருக்கு மரண தண்டனையும் 49 பேருக்கு ஆயுள்பரியந்தம் தீவாந்தர தண்டனையும் 79 பேருக்கு 7 வருஷ தண்டனையும் கிடைத்தன!

• • •

அமிருதஸரஸில் ராட்சத ஆட்சி நடந்து கொண்டிருந்த அதே சமயத்தில் பஞ்சாப்பின் இன்னும் பல இடங்களிலும் ஜெனரல் டையரின் அண்ணன்மார்களும் தம்பிமார்களும் அவரவர்களுடைய சக்திக்கு இசைந்தபடி அசுர லீலைகளை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

லாகூர் நகரில் கர்னல் ஜான்ஸன் ஆட்சிபுரிந்தார். இரவு எட்டு மணிக்கு மேலே வெளியில் கிளம்புகிறவர்கள் சுடப் படுவார்கள் என்று அவர் உத்தரவு போட்டார். இந்த உத்தரவு அடங்கிய விளம்பரங்கள் வீட்டுச் சுவர்களில் ஒட்டப்பட்டன. அந்த விளம்பரங்கள் கிழிக்கப்படாமல் காப்பாற்றுவது வீட்டுக்காரர் பொறுப்பு. இரவெல்லாம் கண் விழித்துக் காக்கவேண்டும். காக்கத் தவறினால் மரண தண்டனை, அல்லது கசையடி, அல்லது சிறைவாசம்.

லாகூர் கலாசாலைகளில் படித்த மாணாக்கர்கள் அனைவரும் நகருக்கு நாலு மைல் தூரத்திலிருந்த இராணுவத் தலைமைக் காரியாலயத்துக்குத் தினம் நாலு தடவை வந்து ஆஜர் கொடுக்க வேண்டுமென்று உத்தர விட்டார். அப்போது கடுங் கோடைக்காலம். லாகூரில் உஷ்ணத்தின் டிக்ரி அப்போது 108. இந்த வெயிலில் மாணாக்கர்கள் தினம் பதினாறு மைல் நடக்க வேண்டியதாயிற்று. பலர் சாலையிலேயே மூர்ச்சையடைந்து விழுந்தார்கள்.

இதைக் கேள்விப்பட்ட கர்னல் ஜான்ஸன், "ரொம்ப நல்லது. விழுந்த மாணாக்கர்கள் விஷமம் செய்யாமல் இருப்பார்கள் அல்லவா?" என்றார்.

ஒரு காலேஜ் வாசல் சுவரில் ஒட்டியிருந்த இராணுவ உத்தரவு விளம்பரம் கிழிக்கப்பட்டது. இதற்காக அந்தக் கலாசாலை பிரின்ஸ்பால், ஆசிரியர்கள் எல்லா

நடக்காது!



கிழவர் (ஊதாரிச் செலவு செய்யும் மருமகனைப் பார்த்து):— என் பணத்தையெல்லாம் செலவு பண்ணி விட்டு என் தலையை மழுங்க மொட்டை அடிக்கலாம் என்று பார்த்தாயோ? அதெல்லாம் இங்கே நடக்காது!

ரையும் கைதுசெய்து வீதிவழியாக நடத்தி அழைத்துச் சென்று கோட்டையில் ஒரு மூலையில் மூன்றுநாள் அடைத்து வைத்திருக்கும்படி உத்தரவிட்டார்.

இவ்வாறே குஜரான்வாலாவில் கர்னல் ஒப்ரியனும் ஷேக்புராவில் மிஸ்டர் பாஸ்வொர்த் ஸ்மித்தும் காஸூரில் காப்டன் டவ்டனும் அசுர ஆட்சி நடத்தினார்கள்.

குஜர்ன்வாலாவில் ஆகாச விமானத்திலிருந்து குண்டு போடும் முறையும் கையாளப்பட்டது. லெப்டினண்ட் டாட்கின்ஸ், மேஜர் கார்பி ஆகியவர்கள் ஆகாச விமானத்திலிருந்து கீழே ஜனக் கூட்டத்தைக் கண்டவுடனே வெடிகுண்டு எறிந்தார்கள். அல்லது இயந்திர பீரங்கியினால் சுட்டுக் கலைத்தார்கள்.

இம்பாதிரி ஒரு கலியாண ஊர்வலத்தின் மீது ஆகாச விமானத்திலிருந்து குண்டுகள் எறியப்பட்டன.

கர்னல் ஒப்ரியன் என்பவர் பிரிட்டிஷ் அதிகாரிகளை இந்தியர்கள் கண்டவுடனே சலாம் போட வேண்டும் என்று உத்தரவிட்டார். இந்தியர்கள் வண்டியில் ஏறியிருந்தால் உடனே இறங்கிச் சலாம் போடவேண்டும் என்றும், குடை பிடித்திருந்தால் உடனே குடையை இறக்கி மூடவேண்டும் என்றும் கட்டளையிட்டார். இந்த உத்தரவை மீறியவர்களுக்கெல்லாம் கசையடி கொடுக்கப் பட்டது.

காப்டன் டவ்டன் என்பவர் காஸூர் பட்டணத்தில் ஒரு முக்கியமான நாற்சந்தியில் ஒரு பெரிய தூக்குமேடை கட்டினார். அத்துடன், நூற்றைம்பது பேர் கொள்ளக்கூடிய ஒரு பெரிய இரும்புக் கூண்டு தயாரித்து ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் காட்டினார். கலகத்தில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகத்துக்கு உள்ளானவர்களைக் கொண்டுவந்து அந்தக் கூண்டில் அடைத்து வைத்தார். ரயிலுக்குப் போகிறவர்கள், ரயிலிலிருந்து வருகிறவர்கள் எல்லாரும் கூண்டில் அடைக்கப் பட்டவர்களைப் பார்த்துக் கொண்டு போகுமாறு ஏற்பாடு செய்தார்!

• • •

பஞ்சாப் முழுவதிலும் பொது வாழ்வில் பிரமுகர்களாயிருந்தவர்கள் அனைவரும் இராணுவச் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டுக் கடுந்தண்டனைக்கு உள்ளானார்கள். லாகூரில் ஹரி கிருஷ்ண லால் பிரபல காங்கிரஸ் வாதி. பெரிய செல்வந்தர். அவருக்கு 40 லட்சம் ரூபாய் சொத்து இருந்தது. அவரைக் கைது செய்து ஆயுள் பரியந்தம் தீவாந்தர தண்டனை விதித்ததுடன் இவருடைய சொத்து முழுவதையும் பறிமுதல் செய்யவும் உத்தரவு போட்டார்கள். லாகூரில் அப்போது பிரபலமாயிருந்த பண்டித ராம் போஜ் தத்தர், பண்டித கே. சந்தானம், 'டிரிப்யூன்' பத்திரிகை ஆசிரியர் பாபு காளிநாத் ராய் முதலியவர்களும் அதே கதிக்கு உள்ளாயினர்.

பஞ்சாபில் இவ்விதம் ராட்சத ராணுவ ஆட்சி நீடித்துக் கொண்டே போயிற்று. ஆனால் பஞ்சாப்புக்கு வெளியில் உள்ளவர்களுக்கு அங்கே நிகழ்ந்த கொடுமைகளைப் பற்றி ஒன்றுமே அப்போது தெரியவில்லை. ஏனெனில் செய்திகள் எல்லாம் தணிக்கை செய்து அனுப்பப்பட்டன. வெளி மாகாணங்களிலிருந்து பஞ்சாப்புக்குள் வரவோ, பஞ்சாப்பிலிருந்து வெளியில் போகவோ யாரும் அனுமதிக்கப்பட வில்லை.

பூஜ்யர் ஆண்ட்ரூஸ் பஞ்சாப் சம்பவங்களைப் பற்றி ஓரளவு கேள்விப்பட்டு அங்கே போய் விசாரணை செய்ய விரும்பி மே மாதத்தில் பஞ்சாபுக்குப் போனார். அவரை அமிருதஸரஸில் கைது செய்து ஒரு நாள் ரிமாண்டில் வைத்திருந்து திருப்பி அனுப்பி விட்டார்கள். லாலா ஹரிகிருஷ்ண லாலின் சார்பாக இராணுவக் கோர்ட்டில் வழக்காடுவதற்காக பிரசித்த பாரிஸ்டரான மிஸ்டர் எர்ட்லி நார்ட்டன் பஞ்சாப் சென்றார். அவரும் திருப்பி அனுப்பப் பட்டார்.

ஜூலை மாதத்திற்குப் பிறகுதான் ஒரு மாதிரியாகப் பஞ்சாப் சம்பவங்களைப் பற்றிய செய்திகள் வெளிவரத் தொடங்கின. அந்த மாதத்தில் கல்கத்தாவில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடிய போது பிரபல காங்கிரஸ் தலைவர்களிடம் இரகசியமாகப் பஞ்சாப் பயங்கரங்களைப் பற்றிச் செய்தி சொல்லப்பட்டது. சொன்னவர்கள், "இதெல்லாம் இரகசியமாக இருக்கட்டும். எங்களைக் காட்டிக் கொடுத்துவிட வேண்டாம்" என்று வேண்டிக் கொண்டார்கள்.

அப்போது வைஸராய் செம்ஸ்போர்டின் நிர்வாக சபையின் அங்கத்தினராயிருந்தவர்களில் ஸர் சங்கரன் நாயர் ஒருவர். பஞ்சாப்பில் மேலும் இராணுவச் சட்டம் நீடிப்பதைக் கண்டித்து ஜூலை 19உ அவர் ராஜிநாமா செய்தார்.

பஞ்சாப்பை மூடியிருந்த இரும்புத் திரை அகன்று உண்மையான செய்திகள் வர ஆரம்பித்துக் காந்தி மகாத்மாவின் காதிலும் விழுந்தன. பயங்கரக் கொடுமைகளுக்கு உள்ளான பாஞ்சாலத்துக்குப் போகவேண்டும் என்று காந்தி மகானின் உள்ளம் துடி துடித்தது.

தேடிக் கிடைத்த மாப்பிள்ளை

கு.ரா.

ரங்கராஜனுக்குக் கல்யாணம் என்று எனக்குப் பத்திரிகை வந்தது. அப்படியே திகைத்துப் போய்விட்டேன். திடுதிப்பென்று அவன் எப்படிக் கல்யாணத்திற்கு ஒப்புக்கொண்டான், எங்களிடம் சொல்லிக் கொண்டிருந்த வார்த்தை என்னவாயிற்று என்றெல்லாம் நான் யோசனையிலாழ்ந்தேன்.

ரங்கராஜன் என்னுடைய மிகச் சிறந்த நண்பன். நல்ல உபகாரி. பிறருக்கு ஒத்தாசை செய்வதென்றால் அவனுக்கு அலாதி இன்பம்.

ஜாதகத்தில் அவனுக்கு ஏக நம்பிக்கை. அதைக் கொண்டு, தான் முப்பதாவது வயதில் இறக்கப் போவதாக அவன் அறிந்திருந்தான். அதையே அடிக்கடி என்னிடம் கூறுவான்.

"டேய் ரங்கா! இந்த ஜாதகமெல்லாம் வெறும் பொய். அதைக் கொண்டு முப்பது வயதுதான் இருக்கப்போகிறாய் என்று நம்பிக் கொண்டிருக்காதே! நாமெல்லாம் தொண்டுக் கிழங்களாகும் வரை இருந்து சுதந்திர இந்தியா சுபிட்சத்துடன் விளங்கப் போவதைப் பார்க்கப் போகிறோம்" என்பேன் நான்.

"நீ என்ன சொன்னாலும் நான் நம்ப மாட்டேன். ஜாதகம் ஜாதகம்தான். நாம் பிறந்த வேளைப்படிதான் எல்லாம் நடக்கும்" என்பான்.


ரங்கராஜனுக்குச் சில வரன்கள் வந்தன. ஜாதகம் பொருந்தவில்லை என்று தாமாகவே சிலர் போய்விட்டனர். சில ஜாதகங்கள் பொருந்தியிருந்தும் ரங்கராஜன் வந்திருந்தவர்களிடம், "நான் அற்பாயுசுக்காரன்! எனக்குப் பெண்ணைக் கொடுக்காதீர்கள்!" என்று துணிந்து கூறினான். அவனுடைய பெற்றோரும் நானும், திடுக்கிட்டுப் போனோம்.

"இதென்ன, இந்தப் பிள்ளை இப்படிப் பேசுகிறதே!" என்று வந்தவர்கள் போய் விட்டார்கள். அவனுடைய அப்பா அவனை நன்றாகத் திட்டினார். நானும், "என்ன ரங்கராஜா! இருக்கும் வரை இப்படியே இருந்து விடப் போகிறாயா?" என்று கேட்டேன்.

"பின் ஒரு இளம் பெண்ணின் வாழ்க்கையைப் பாழாக்கச் சொல்கிறாயா?" என்று அவன் கேட்டான். அச்சமயம் அவன் முகத்தில் ஒரு அசாதாரண ஒளி வீசியது.

"ரங்கா! அம்மாவை உத்தேசித்தாவது நீ கல்யாணம் பண்ணிக் கொள். ஜாதகத்தை நம்பி வாழ்க்கையைக் குட்டிச்சுவராக அடித்துக் கொள்ளாதே!" என்று நான் சொன்னேன்.

"வேண்டுமானால் நான் ஒன்று சொல்கிறேன். இன்னும் ஏழு வருஷங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள். ஜாதகப்படி ஒன்றும் நடக்காவிட்டால், நான் கல்யாணம் செய்து கொள்கிறேன்" என்றான் அவன்.



"தாத்தாவான பிறகு யார் உனக்குப் பெண் கொடுப்பார்களாம்?"

"விவாகம் நடக்கவேண்டுமென்று ஜாதகத்தில் இருந்தால் யாராவது ஒரு பாட்டி வந்துவிட்டுப் போகிறாள்!" என்றான் அவன்.

2

இரண்டு வருடங்கள் சென்றுவிட்டன. அவனுடைய பெற்றோர்கள் அவனுக்குப் பெண் பார்ப்பதையே விட்டு விட்டனர். மற்ற விஷயங்கள் வழக்கம் போல் நடந்து கொண்டிருந்தன. என் கல்யாணத்தின் போது ரங்கராஜனைக் கவனித்த என் உறவினர்கள் சிலர் — பெண்ணைப் பெற்றவர்கள் தான்!— என்னிடம் அவனைப் பற்றி விசாரித்தனர். ஆனால் நான் உண்மையைக் கூறிய போது அவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டுப் போயினர். "இப்படியும் ஒரு அதிசயப் பிள்ளையா!" என்று மூக்கின்மேல் விரலை வைத்தனர். அதற்கு மேல் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்த இரண்டு வருடங்களில் ரங்கராஜனுடைய வைராக்கியம் உரம்பெற்று வலுவடைந்திருந்தது. தான் கொண்ட தீர்மானத்தை அவன் நிறைவேற்றியேதீருவான் என்று நாங்கள் நம்பினோம்.



எனக்கு விவாகமான அடுத்த மாதமே பம்பாயில் ஒரு வேலை கிடைத்தது. பம்பாய்க்கு இன்னும் ஒரு வாரத்தில் புறப்பட இருந்தேன். அன்று மாலை வழக்கம்போல் அவன் வீட்டுக்குப் போயிருந்தேன். அவர்கள் வீட்டுக்கு யார் யாரோ புது மனிதர்கள் வந்திருந்தார்கள்.

ரங்கராஜனும் வெளியே வந்தான்.

"என்னடா! யார் வந்திருக்கிறார்கள்?" என்று அவனை விசாரித்தேன்.

"அது ஒரு பெரிய கதை. பேசிக்கொண்டே நுங்கம்பாக்கம் வரை போய் விட்டு வரலாம், வா!" என்றான்.

"நுங்கம்பாக்கத்தில் என்ன வேலை?" என்று கேட்டேன்,


"அதைத்தான் சொல்லப்போகிறேன்!" என்று கூறிவிட்டு, அவன் விஷயத்தை விவரித்தான். ரங்கராஜனுக்குத் தூர உறவினர் ஒருவர் மனைவியோடும், பெண்ணோடும் கல்கத்தாவிலிருந்து வந்திருந்தார். பெண்ணுக்குக் கல்யாணத்தைச் செய்து விட்டு, பெண்ணை மாப்பிள்ளையிடமும் ஒப்படைத்துவிட்டு, ஊருக்குத் திரும்பும் நோக்கத்துடன் அவர்கள் வந்திருந்தார்கள். முதலில் அவர்களுக்கு ரங்கராஜன் பேரில் ஒரு கண் இருந்தது. ஆனால் அவனுடைய தந்தை பெண்ணின் அப்பாவிடம் அவனுடைய தீர்மானத்தை உடைத்துச் சொல்லி விட்டார். ஆகவே, அவர்கள் ரங்கராஜனைக் கை விட்டுவிட்டு வேறு வரன்கள் பார்க்கத் தொடங்கினர். அதுவரை அவர்கள் ரங்கராஜன் வீட்டிலேயே தங்கியிருந்தனர்.

"இப்பொழுது என்னிடம் ஒரு விலாசம் இருக்கிறது. அங்கே போய் ஜாதகத்தை வாங்கிக் கொண்டு வரவேண்டும், அதற்குத் தான் நுங்கம்பாக்கம் போகிறேன்" என்றான் அவன்.

பிறகு இருவரும் அந்த வீட்டை யடைந்தோம். ஜாதகமும் பெற்றுக்கொண்டோம். வரும் வழியில் அவனே ஜாதகத்தைப் பார்த்துவிட்டு, "இது உபயோகமில்லை" என்று கூறிவிட்டான்.

அடுத்த நாள் ஜோசியரும் அப்படித்தான் சொல்லிவிட்டார். அன்று மாலை இன்னொரு விலாசம் கொண்டு வந்திருந்தான். ஆனால் நான் அவனுடன் அன்று போகவில்லை. பம்பாய்க்குப் போகுமுன் சிலரிடம் நான் விடை பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.

ஒரு திருத்தம் !



அதற்கடுத்த நாளும் நான் அவனுடன் சுற்றப் போகவில்லை. ஆனால் அவன் மட்டும் 'மாப்பிள்ளை வேட்டை'யில் தீவிரமாக ஈடுபட்டிருந்தான்.

அன்று வெள்ளிக் கிழமை. அடுத்த நாள் காலை 'பம்பாய் எக்ஸ்பிரஸ்'ஸில் நான் புறப்பட ஏற்பாடு செய்திருந்தேன். அன்று ஆபீஸ் விட்டதும் ரங்கராஜனே என் வீட்டுக்கு வந்தான். இருவரும் கடைசி முறையாக ஹோட்டலுக்குச் சென்று சிற்றுண்டி அருந்தினோம். பிறகு அவனை வீடு வரை கொண்டுபோய் விட்டேன்.

"சரி, ரங்கா நாளைக்கு ஸ்டேஷனில் சந்திக்கிறாயா?" என்று விடைபெற்றுக் கொண்டேன்.

"ஓ. கே!" என்று குதூகலத்துடன் அவன் எனக்கு விடை கொடுத்தனுப்பினான்.

அடுத்த நாள் அவன் ஸ்டேஷனுக்கு வந்திருந்தான். அவன் முகத்தில் பலமான யோசனை காணப்பட்டது. "என்ன ரங்கா, என்ன பலத்த யோசனை?" என்று சிரித்தவாறு கேட்டேன்.

"ஒன்றுமில்லையே!" என்று தடுமாறிக்கொண்டே பதிலளித்தான். ஸ்டேஷனுக்கு வந்திருந்த என் அண்ணா, "வேறு என்ன இருக்கும்? உன்னை விட்டு எப்படிப் பிரிந்திருப்பது என்ற யோசனையாகத்தான் இருக்கும்" என்று கூறிச் சிரித்தார்.

நானும் சிரித்து விட்டு, "சரி! அடிக்கடி கடிதம் போடு!" என்றேன். ரயிலும் புறப்பட்டது.

3

நான் பம்பாய்க்கு வந்த பதினைந்தாவது நாள் ரங்கராஜனின் விவாகப் பத்திரிகை எனக்குக் கிடைத்தது. அதற்கு ஐந்தாம் நாள் விவாகம் நடக்க இருந்தது. இரண்டு நாள் 'லீவு' வாங்கிக் கொண்டு விவாகத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். ரங்கராஜனுக்கு மிகவும் சந்தோஷம்.

முகூர்த்தம் ஆன பிறகு என்னிடம் வந்தான், "என்ன, இன்று காலைதான் வர முடிந்ததா?" என்று என்னை விசாரித்தான்.

"என்ன செய்கிறது? 'லீவு' எங்கே கிடைக்கிறது? ராத்திரியே புறப்பட வேண்டும். ஆனால் அதற்குள் சில சந்தேகங்களைத் தீர்த்துவிடு!" என்றேன்.

"என் தீர்மானத்தைப் பற்றித்தானே கேட்கப் போகிறாய்? தாராளமாய்ப் பதில் சொல்கிறேன்" என்று அவன் விஷயத்தை விவரித்தான்:

* * *

நான் வெள்ளிக்கிழமை யன்று அவனுடைய வீட்டிற்குச் சென்று விடை பெற்றுக் கொண்டு வந்த பிறகு, ரங்கராஜன் உள்ளே சென்றான். வீட்டில் ஜனசந்தடியே இல்லாதது கண்டு அவன் திடுக்கிட்டான். காரணம் விளங்கவில்லை.

"எங்கே எல்லோருமாக வீட்டைத் திறந்து போட்டுவிட்டுப் போய் விட்டார்கள்?" என்று சற்று உரக்கவே அவன் முணுமுணுத்தான்.

"எல்லோரும் கோவிலுக்குப் போயிருக்கிறார்கள். இன்னும் கால் மணியில் வந்து விடுவார்கள். உங்களுக்குக் காப்பியும், டிபனும் கொண்டு வரட்டுமா?" என்று குரல் கேட்டு அவன் திடுக்கிட்டான். திரும்பிப் பார்த்தால் சமையலறை வாசற்படியருகே கலியாணத்துக்காக வந்திருந்த பெண், மகேஸ்வரி நின்று கொண்டிருந்தாள்.

ரங்கராஜன் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "ஏன், நீ மட்டும் கோவிலுக்குப் போகவில்லையா?" என்று கேட்டான். அதைக் கேட்பதற்குள் அவன் முகத்தில் வேர்வை குப்பென்று வெளிப்பட்டது.

அவள் தயங்காமல் பதில் கூறினாள்: "எனக்குக் கொஞ்சம் தலைவலியாயிருந்தது; அதனால் போகவில்லை. மேலும் நீங்கள் ஆபீஸிலிருந்து வந்ததும் டிபனும், காப்பியும் கொடுக்கச் சொன்னார்கள்!"

"தலைவலிக்கு ஒரு மாத்திரை இருக்கிறது தரட்டுமா?"

"வேண்டாம், வேண்டாம். தலைவலி போய் விட்டது..." என்று சொல்லி விட்டு, அவள் சிறிது தயக்கத்துடன், "உண்மையில் எனக்குத் தலைவலியே இல்லை. நான் போகாததற்கு வேறு காரணம் உண்டு" என்றாள்.

ரங்கராஜனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவன் எக்கச்சக்கமான நிலைமையிலிருந்தான். உடனே வெளியே போய்விடவும் முடியவில்லை. அவள் தனியாக இருக்கும்போது தானும் கூட இருப்பது அவனுக்கு என்னவோ போலிருந்தது. என்ன செய்வது?

அதற்குள் மகேஸ்வரி ஒரு தட்டில் உப்புமாவும், ஒரு வெள்ளி டம்ளரில் தண்ணீரும் கொண்டு வந்து ஒருபுறமாக வைத்துவிட்டு, மறுபடியும் சமையலறைக்குப் போய்விட்டாள். வேறு வழியில்லாமல் ரங்கராஜன் உட்கார்ந்து உப்புமாவை ருசி பார்க்கத் தொடங்கினான். அவள் மறுபடியும் கையில் காப்பியுடன் வெளிப்பட்டாள். அவனருகே காப்பியை வைத்து விட்டு, "நான் போகாததற்கு ஒரு காரணம் உண்டு என்று சொன்னேனே, அதைச் சொல்லட்டுமா? கோபிக்க மாட்டீர்களே?" என்றாள் மகேஸ்வரி.

ரங்கராஜன் ஒன்றும் பதில் சொல்ல முடியாமல் திகைத்தான். அவள் அவனுடைய பதிலை எதிர்பாராதவள்போல், "உங்களிடம் ஒரு முக்கிய விஷயம் பேச வேண்டும். அதற்காகவே மற்றவர்களைக் கோவிலுக்கு அனுப்பி விட்டேன்" என்றாள்.

அவன் முகத்தை நிமிர்த்தி, வியப்புக் கண்களோடு அவளை ஏறெடுத்துப் பார்த்தான். அதற்குள் அவள் மேலும் கூறினாள்:

"நீங்கள் எனக்காக எத்தனையோ இடங்களுக்குப் போய் எத்தனையோ வரன்களைப் பார்த்து வருகிறீர்களே, ஏன் ஒருவராவது என்னைக் கலியாணம் பண்ணிக் கொள்ள விரும்பவில்லை? நான் அழகாயில்லையா?"

'இதென்ன விபரீதம்!' என்றெண்ணிக் கொண்டு, "நான் என்ன சொல்வது? உன் ஜாதகத்தில் ஏதோ தோஷம் இருக்கிறதாம். அதனால்தான் தள்ளிக் கொண்டு போகிறது" என்றான் ரங்கராஜன்.


"இந்த ஜாதகத்தினால்தான் நாலு வருஷமாக என் கல்யாணம் தடைப்பட்டு வருகிறது. என் ஜாதகத்தில் கெடுதல் இருந்தால் நான் என்ன செய்ய முடியும்?......

கவலை வேண்டாம்!



பாகவதர் (சாதகம் செய்து கொண்டே):—என்னப்பா, முத்து! இன்றைக்குச் சாயங்காலம் கச்சேரி இருக்கிறதே, தெரியுமோ இல்லையோ? இன்னும் வண்ணான் வரவில்லையே! நீ போய்க் கொஞ்சம் பார்த்து விட்டு ஓடி வா!

சிஷ்யன்:—அதைப் பற்றிக் கவலை வேண்டாம்! நீங்கள் இன்னும் கொஞ்ச நேரம் சாதகம் பண்ணிக் கொண்டே இருந்தால் வண்ணான் தன்னாலேயே வந்து சேருவான்!



"என்ன ஸார்! கேஸ் கட்டு பலமா யிருக்கு? முதல் தடவை யாகக் கேஸ் ஒண்ணு கிடைச் சிருக்காப்பலே யிருக்கே!"

"ஆமாம், ஸார்! மளிகைக் கடைக் காரன் பழைய பாக்கிக்காக என் மேலே கேஸ் போட்டிருக்கான்! அவனை விட்டேனா பாருங்கள்!"

அதனால்தான் நீங்களும் கல்யாணம் செய்து கொள்ளாமல் பிடிவாதமாக இருக்கிறீர்க ளாமே!......ஜாதகத்துக்காக நம்முடைய வாழ்க்கையை ஏன் நாம் பாழாக்கிக் கொள்ள வேண்டும்? .... நாம் இரண்டு ...... பேருமே......"

அவளுடைய கருத்தை உணர்ந்த ரங்க ராஜன் "என் ஜாதகப்படி நான் முப்பதா வது வயதில் இறந்துவிடுவேன். அதுவும் கோர விபத்தில் அகப்பட்டுக் கொண்டு இறப்பேன்......நாம் கல்யாணம் செய்து கொண்டு என்ன பிரயோஜனம்? ஐந்து வருஷங்களுக்குப் பிறகு உன் வாழ்க்கை யல்லவா பாழாகிவிடும்?" என்று உணர்ச்சி யோடு கூறினான்.

"இவ்வளவுதானே! என் ஜாதகப்படி நானும் என் இருபத்தினாலாவது வயதில் கோர விபத்துக்காளாகி இறப்பேனென்று இருக்கிறதாம். இப்பொழுது எனக்குப் பத்தொன்பது வயதாகிறது......ஒருவேளை நாம் இருவரும் ஓரே விபத்தில் அகப்பட்டு இறக்க வேண்டும் என்று இருக்கலா மல்லவா? அதனால்தான் நாம் விவாகம் செய்து கொள்ளலாம் என்று கூறுகிறேன். அப்பா, அம்மா, உங்கள் அப்பா, அம்மா எல்லோருக்கும் இஷ்டம்தான். என்னையே உங்களைக் கேட்கச் சொன்னார்கள்.·.·.நீங்கள் வீணாக மாப்பிள்ளையைத் தேடி அலைவது அவர்களுக்கு வருத்தமா யிருக்கிறது...... உங்கள் சம்மதத்தைச் சொல்லுங்கள். கோவிலுக்குப் போனவர்கள் வருவதற்குள் தயவு செய்து உங்கள் விருப்பத்தைத் தெரிவியுங்கள்" என்று மடமட வென்று கூறிக் கொண்டே போனாள் அவள்.

ரங்கராஜன் அப்படியே கல்லாய்ச் சமைந்தான். நடப்பது உண்மைதானா என்றே அவனால் நிர்மாணிக்க முடியவில்லை. அந்தப் பத்துப் பதினைந்து நிமிஷ நேரத்தில் அவன் மனதில் மஹேஸ்வரியைப் பற்றி ஒரு உயர்வான அபிப்பிராயமே ஏற்பட்டிருந்தது.

தட்டுத் தடுமாறிக் கொண்டு, "நான் நாளைக்கு எப்படியாவது சொல்லி விடுகி றேன். இப்பொழுது தயவு செய்து கேட்க வேண்டாம்" என்று கூறிவிட்டு அவன் எழுந்தான். அதற்குள் கோவிலுக்குப் போனவர்களும் திரும்பி விட்டார்கள்.

அன்று இரவெல்லாம் அவன் மனதில் ஒரு பெரிய போராட்டம் நிகழ்ந்தது. மறு நாள் என்னை வழியனுப்ப ஸ்டேஷனுக்கு வந்தபோதும் அதைப்பற்றியேதான் அவன் யோசித்துக்கொண்டிருந்தான். என்னுடைய அண்ணாவும் கூட இருந்ததால் அந்த விஷய மாக அவன் என்னுடன் பேச முடியவில்லை.

கடைசியில் மஹேஸ்வரியின் கட்சியே ஜெயித்தது. "நாலு வருஷங்களோ ஐந்து வருஷங்களோ குடும்பம் நடத்துவோம். பிறகு ஒன்றாக விபத்துக்கு ஆளாவோம். பிறரை மணந்து கொண்டு, அவர்களின் வாழ்க்கையைப் பாழடிப்பானேன்!" என்று அவள் கூறியதை அவன் ஒப்புக்கொண்டான்.

விவாகத்துக்கு ஏற்பாடாயிற்று!

* * *

இவ்வளவையும் சொல்லி விட்டு, "எங்கள் தலை விதிப்படி நடப்பது நடந்து விட்டுப் போகிறது; நீ என்ன சொல் கிறாய்?" என்றான் ரங்கராஜன்.

"ஏதோ உன் இஷ்டப்படியே விவாகம் நடக்கிறது. அதுதான் எனக்குத் திருப்தி!" என்று நான் சொல்லி வைத்தேன்.

அன்று ஊருக்குப் புறப்படுவதற்குள் அவனுடைய தந்தையை நான் ரகசியமாகச் சந்திக்க நேர்ந்தது. நடந்ததெல்லாம் மஹேஸ்வரியின் தகப்பனார் சூழ்ச்சி என் றும், உண்மையில் அவள் ஜாதகத்தில் விபத் தும் இல்லை மண்ணாங்கட்டியும் இல்லை என்றும் அவர் சொன்னார்.

ரங்கராஜனுக்கும் மஹேஸ்வரிக்கும் கல்யாணமாகி இன்று பத்து வருடங்களுக்கு மேலாகிறது. இதுவரை ஜாதகப்படி அவர் களுக்கு ஒரு குறைவும் இல்லை.

செல்வராஜனின் அதிர்ஷ்டம்

விஜயம்

மார்த்தாண்டன் பெரிய பணக்காரன். அவன் கடல்கடந்து சென்று வர்த்தகம் செய்து நிறையப் பணம் சம்பாதித்திருந்தான். செல்வராஜன் அவனது ஒரே மகன். அவனை மார்த்தாண்டன் மிகவும் செல்வமாக வளர்த்து வந்தான். அவன் மாளிகையைச் சுற்றிப் பெரிய நந்தவனம் அமைத்திருந்தான். அந்த அழகான நந்தவனத்தில் வானம்பாடி, குயில், கிளி, மைனா முதலிய பறவைகளெல்லாம் எப்போதும் கலகலவென்று பாடிக்கொண்டும் கூவிக்கொண்டும் இருக்கும்.

மார்த்தாண்டனுக்குப் பறவைகளின் சங்கீதத்தைக் கேட்பதில் அலாதிப் பிரியம்.

பறவைகளின் சங்கீதத்தைக் கேட்கும்போதெல்லாம் மார்த்தாண்டன் "இந்தப் பறவைகளின் பாட்டையும் பேச்சையும் புரிந்துகொள்ளும் சக்தி நமக்கு இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!" என்று சொல்லிப் பெருமூச்சு விடுவான்.

செல்வராஜனுக்கும் பறவை பாஷையைத் தெரிந்து கொள்ள விருப்பந்தான். ஆனால் அதை எப்படிக் கற்பது?

ஒரு நாள் செல்வராஜன் காட்டுப் பக்கம் போனான். அப்பொழுது சூரியன் அஸ்தமனமாக வில்லை. திடீரென்று வானத்தில் மேகங்கள் கவிந்து கொண்டு பயங்கரமாக மழை பொழிய ஆரம்பித்தது. பளீர் பளீர் என்று விநாடிக்கு விநாடி வீசிய மின்னல் ஒளியைக் கொண்டு ஒருவாறு செல்வராஜன் சமாளித்து ஒரு பெரிய மரத்தடியை அடைந்தான். அந்தச் சமயம் மரத்தின் மேலிருந்து ஒரு தூக்கணாங் குருவி கீழே விழுந்தது. செல்வராஜன் அதனிடம் இரக்கங் கொண்டு தன் மழைக் கோட்டில் அதை மறைத்து வைத்துக்கொண்டு மழை விபத்திலிருந்து அதைப் பாதுகாத்தான். மழை நின்றதும் அது தன் நன்றியைத் தெரிவிக்கும் பாவனையில் செல்வராஜனைப் பார்த்துக் கூவியது.

அதைக் கண்ட செல்வராஜன் "ஆகா, பறவைகளின் பாஷை தெரிந்தால் இப்போது எவ்வளவு சௌகரியமா யிருக்கும்!" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

"அப்பா, நீ கவலைப்படாதே! நீ இங்கேயே எங்களுடன் மூன்று நாள் தங்கினால் உனக்குப் பறவைப் பாஷையைச் சொல்லிக் கொடுத்து விடுகிறேன்!" என்று மனித பாஷையில் அந்தத் தூக்கணாங்குருவி சொல்லியது. செல்வராஜன் மூன்று நாள் காட்டிலேயே தங்கியிருந்து பறவைப் பாஷையை நன்றாய்த் தெரிந்து கொண்டான். அவனுக்கு எந்தப் பறவை எப்படிக் கத்தினாலும் அர்த்தம் விளங்கியது.

செல்வராஜன் வீட்டுக்கு வந்ததும் தன் தாய் தந்தையர்களிடம் காட்டில் நடந்ததையெல்லாம் உற்சாகமாக அவர்களிடம் சொன்னான். ஆனால் அவர்கள் அதை நம்பவில்லை.

செல்வராஜன் மாத்திரம் அன்றைய தினத்திலிருந்து எந்தப் பறவை கத்தினாலும் மிகவும் கவனமாகக் கேட்பான்.

அன்று அதிகாலையில் எழுந்து வழக்கம் போல் செல்வராஜன் நந்தவனத்துக்குச் சென்றான். அப்போது மாமரக் கிளையில் ரம்மியமான நீல வர்ணக் குருவி ஒன்று உட்கார்ந் திருந்தது. செல்வராஜனைக் கண்டதும் அது தன் அற்புதமான சிறகுகளைப் படபட வென்று அடித்துக் கொண்டு 'கல கல' என்று ஏதோ அதன் பாஷையில் பேசியது. செல்வராஜன் மிகவும் ஆவ



லாக அந்தப் பேச்சைக் கேட்டான். அவனுக்கு அர்த்தம் நன்றாய் விளங்கியது.

"வியாபாரியின் மகன் செல்வராஜன் சீக்கிரம் கடல்கடந்து சென்று அரசன் மகனாவான்" என்று அந்தக் குருவி சொல்லியதைக் கேட்ட செல்வராஜனுக்கு ஆச்சரியமாயிருந்தது. ஆனால் அவன் இதைவிட்டில் யாரிடமும் சொல்லவில்லை.



இது நடந்து நாலைந்து வருஷங்கள் ஆகிவிட்டன. செல்வராஜன் ஒரு நாள் மாலை கடற்கரை மணலில் உட்கார்ந்து நீலக் கடலில் சுருண்டு விழும் வெண்ணிற அலைகளைப் பார்த்துக்கொண்டேயிருந்தான். அப்போது ஏழெட்டு முரட்டு மனிதர்கள் திடீரென்று தோன்றிச் செல்வராஜனைச் சுற்றி வளைத்துக் கொண்டு கையையும் காலையும் கட்டித் தூக்கிச் சென்றனர்.

செல்வராஜன் மயக்கம் தெளிந்து பார்த்தபோது, தான் ஒரு கப்பலில் இருப்பதைத் தெரிந்துகொண்டான். கப்பல் மாலுமி அவனுக்கு அன்போடு ஆகாரம் கொடுத்து, கப்பற் கொள்ளைக்காரர்களிடம் சிக்கி அவன் படகில் போய்க்கொண்டிருந்தபோது அவர்களைச் சுட்டு வீழ்த்தி அவனைக் காப்பாற்றிய கதையைச் சொன்னான். செல்வராஜன் அவனுக்கு நன்றி தெரிவித்தான்.

அந்தக் கப்பலில், முன்பு செல்வராஜன் நந்தவனத்தில் பார்த்த அதே மாதிரி நீல வர்ணக் குருவி தங்கக் கூட்டில் வைக்கப்பட்டிருந்தது. அது மிகவும் சோகக் குரலில் கூவியது. செல்வராஜனுக்கு அது புரிந்துவிட்டது.

"இன்னும் சில மணி நேரத்துக்குள் கடும் புயல் வீசப் போகிறது. அதற்குள் சாமர்த்தியமாகக் கப்பலைச் சமீபத்திலுள்ள தீவு ஒன்றை நோக்கிச் செலுத்தினால் தப்பலாம்! பறவைப் பாஷை எனக்குத் தெரியுமாதலால் நான் இதை அறிந்துகொண்டேன்!" என்று கப்பல்மாலுமியிடம் செல்வராஜன் சொன்னான்.

அதற்கேற்றாற்போல் சற்று நேரத்துக்கெல்லாம் பயங்கரமாகப் புயல் வீசியது. மாலுமி நடுங்கிவிட்டான். ஆனால் அதற்குள் அதிர்ஷ்டவசமாகக் கப்பல் சேதம் ஒன்றும் அடையாமல் ஒரு தீவின் கரையை அடைந்தது.

அந்த ஊர் அரசன் அரண்மனையில் நான்கு காகங்கள் விடாமல் கரைந்தன. அவற்றை யாராவது விரட்டிவிட்டால் அவருக்குத் தன் பெண்ணைக் கொடுத்துச் சகல ஐசுவரியங்களும் கொடுப்பதாக அந்த அரசன் விளம்பரம் செய்திருந்தான்.

செல்வராஜன் இந்த விளம்பரத்தைக் கண்டதும் சந்தோஷத்துடன் அரண்மனைக்குச் சென்றான். அரண்மனையில் நான்கு காகங்கள் வரிசையாக உட்கார்ந்து பலமாகக் கரைந்தன. காகங்கள் கூறுவதைக் கவனித்துக் கேட்டான். அரண்மனைத் தோட்டத்திலிருந்த ஆலமரத்தில் கூடு கட்டிக்கொண்டு வசிக்கத் தங்களுக்கு இடம் கொடுக்கும்படி அவை கேட்டன. இதைச் செல்வராஜன் அரசனிடம் சொன்னான். அரசன் காகங்களுக்குக் கூடு கட்டிக் கொள்ள இடம் அளித்தான். காகங்கள் அப்புறம் அரண்மனைப் பக்கம் வருவதுமில்லை; கரைவதுமில்லை.

அரசன் சந்தோஷத்துடன் செல்வராஜனுக்குத் தன்னுடைய அருமைக் குமாரியை மணம் செய்வித்தான். அரசனுக்குப் பிள்ளை இல்லையாதலால் ராஜ்யத்தையும் செல்வராஜனே நிர்வகித்தான். பிறகு, ஒரு கப்பலை அனுப்பித் தன் தாய் தகப்பன்மார்களையும் அவன் தன்னுடைய ராஜ்யத்துக்கே அழைத்துக் கொண்டான்.

அக்கப் போர்

ரா. கி.

வழக்கம்போல் உலாவச் செல்ல நண்பர் சோமசுந்தரத்தை அழைக்கச் சென்ற போது அவர் தமது கைகளால் முகவாய்க் கட்டையை அழுக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தார். காலையில் நன்றாக இருந்தாரே, அதற்குள் என்ன வந்து விட்டது என்பதொன்றும் புரியாமல், "என்ன ஸார்! பல்வலியோ?" என்றேன். "அதை ஏன் ஸார் கேட்கிறீர்கள்? தெரியாத்தனமாக என் பையனின் எஸ். எஸ். எல். ஸி. தமிழ்ப் புத்தகத்தைப் படிச்சுட்டேன். படிப்பதற்குள் இரண்டு மூன்று பல் உதிர்ந்து போய்விட்டது! வாயெல்லாம் ஒரே வலி!" என்றார். தமிழ்ப் புத்தகம் பல்வலி மருந்தாகவும் அல்லவா மாறி விட்டது? எஸ். எஸ். எல். ஸி. மாணவ மாணவிகள் சிறுவயதிலேயே கிழவர்களாகவும், பாட்டிகளாகவும் மாறப்போவதை நினைக்க எனக்கு அவர்கள் மேல் பரிதாபம் உண்டாகிறது!

★

ராஜஸ்தான் பிரதமர் பண்டித ஹீராலால் சாஸ்திரி அவர்கள் சமீபத்தில் ஜெய்ப்பூருக்கருகில் ராஹுட் என்ற ஊரில் ஒரு விவசாயிகள் மகாநாட்டை ஆரம்பித்து வைத்துவிட்டுப் பின் வரும் தீர்மானத்தையும் செய்து கொண்டார். "எனக்கு வேண்டிய உடைகளுக்கு வேண்டிய நூலை நானே நூற்றுக் கொள்வது போல் எனக்கு வேண்டிய உணவு தான்யங்களையும் நானே விளைவித்துக் கொள்ளப் போகிறேன். அதற்கான முயற்சிகளையும் செய்யப் போகிறேன்."

எனக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பொறுத்தவரை காணும் ஒரு கொள்கையை அனுஷ்டித்துக் கொண்டுதான் வருகிறேன். அதாவது எனக்குத் தேவையான உணவுப்பொருளை நானே சாப்பிடுவது என்ற கொள்கைதான் அது.

★

திருப்பதிக்கும் திருச்சானூருக்குமிடையே சர்க்கார் பஸ் விடப் போவதால் தங்கள் ஜீவனத்திற்குப் பாதகம் ஏற்படும் என்று மாட்டு வண்டிக்காரர்கள் பலர் மந்திரி கனம் கோபால் ரெட்டியிடம் விக்ஞாபனம் செய்து கொண்டனர். சர்க்கார் மேற்படி வழியில் பஸ் விடுவதால் மேற்படி வண்டிக்காரர்களுக்கு ஒரு பாதகமும் ஏற்படாது என்றும், அதற்கு மாறாக சர்க்கார் பஸ்ஸை நம்பி ஏமாறுபவர்களிடமிருந்து ஒன்றுக்கு இரண்டாக வண்டிச் சத்தம் கிடைக்கும் என்றும் சென்னையில் வண்டி ஓட்டுபவர்களும் ரிக்ஷா இழுப்பவர்களும் அவர்களுக்குத் தைரியம் கூறலாம்.

★

'தாம் சிறு பையனாக இருந்த போது வெகு சாமர்த்தியமாகத் தம் தாயாரின் மணி பர்ஸிலிருந்து எட்டணா திருடியதாகவும் திருடிய குழந்தைகளைக் கிரிமினல் கைதிகளைப் போல் நடத்துவது கூடாது என்றும் பம்பாய் பிரதமரும் கல்வி மந்திரியுமான பி. ஜே. கெர் கல்வி மந்திரிகள் மகாநாட்டில் கூறினார்.

இதைப் படித்த பிறகு பல தாய்மார்கள் தங்கள் மணிபர்ஸில் எட்டணாவைப் போட்டுவிட்டுப் பிள்ளைகள் கண்ணுக்குத் தெரியுமிடத்தில் விட்டு வைப்பதாகத் தெரிகிறது.

★

"வர வர இந்த [illegible] ஆகி விட்டது" என்று ஒரு கட்டுரையில் ஒரு வாக்கியம் காணப்பட்டது. இந்த வாக்கியத்தில் ஏற்பட்டிருக்கும் அச்சுப் பிழையே அதற்குப் போதுமான சான்று.

★

புதிதாக மணம் புரிந்து கொண்ட பிரபல எழுத்தாள நண்பரைப் பல நாட்களுக்குப் பிறகு வீதியில் சந்தித்தேன்.

"என்ன மிஸ்டர் குப்புசாமி! கலியாணமான பிறகு கதைகள் எழுதுவதற்கு நேரமில்லை போலிருக்கு! எங்கே உங்களது கதைகளையே பத்திரிகைகளில் காணுவதில்லை" என்று கேட்டேன்.

குப்புசாமி சிரித்தார். "உங்களுக்குத் தெரிந்தது இவ்வளவுதான்! 'சங்கரி குப்புசாமி' என்ற பெயரில் வரும் கதைகளை எழுதுபவர் யாரென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்றார்.

சாந்தாவின் பரிசு



சாந்தா தன் அலுவல்களை முடித்துக் கொண்டு கணவனை வரவேற்கத் தயாராக வாசலில் வந்து நிற்பதற்கும் மணி ஏழு அடிப்பதற்கும் சரியாக இருந்தது. இவ்வரவேற்புக்குச் சாந்தாவின் கணவன் வெளியூரிலிருந்து எதிர்பார்க்கப்படவில்லை. ஆபீஸிலிருந்து வருகைக்குத்தான் அத்தனை ஜரூர்! குடித்தனம்நடத்த ஆரம்பித்து ஒரு வருடமே ஆகியிருந்ததால் புதுக் கருக்கு அழியாமலிருந்தது அவர்களது இல்லற வாழ்க்கை. வழிமேல் விழி வைத்திருந்த வனிதையை நோக்கி வெகு விரைவாக வீடு வந்தான் கணவன் சம்பத்.

வந்ததும் வாராததுமாகக் கையிலிருந்த காகிதப் பொட்டலத்தை மேஜையில் வைத்து விட்டு "சாந்தா! இதற்குள் என்ன இருக்கிறது என்று சொல், பார்ப்போம்!" என்றான் மந்தகாசத்துடன். அதைக் கண்டு பிடிக்கச் சோதிடக் கலையில் பரிச்சயம் ஒன்றும் தேவையாக இருக்கவில்லை. பொட்டலத்தின் பரிமாணமும் உண்மையைப் பறையறைந்து தெரிவித்தது. முகத்தில் புன்னகை தவழ "இது தெரியாதா? புடவைதான்" என்றாள் சாந்தா. மணமானது முதல் சாந்தாவுக்குப் புடவை வாங்கிக் கொடுக்கும் சந்தர்ப்பமே சம்பத்துக்கு வாய்க்கவில்லை. எனவே சாந்தா புடவையைப்பார்க்க மிகவும் ஆவலுற்றாள். "அப்பப்பா! சிறு குழந்தையைப் போல் ஆசையைப் பார். நல்ல புடவைதான். ஆபீஸில் காரியதரிசி வாங்கினாராம். வீட்டில் பிடிக்கவில்லையாம். கடையில் திருப்பி எடுத்துக் கொள்ள மறுத்து விட்டார்களாம்.



சென்ற லக்ஷ்மியிடம் ஏதோ ஒரு நீலப் புடவையைப் பற்றி வர்ணனை செய்து கொண்டிருந்தாயே. அதனால் உனக்குப் பிடிக்குமென்று வாங்கி வந்தேன். உனக்குப் பிடித்திருக்கிறதா, சொல்" என்று கூறிப் பெருமையுடன் பொட்டலத்தைப் பிரித்தான். மறைந்திருந்த புடவை மெல்லத் தலையைத் தூக்கியது. ஆனால் ... என்ன ஏமாற்றம்! சாந்தாவின் முகம் களையிழந்து விட்டது. அவள் குறித்தது லேசான நீலமாக இருக்க அவனெதிரில் இருந்த புடவையோ கருத்த நீலநிறமாக இருந்தது!

முன்னொரு சமயம் அவள் தந்தை இதே வர்ணத்தில் விலையுயர்ந்த பட்டுப் புடவை எடுத்து வந்தபோது என்ன கலாட்டா செய்து விட்டாள்! "போங்கள் அப்பா! போயும் போயும் இந்த நிறத்தில்தான் புடவை வாங்கத் தெரிந்ததாக்கும் உங்களுக்கு! பாட்டியம்மாதான் இந்தப் புடவையை விரும்புவாள். எனக்கு வேண்டவே வேண்டாம்" என்று பிடிவாதமாகக் கூறி விட்டாள். செல்லப் பெண்ணைத் திருப்தி செய்ய வேண்டித் தந்தை திரும்பவும் பெண்ணை அழைத்துக் கொண்டு கடைக்குப் போனார். 'லைட்' கலர்ப் புடவை ஒன்று சாந்தாவின் கையில் ஏறியது; அவளுடைய அதரங்களிலும் புன்னகை தோன்றியது.

ஆனால் அச் சம்பவம் நடந்து நான்கு வருஷங்களாகி விட்டன. சிறு வயதிலிருந்த அந்தப் பிடிவாதம் மறைந்து பொறுப்பும் அடக்கமுமாகப் பரிணமித்திருந்தது. தந்தை கொடுத்த சலுகையை அவள் சம்பத்திடம் எதிர்பார்க்கவில்லை, விரும்பவுமில்லை. மேலும் கணவன் வாங்கித் தந்த புடவையை எந்த வாயால் குறை கூறுவது?

ஆகவே, "புடவை நன்றாக இருக்கிறது. விலை என்ன?" என்றாள். "விலை என்னவாயிருந்தால் என்ன? உனக்குப் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டான் சம்பத். "ஆமாம், நீங்கள் இன்னும் காபி கூடக் குடிக்கவில்லையே, கை கால் அலம்பிக் கொள்ளுங்கள்" என்று பேச்சை மாற்றிப் புடவையை எடுத்துப் பெட்டியில் வைத்தாள். மறுநாட் காலை சம்பத் ஆபீசுக்குச் செல்லும் வரை அதைப் பற்றிய பேச்சே சாந்தா எடுக்கவில்லை.

சிருத்துடன் கணவனுக்குப் பணிவிடை செய்து ஆபீசிக்கு அனுப்பிய பிறகு சாந்தாவின் மனம் புடவையின் மேல் சென்றது. அவளைப் பொறுத்த மட்டில் அவள் பெருத்த ஏமாற்றம் அடைந்திருந்தாள். அது மட்டுமன்றி கணவன் முதன் முதலாகத் தனக்கு வாங்கிக்கொடுத்த புடவையைத் தான் மனதார விரும்பி ஏற்றுக் கொள்ள முடியாமற் போனது அவளுக்கு மிகவும் மனத்தாங்கலாக இருந்தது.

"மாமி! மாமி!" என்று கதவைத் தட்டிக் கூப்பிட்ட குரல் சாந்தாவின் எண்ணங்களுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தது. எழுந்து கதவைத் திறந்தாள். "மாமி! எங்கள் கிராமத்திற்கு நாங்கள் நாளைக்கே போய் விடுவதென்று ஏற்பாடாகி விட்டது. உங்களிடம் சொல்லிக் கொண்டு போகலாமென்று வந்தேன். எங்களை மறந்து விட மாட்டீர்களே?" என்று கூறிக் கொண்டே வந்தாள் லக்ஷ்மி.

"உட்கார், லக்ஷ்மி! இதென்ன திடீர் ஏற்பாடு? உங்கள் அப்பா விடமிருந்து கடிதம் வந்ததா? அதைச் சொல், முதலில்!" என்றாள் சாந்தா. "அப்பாவுக்கு எங்கேயும் வேலை கிடைக்க வில்லையாம்" என்று சுருக்கமாக லக்ஷ்மி கவலையுடன் சொன்னாள்.

லக்ஷ்மியின் தந்தை சாந்தாவின் வீட்டுக் கருகே பத்துக் குடித்தனங்கள் இருந்த ஒரு வீட்டில் பதினோராவது குடும்பமாகச் சேர்ந்து இருந்தார். லக்ஷ்மிக்கு நான்கு சகோதரிகளும் மூன்று சகோதரர்களும் இருந்தனர். அத்தனை சந்தானத்தை அவருக்கு அளித்திருந்த விதி தகுந்த சம்பளத்தை மட்டும் அளிக்க மறந்து விட்டது. ஏதோ ஒரு கம்பெனியில் ஐம்பது ரூபாய்ச் சம்பளத்தில் அவர் குமாஸ்தாவா யிருந்தார். நாலைந்து மாதங்களாக அந்த வேலையும் போய் விட்டதால் அவருடைய குடும்பம் மிகவும் பரிதவித்தது. வேலைக்குப் பிரயத்தனம் செய்ய வெளியே சென்ற அவர் எங்கும் 'இல்லை' என்ற பேச்சைத்தான் கேட்டார். பட்டணத்து வாழ்க்கையை விடக் கிராமவாசம் எளிதாக இருக்கலாம் என்று பூர்வீகக் கிராமத்துக்குப் புறப்பட்டு வந்துவிடும்படி மனைவிக்கு எழுதி இருந்தார்.

சம்பத் வேலை நிமித்தமாக அடிக்கடி வெளியூர் போக வேண்டி யிருக்கும். அப்பொழுதெல்லாம் லக்ஷ்மிதான் சாந்தாவுக்குத் துணை இருப்பது வழக்கம். ஒரு தரம் சாந்தா ஜுரத்தில் படுத்து, சம்பத்தும் லீவு கிடைக்காமல் தவித்தபோது லக்ஷ்மியின் பணிவிடையே அவளைக் காப்பாற்றிக் குணப்படுத்தியது. ஆகவே, ஒரு வெள்ளிக்கிழமையன்று லக்ஷ்மியைக் கூப்பிட்டு சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு புடவையை வெற்றிலை பாக்கில் வைத்துத் தரவேண்டுமென்று சாந்தா விரும்பினாள். சம்பத்தும் அதற்குச் சம்மதித்திருந்தான்.

சாந்தாவின் மனதில் மின் வெட்டுப் போன்ற ஒரு யோசனை உதயமாயிற்று. அந்த நீலப்புடவையை லக்ஷ்மிக்குப் பரிசாகக் கொடுத்து விட்டால் என்ன? அன்று வெள்ளிக்கிழமை வேறு. நல் புடவை தானே! தான் வேறு வாங்கிக் கொண்டால் போயிற்று! லக்ஷ்மி ஊருக்குப் போவதற்குள் கடைக்குப் போய்ப் புடவை வாங்கி வருவதென்பது முடியாத காரியம்.


மாநிறமானவர்கள் ஆழ்ந்த நிறம் உடுத்தினால் இன்னும் கருப்பாக எடுத்துக்காட்டும். சிவந்த தேகத்துக்கு இன்னும் அது நன்றாக எடுத்துக் காட்டும் என்று எங்கோ யாரோ கூறியதைச் சாந்தா கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தாள். 'லக்ஷ்மியோ நல்ல சிவப்பு. கருத்த நீல நிறம் அவளுடைய அழகுக்கு அழகு செய்வது போல் இருக்குமே!' என்று எண்ணினாள்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு லக்ஷ்மி வீட்டுக்குப் போக எழுந்தாள்.



டாக்டர்:— உடம்பில் கோளாறு ஒன்றும் தெரியவில்லையே! எப்போது படுத்துக் கொண்டார்?

செட்டியாரின் மனைவி:— அதை ஏன் கேட்கிறீர்கள்? பத்து நாளைக்கு முன்பு ஒரு பவுண்டன் பேனா வாங்கினார். பேனா விற்பவன் 'அது உங்கள் ஆயுசு பூராவும் உழைக்கும்' என்றானாம். நேற்று பேனா எழுதவில்லை. உடனே படுத்தவர்தான், இனிப் பிழைக்க மாட்டேன் என்று கத்துகிறார்.



வந்தவர் :—சபாஷ்! புதிதாக ரேடியோ வாங்கினீர்களாக்கும்! இது என்ன, ஏ.ஸி.யா? அல்லது, டி.ஸி.யா?

வீட்டுக்காரர்:—ஏ.ஸி.யும் இல்லை, டி.ஸி.யும் இல்லை, ஸார்! ஓ.ஸி.தான். அத்தான் வீட்டிலிருந்து நாலு நாளைக்கு இரவல் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன்!

"என்ன அவசரம், லக்ஷ்மி! சாயந்திரம் மாமா வந்ததும் போகலாம்" என்றாள்.

"இல்லை மாமி! டவுனுக்கு வேறு போக வேண்டுமாம். எப்பொழுதாவது பட்டணத்துக்கு வந்தால் உங்களை வந்து, பார்க்கிறேன். கிராமத்துக்குப் போனுலாவது எங்கள் தரித்திரம் விடியுமோ என்னவோ?" என்று சொன்னபோது லக்ஷ்மியின் கண்களில் நீர் ததும்பிற்று.

"வருத்தப்படாதே, கூடிய சீக்கிரமே ஏதாவது வேலை கிடைத்து விடும் உன் அப்பாவுக்கு. எல்லாவற்றுக்கும் கடவுள் இருக்கிறார். இதோ இந்தப் புடவையை நான் கொடுக்கும் சின்னப் பரிசாக ஏற்றுக் கொள். ஆனால் நீ செய்திருக்கும் உதவிக்கெல்லாம் நான் எப்படிக் கைம்மாறு செய்வேன்?" என்று உணர்ச்சியுடன் கூறியவாறே சாந்தா புடவையை எடுத்து லக்ஷ்மியிடம் கொடுத்தாள்.

• • •

லக்ஷ்மி விடைபெற்றுக் கொண்டு சென்றாள். சாந்தாவும் தன் அலுவல்களில் ஈடுபட்டாள். நேரம் செல்லச் செல்ல அவள் மனதில் ஒரு போராட்டம் எழுந்து விறுவிறுப்பை அடைந்தது. சற்று முன்பு லக்ஷ்மிக்குப் புடவையைக் கொடுப்பதற்கு அனுகூலமாகப் பேசிய மனது பிறகு அவளுடைய செய்கையைக் கண்டித்து அவளைக் குற்றம் சாட்டத் தொடங்கியது. 'உன் கணவர் உனக்கென்று ஆசையாக வாங்கி வந்த புடவையைத் தூக்கி இன்னொருத்திக்குக் கொடுக்க உனக்கு எப்படி மனம்வந்தது? எத்தனையோ புடவைகள் உடுத்திக் கொள்ளப் போகிறாய். அதன் நடுவே இந்த நீலநிறப் புடவையை உடுத்திக் கொண்டால்தான் என்ன? நீ ஒன்றும் உன்னையே அழகு பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை. உன் கணவன் பார்த்து மகிழ்ந்தால் அதுவே போதுமல்லவா? அவர் வந்தவுடன் இன்று வெள்ளிக்கிழமை என்று அதை உடுத்திக்கொள்ளச் சொன்னால் நீ என்ன பதில் சொல்லப் போகிறாய்?" என்றெல்லாம் குறுக்கு விசாரணை செய்யத் தொடங்கியது. சாந்தா தவித்துப் போய் விட்டாள். இன்றுவரை அவர்கள் வாழ்வில் இன்பகரமான தென்றல் வீசிக் கொண்டிருந்ததே ஒழிய அனல் காற்றோ, புயல்காற்றோ தலைகாட்டியதில்லை. இன்று ஒரு புயலின் சூசகங்கள் தோன்றின. சாந்தாவே குற்றவாளி. இனி என்ன வென்று சொல்ல? சம்பத் கோபமாகப்பேசிக் கேட்டதே இல்லை, சாந்தா. ஆனால் நடந்த விஷயத்தைக் கேட்டால் யாருக்குத்தான் கோபம் வராது? ஒரு நாள் அவகாசம் கிடைத்தால் நடந்ததை நாசுக்காகச் சொல்லி விடலாம். ஆபீஸிலிருந்து வந்தவுடனேயே புடவையைப் பற்றிப் பேச்செடுத்தால்? களைத்து வரும் கணவனிடம் தான் செய்த தவறை எவ்வாறு எடுத்துரைப்பது?' என்ற கலக்கம் அவளை வருத்தியது.

சமையலறையில் புகுந்த சாந்தா முடுக்கி விட்ட இயந்திரம்போல் ஏதோ காரியம் செய்து கொண்டிருந்தாளே தவிர அவள் மனதுமட்டும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது. எத்தனை நேரம் அவ்வாறு யோசனையில் ஆழ்ந்திருந்தாளோ, அவளுக்கே தெரியாது. "சாந்தா! வெள்ளிக்கிழமையும் அதுவுமாக விளக்குகூடப் போடாமல் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டுக் கொண்டே சமையலறைக்குள் வந்துவிட்டான் சம்பத். கணவன் முகத்தில் உற்சாகம் ததும்பியதைக் கண்டு சிறிது தைரியமடைந்தாள். ஆனால் அடுத்தபடியாக அவன் கேட்ட கேள்வி அவளைத் திடுக்கிடச்

செய்தது. "நேற்று வாங்கிவந்த புடவை எங்கே? கொண்டு வா!" என்றான்.

சாந்தா மென்று விழுங்கிக்கொண்டே, "இதோ வந்துவிட்டேன்" என்று மழுப்பி விட்டுக் கையைக் கழுவிவரச் சென்றாள். சம்பத்தோ பதிலொன்றும் எதிர்பாராமலே கூடத்திலிருந்து, "அது கிடக்கட்டும்; அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். இதற்கென்று நீ மாடிக்குப் போகவேண்டாம். முதலில் இங்கே வா" என்று கூப்பிடவே அவளுக்குப் பாதி உயிர் வந்தது.

சம்பத்தின் கையில் திகழ்ந்த அவளுக்குப் பிடித்த நீலநிறப் பட்டுப்புடவை ஒன்று அவளை 'வா' என்றழைத்தது. "நேற்று அந்தப் புடவை வாங்கவேண்டி வந்ததால் வாங்கினேனே ஒழிய என் மனது அதில் இல்லை. நான் முதன்முதல் உனக்கு வாங்கிக் கொடுப்பது பட்டாக இருக்க வேண்டுமென்று இன்றே அவசரமாக வாங்கி வந்தேன், உனக்கு எது பிடிக்கிறது? இதுவா, நேற்று வாங்கி வந்ததா?" என்று கேட்ட போது சாந்தா இந்த உலகத்திலேயே இல்லை. தேவலோகத்தில் சஞ்சரிப்பது போன்ற ஒரு இன்ப உணர்ச்சியில் மூழ்கியிருந்தாள். "இந்த நிறம்தான் எனக்கு மிகவும் பிடித்தது" என்றாள் சாந்தா.

"அப்படியானால் நேற்றைய புடவையை தீபாவளியின் போது வேலைக்காரிக்குக் கொடுத்து விடு. இன்று வெள்ளிக்கிழமை அல்லவா? இப்பொழுதே போய் இதை உடுத்தி வா, பார்க்கலாம்" என்றான் சம்பத்.

ஐந்து நிமிஷத்தில் புதுப் புடவையை உடுத்திக்கொண்டு திரும்பி வந்து சாந்தா தனக்கு நமஸ்காரம் செய்தபோது சம்பத்தின் வதனத்தில் குதூகலம் தவழ்ந்தது. மன்னிப்புக் கோரிப் பெற அதுதான் உற்ற சமயமென்று சாந்தா நடந்ததை விவரமாக ஒப்பித்தாள்.

"கண்ணீ! இந்தச் சமயத்தில் மனதை அனாவசியமாக அலட்டிக் கொள்ளக்கூடாது என்று எத்தனை தரம் சொல்வது? நீ இந்த மாதிரி பயப்படுவதற்கு நான் என்ன புலியா, கரடியா?" என்று கூறிக் குறும்புச் சிரிப்புச் சிரித்தான் சம்பத்!

காலக்ஷேபம்

வாஸ்தவம்!

எஜமான்:—அடே முனிசாமி, அடுத்த தெரு அப்பாசாமியை அழைத்துக் கொண்டு வா! போ, சீக்கிரம்!

முனிசாமி:—அவர் வீட்டிலே இல்லாவிட்டால்......?

எஜமான்:—பிள்ளையார் கோவிலிலே சீட்டாடிக் கொண்டிருப்பார்......

முனிசாமி:—அங்கேயும் இல்லாவிட்டால்?

எஜமான்:—கிராம முனிசிப்பு வீட்டிலே பேசிக்கொண் டிருப்பார்......

முனிசாமி:—முனிசிப் வீட்டிலும் இல்லாவிட்டால்......?

எஜமான் (கோபத்துடன்):— போடா, முட்டாள்! பேசாமல் வந்துவிடு!

முனிசாமி:—அதுக்கு ஏன் போகணுங்க?

★

அவர் கவலை!

மாடியிலிருந்து விரைவாக ஓடிவந்த வேலைக்காரன் மாடிப்படிகளில் உருண்டு விட்டான்.

வீட்டுக்காரர்:—ஏனப்பா! பார்த்து இறங்கக் கூடாது. மாடிப்படி உடைந்தால் எவன் பணம் போட்டுக் கட்டுகிறது?

அவசரம் இல்லை!

தர்மிஷ்டர்:—இந்தா, இந்தச் சட்டையை வாங்கிக்கொள். கொஞ்சந்தான் கிழிந்திருக்கிறது. ஐந்து நிமிஷத்தில் தைத்து விடலாம்!

பிச்சைக்காரன்:—எனக்கு ஒன்றும் அவசரம் இல்லிங்க. உட்கார்ந்திருக்கிறேன்!

★

நல்லது!

"உங்கள் மண வாழ்க்கை எப்படி?"

"அவளைக் காதலித்த காலத்தில் நான் பேசினேன்; அவள் கேட்டாள். கல்யாணமானதும் அவள் பேசினாள்; நான் கேட்டுக் கொண்டிருந்தேன். இப்போது நாங்கள் இருவரும் பேசுகிறோம்; அண்டை அயல் வீட்டார் எல்லோரும் கேட்கிறார்கள்!"

★

பழக்கம்

மாஜிஸ்டிரேட்:—நீ சில இரும்பு ஆயுதங்களோடு கட்டிடத்துக்கு அடியிலேயே ஒண்டிக் கொண்டிருந்ததாகச் சொல்லுகிறார்களே, அதற்கு நீ என்ன சொல்லுகிறாய்?

குற்றவாளி:—நான் மோட்டார் ரிப்பேர் செய்கிறவனுங்க; அந்தப் பழக்கத்திலே அப்படிப் படுத்துவிட்டேனுங்க!

படித்துப் பார்!

ஹிந்தி போதினி

டாக்டர் ஸ்ரீ அனந்தாச்சாரியைப் பல வருஷ காலமாகத் தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். வாழ்க்கையில் அவருக்கு மிகவும் பிடித்தமான தொண்டுகள் இரண்டு. காலஞ் சென்ற சங்கீத வித்வான் ஸ்ரீ கிட்டப்பாவின் புகழைப் பரப்புவது ஒன்று; ஹிந்தி பாஷையைப் பரப்புவது மற்றொன்று. ஹிந்தியைச் சுலபமாகப் பரப்புவதற்கு என்ன வழி என்பதை ஆராய்ந்து, கொஞ்ச காலத்துக்கு முன்பு ஹிந்தி போதினி என்று ஒரு புத்தகத்தை வெளியிட்டார். அது இப்போது இரண்டாம் பதிப்பாக வெளிவந்திருக்கிறது. மற்ற ஸ்வபோதினிகளை விட இது பல வகையிலும் சிறப்பாக விளங்குகிறது. எல்லோரும் வெகு சுலபமாக ஹிந்தி பேசவும் எழுதவும் கற்றுக் கொள்வதற்கான நூதன முறை இதில் கையாளப்பட்டிருக்கிறது. மூளையைக் குழப்பாத வகையில் இலக்கணமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு விஷயமும் பெரிய எழுத்தில் வெகு தெளிவாகப் பல படங்களுடன் அச்சிடப்பட்டிருக்கிறது. புத்தகத்தைப் பார்க்கும்போதே ஹிந்தி படிக்க வேண்டும் என்ற உணர்ச்சியை உண்டாக்குகிறது. இந்தப் புத்தகத்தின் ஒரு பிரதியை வாங்கி வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தால் சில மாதத்துக்குள்ளே ஹிந்தி நன்றாகப் பேசவும் எழுதவும் கற்றுக் கொண்டு விடலாம். விலை ரூ. 2—8—0. விலாசம்: கிட்டப்பா பிரசாராலயம், வாலாஜா பேட்டை, வட ஆற்காடு.

ஹிந்துமத திருத்தச் சட்டம்

கொஞ்ச காலத்துக்குமுன் இந்திய சட்ட சபையில் விவாகரத்து, பலதார விவாகம், பெண்களின் சொத்துரிமை முதலியவற்றைப் பற்றிக் காரசாரமான விவாதங்கள் நடந்தன. பல பத்திரிகைகளும் பத்தி பத்தியாக இது சம்பந்தமான விவாதங்களைப் பிரசுரித்தன. இந்த மசோதா மக்களிடையே மிகவும் பரபரப்பை உண்டு பண்ணியது என்பது எல்லோருக்கும் நன்கு தெரிந்த விஷயம். அம் மசோதாவைப் பற்றியும் அதன் சட்ட நுணுக்கங்களைப் பற்றியும் இப்புத்தகத்தில் விரிவாக ஹிந்தி மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. விலை 4 அணா.

இந்திய சுதந்திர உரிமைப்பத்திரம்

இச்சிறு புத்தகத்தில் மதச் சார்பற்ற அரசாங்கத்தின் ஆட்சிமுறை, மக்களுடைய ஜீவாதாரமான உரிமைகள், வயது வந்தோருக்கு வோட்டுரிமை, தீண்டாமை ஒழிப்பு ஆகிய அரசியல் நிர்ணய சபையின் நடவடிக்கைகளைப் பற்றி ஹிந்தி மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. விலை அணா 6.

இவ்விரண்டு புத்தகங்களும் ஹிந்தி தெரிந்த தமிழன்பர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். கிடைக்குமிடம்: விநியோக அதிகாரி, பிரகா இலாக்கா, பழைய செக்ரடேரியேட் கட்டிடம், டில்லி.

வீர பாண்டியக் கட்ட பொம்மன்

ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு, வீரத்தின் விளை நிலமாகிய தமிழகத்திலே தோன்றிய ஒரு குறுநில மன்னன் தன்னந் தனியாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வீரப்போர் புரிந்தான். அவன் தான் வீரபாண்டியக் கட்ட பொம்மன். "மழை பெய்கிறது; பூமி விளைகிறது; மற்றவர்களுக்கு வரிப்பணம் எதற்காகக் கட்டவேண்டும்?" என்று சுதந்தரச் சங்கை முழக்கினான் வீரபாண்டியன். அவனுடைய வீரத்தைப் பாராட்டிக் கர்ண பரம்பரையாக எத்தனையோ கதைகளும் நாடோடிப் பாட்டுக்களும் வழங்கி வருகின்றன. வீர பாண்டியக் கட்ட பொம்மனை இப் புத்தகத்தின் மூலம் நம் கண்ணெதிரே கொண்டுவந்து காட்டுகிறார் ஸ்ரீ ம. பொ. சிவஞானம். ஸ்ரீ சிவஞானத்தின் தமிழ் நடையிலே கத்திகள் டக்-டக்கென்று ஒன்றோடொன்று ஒலிக்கும் ஓசையும் துப்பாக்கிக் குண்டுகள் ஒயீல் ஒயீல் என்று பாயும் பெரு முழக்கமும் நம் காதில் விழுந்து நம்மைத் துள்ளி எழச் செய்கிறது. விலை ரூ. 1—12—0. விலாசம். இன்பநிலையம், மயிலாப்பூர், சென்னை.

திருத்தம்

1. பெண் உள்ளம் என்ற கலைமகள் பிரசுரத்தின் விலை ரூ. 3–8–0; அது கலைமகள் நாவல் போட்டியில் 1000 ரூபாய்ப் பரிசு பெற்றது.

2. காந்தம் என்ற புத்தகத்தின் விலை 3 ரூபாய் அல்ல; ரூ. 2–8–0 தான்.

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

264. இரவொடு பகல் தழுவிற்று.

“விபீஷணன் நம்மோடு வந்து சேர்வதால் என்ன கேடு நமக்கு வந்தாலும் கவலையில்லை. ஏன் நாம் உயிர் துறக்க நேர்ந்தாலும் கவலை இல்லை. அதனால் புகழ் தானே நமக்கு” என்று தெளிவாய்த் தன் கருத்தைச் சொல்லி விட்டான் ராமன்.

ராமன் சொன்ன சொல்லின் உண்மையை உணர்ந்து கொண்டார்கள் வானரத் தலைவர்கள். ‘வாஸ்தவந்தான். விபீஷணனை அங்கீகரிக்க வேண்டியதுதான்’ என்று சொல்லி ராமனை ஆமோதித்தார்கள்.

அடுத்தாற் போல்ச் செய்ய வேண்டிய காரியம்:

“ஆதலான் அபயம்என் ற
பொழுதத்தே அபயதா னம்
ஈதலே கடப்பாடென் ப(து)
இயம்பினீர்; என்பால்வைத் த
காதலால், (இனிவேறென் னைக்
கடவதென்) கதிரோன்மைந் த!
கோதிலா தவனைநீ யே
என்வயின் கொணர்தி” என் றான்

[அபயம் என்ற பொழுதத்தே: அபயம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி ஒருவன் வந்த உடனேயே; அபயதானம் ஈதலே கடப்பாடு என்பது இயம்பினீர்: அபயதானம் கொடுப்பதே உத்தமமான காரியம் என்பதை நீங்களும் சொல்லி விட்டீர்கள்: இனி வேறு என்னைக் கடவதென்: இனி யோசனை பண்ண என்ன இருக்கிறது; ஆகையால் என்பால் வைத்த காதலால் கதிரோன் மைந்த: என்னிடத்தில் நீ வைத்துள்ள அன்பைக் கொண்டே சொல்லுகிறேன், சுக்ரீவனே (சூரிய புத்திரனே): கோதிலாதவனை நீயே என் வயின் கொணர்தி என்றான்: யாதொரு குற்றமும் இல்லாத அந்த விபீஷணனை நீயே போய் என்னிடம் அழைத்து வரவேண்டும் என்றான் ராமன்.]

குறிப்பு:—விபீஷணன் அரச குலத்தைச் சேர்ந்தவன். அவனை அழைத்து வருவதற்கு அரசனுகிய சுக்ரீவனே போக வேண்டும். அப்படி மரியாதை செய்ய வேண்டும் அந்த வனை, என்று கருதியே ‘என் பால் வைத்த காதலால்’ என்று பரிந்து நயந்து சுக்ரீவனைக் கேட்டுக் கொள்ளுகிறான் ராமன்.

∴

விபீஷணனைச் சேர்ப்பதனால் கேடு ஏதாவது விளையுமோ என்று ஆதியில் சந்தேகித்தான் சுக்கிரீவன். பிறகு சந்தேகம் எல்லாம் நிவர்த்தி ஆகிவிட்டது.

ஐயுற வெல்லாம்நீ ரும்
அளவையாய் அமைந்தவீ ரன்,
தெய்வநா யகன(து)உள் ளம்
தேறிய அடைவேதே றிக்,—
‘கைபுகற்(கு) அமைவதா றாற்
கடிதினிற் கொணர்வல்’ என்னா,
மெய்யினுக்(கு) உறையுளா ன
ஒருவன்பால் விரைவிற் சென் றான்

[ஐயுறவு எல்லாம் நீரும் அளவையாய்: சந்தேகங்கள் எல்லாம் தீர்ந்த உறுதியோடு: (அளவை: யோசித்து முடிவு கட்டியது) அமைந்த வீரன்: நின்ற சுக்கிரீவன்; தெய்வ நாயகனது உள்ளம் தேறிய அடைவே தேறி: ராமனது மனசு ஆலோசித்துத் தெளிந்த முடிவையே தானும் உணர்ந்து; கைபுகற்கு அமைவதாறால் கடிதினிற் கொணர்வல் என்னா: தம்மோடு கலந்து அடைக்கலம் புகுவதற்கு ஒத்தவன் என்பது ஏற்பட்டு விட்டான்; சரிதானே;—விரைவில் விபீஷணனையே அழைத்து வருகிறேன் என்று சொல்லி; மெய்யினுக்கு உறையுளான ஒருவன் பால்: தங்குவதற்கு வேறிடம் இல்லை, விபீஷணன் ஒருவன்தான் எனத் தங்கிற்று சத்தியம், என்று சொல்லும் படியான விபீஷணனை நோக்கி; விரைவிற் சென்றான்: வேகமாக மனமுவந்து நடந்தான் சுக்கிரீவன்.]

∴

மயிந்தன் ராமனிடம் போகும் போது தம்பி துமிந்தனை விபீஷணனிடம் இருக்கும் படியாகச் சொல்லி

விட்டுத்தான் போனான். துமிந்தனும் அப்படியே இருந்தான்.

சுக்கிரீவன் விபீஷணன் இருக்கும் இடம் நோக்கி வருவதைப் பார்த்த துமிந்தனுக்கு நிகழ்ந்த விஷயம் எல்லாம் விளங்கிவிட்டது. வருகிற சுக்கிரீவனை விபீஷணனுக்குச் சுட்டிக் காட்டுகிறான்.

வருகின்ற கவியின்வேந் தை
மயிந்தனுக்(கு) இனையான் காட் டி,
'தருகென்றான் அண்ணல்நின் னை;
எதிர்கொளற்(கு) அருக்கன் தந் த
இருகுன்றாம் அனையதோ ளான்
எய்தினன்' என்னலோ டும்
இரிகின்ற உள்ளத்தா னும்
அகம்மலர்ந்(து) அவன்முன் சென் றான்

[வருகின்ற கவியின் வேந்தை: விபீஷணனை அழைக்க வரும் சுக்கிரீவனை; மயிந்தனுக்கு இனையான் காட்டி: மயிந்தனது தம்பியான துமிந்தன் விபீஷணனுக்குக் காட்டி; தருகென்றான் அண்ணல் நின்னை: உன்னைக்கூட்டி வரும்படி ராமன் சொல்லி விடுக்கிறான்; எதிர் கொளற்கு: உன்னை வரவேற்பதற்காகவே; அருக்கன் தந்த: சூரிய புத்திரனான; இருகுன்றாம் அனைய தோளான் எய்தினன்: இரண்டு மலையை ஒத்த தோள்களுடைய சுக்கிரீவன் அதோ வருகிறான்; என்னலோடும்; என்று சொன்ன மாத்திரத்தில்; இரிகின்ற உள்ளத்தானும்: ராமன் நம்மை அங்கீகரிப்பானோ என்ற சந்தேகத்தில் இருந்த விபீஷணன்: அகம் மலர்ந்து அவன் முன்சென்றான்: மனதில் ஆனந்தம் பெருகியவனாய் சுக்கிரீவனை நோக்கி நடந்து சென்றான்.]

விபீஷணனும் சுக்கிரீவனும் ஒருவரை ஒருவர் பார்த்த மாத்திரத்திலேயே இருவருக்கும் அன்பு ஜனித்து விட்டது.

தொல்லரும் காலம்எல் லாம்
பழகினும் தூயர்அல் லார்
புல்லலர்; உள்ளம்தூ யார்
பொருந்துவர் எதிர்ந்தஞான் றே;
ஒல்லைவந்(து) உணர்வும்ஒன் று
விராயினர்,—ஒருநாள்உற் ற
எல்லியும் பகலும்போ லத்
தழுவினர் எழுவின்தோ ளார்.

[தொல்லரும் காலம் எல்லாம் பழகினும்: பழமையான காலம் என்று சொல்லக் கூடிய நெடுங்காலத்துக்கு முன் இருந்தே இடைவிடாது பழகினாலும்; தூயரல்லார் புல்லலர்: களங்கமுற்ற மனமுடையவர்களாக இருந்து விட்டால், ஒருவரோடு ஒருவர் சேரமாட்டார்கள்தான்; உள்ளம் தூயார் பொருந்துவர் எதிர்ந்த ஞான்றே: தூய உள்ளம் படைத்தவர்களோ சந்தித்த மாத்திரத்திலேயே தழுவிக் கொள்ளுவார்கள்; ஒல்லை வந்து உணர்வும் ஒன்று விராயினர்: இங்கே, சுக்கிரீவனும் விபீஷணனும் வேகமாக வந்து இதயம் ஒன்றினவர்களாய்த் தழுவிக் கொண்டார்கள்; எப்படி—ஒரு நாள் உற்ற எல்லியும் பகலும் போல: ஒரு நாளிலேயே, அதாவது சூரிய கிரகணத்தன்று இரவும் பகலும் சேர்ந்தாற்போல்; தழுவினர் எழுவின் தோளார்: தூணை ஒத்த தோளரான விபீஷணனும் சுக்கிரீவனும் தழுவிக் கொண்டார்கள்.]

சூரிய கிரகணத்தன்று, பகலிலேயே இரவு தோன்றுவது உண்டு—கிரகணம் பிடித்த போது.



விபீஷணன் கரு நிறம்; சுக்ரீவன் வெண் நிறம். இரண்டு உடலும் தழுவி நின்ற போது சூரிய கிரகணத்து நாளை நினை ஊட்டுகிறதே?

சூரிய கிரகணத்தைக் கம்பர் மிகவும் அநுபவிக்கிறார். அதை விட அதிகமாகத் திடகாத்திரம் கொண்ட இரு வீரர் தழுவிக் கொள்வதை அநுபவிக்கிறார்!

வட்ட மேஜை

சென்னை நகரம்

ஆகஸ்டு மாதம் 20-ம் தேதி கல்கத்தா மைதானத்தில் கூடிய கூட்டத்தில் ஸ்ரீ சரத் சந்திர போஸ் பேசுகையில் "மத்திய சர்க்கார் ஆந்திர மாகாணத்தை பிரிக்காமல் இருப்பதன் காரணம் என்னவென்றால், ஆந்திரர்களுக்கு நிச்சயமாகச் சேரவேண்டிய சென்னை நகரம் அவர்களுக்கே போய்விடும் என்ற பயத்தினால் தான்" என்று பொருள்படக் கூறினார்.

சென்னை மாகாணத்தில் உள்ள தமிழர்கள் 'சென்னை நகரம் நியாயமாகத் தமிழர்களுடையது; அதற்காக நாமும் ஆந்திரர்களைப் போல் ஏன் கூச்சல் போட வேண்டும்' என்று நினைத்துக்கொண்டிருக்கலாம். ஆனால் இந்த நியாயமானது நமக்குத் தெரிந்து இருப்பதோடல்லாமல் இந்தியா முழுவதும் தெரிய வேண்டும்; நாம் தெரிவிக்கவேண்டும் என்பதை வற்புறுத்துகிறேன். சென்னை மாகாணத்தைப் பற்றி அதிகமாகத் தெரியாத சாதாரண வடநாட்டு ஜனங்கள் ஆந்திரர்கள் போடும் கூச்சலிலிருந்தும் மற்றபடி ஸ்ரீ சரத்போஸ் போன்றவர்களின் பேச்சிலிருந்தும் சென்னை நகரம் நியாயமாக ஆந்திரர்களுக்குச் சொந்தமோ என்று சந்தேகப்படும்படி நேருகிறது.

ஆகையினால் தமிழ் நாட்டுத் தலைவர்கள், நியாயம் நம் பக்கத்தில்தான் இருக்கிறது என்று சும்மா இருந்துவிடாமல், அந்த நியாயத்தை மற்ற இந்தியர்கள் அறியுமாறு எடுத்துக் கூறவேண்டும்.

கல்கத்தா
23—8—49 ஆர். கோபாலன்

கல்வி ஒலிபரப்பு

சில காலமாக வானொலி நிலைய நிர்வாகஸ்தர்கள், நடுத்தரப் பள்ளிகளுக்கான செய்திகளைப் பகல் 12-30 மணிக்கும், உயர்தரப் பள்ளிகளுக்கான விஷயங்களைப் பிற்பகல் 2-15 மணிக்கும், ஆரம்பப் பள்ளிகளுக்கான நிகழ்ச்சிகளை மாலை 4 மணிக்கும் ஒலிபரப்பி வருகின்றனர். கல்வி சம்பந்தமான நிகழ்ச்சிகளை வானொலி மூலம் ஒலிபரப்பப்பட வேண்டும் என்ற நோக்கம் என்னவோ உயர்ந்தது தான். ஆனால் ஒலிபரப்பும் நேரந்தான் சரியானதாக இல்லை.

காலை 10-15 மணிக்குப் பள்ளிக்குச் செல்லும் மாணவன் பகல் 1-15 மணிக்கு உணவருந்த வீடு திரும்புகிறான். ஆகவே அவன் நடுத்தரப் பள்ளிக்கான 12-30 மணி நிகழ்ச்சியைக் கேட்க முடியாது. மறுபடியும் பிற்பகல் 2-15 மணிக்குப் பள்ளிக்கூடம் சென்றால் மாலை 4-35 மணிக்கு வீடு திரும்புகிறான். ஆகவே அவன் உயர்தரப் பள்ளிக்கான 2-15 மணி நிகழ்ச்சியையும், ஆரம்பப் பள்ளிக்கான 4 மணி நிகழ்ச்சியையும் கேட்க முடியாதவனாகிறான்.

வானொலி நிலையத்தார் தேச முன்னேற்றத்தையும் மாணவர்களின் முன்னேற்றத்தையும் கருதுபவர்களானால், தேசத்தின் பணமும், மின்சாரமும் வீண் விரயமாவதைத் தடுத்து, நல்ல வழியில் பயன்படுத்த விரும்புகிறவர்களானால் கல்வி ஒலிபரப்புக்கான நிகழ்ச்சி நேரங்களை மாற்ற வேண்டும்.

திருவையாறு
19—8—49 ச. சாந்தாராம்

மதராஸிகளுக்குப் பாராட்டு

சமீபத்தில் வெளியான "கல்கி" இதழ் ஒன்றில் அரிசி சேர்க்காமல் செய்யும் பணியாரங்களைப் பற்றி ஒரு சகோதரர் எழுதிய கதை ஒன்றைப் படித்தேன். இந்த அரிசிப் பஞ்சகாலத்திற் கேற்ற கதைதான் அது. நம் ராஜாஜி, நேருஜி போன்ற தலைவர்களே எடுத்துச் சொல்லும்பொழுது நாமும் கூடிய மட்டும் அரிசியைக் குறைத்து உபயோகப்படுத்த வேண்டுமென்று என்னால் கூடியமட்டும் குறைக்க முயற்சி செய்கிறேன். ஆனால் மரவளி, சோளம் முதலியவைகளைத் தினம் ஒருவிதமாகப் பக்குவம் செய்து சாப்பிட்டால்

அதுதான் சரி!



மனைவி:—இந்தக் காலத்திலே ஊர்வலம் என்றால், மோட்டார் காரிலே வைத்து அவசர அவசரமாக வீதியைச் சுற்றி வந்து விடுகிறார்கள். நம்ம குழந்தையின் கலியாணத்திலே ஊர்வலம் ரொம்ப மெதுவாகப் போகவேணும்!

கணவன்:—நானும் அதுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். ஊர்வலம் ரொம்ப மெதுவாகப் போகணும் என்றால், டிராம் வண்டியிலே தான் வைச்சுக்கணும்!

அவர் சிபாரிசு



குடுகுடுப்பைக்காரன் :—சாமி! நல்ல காலம் வருது! இரண்டு நாளிலே வடக்கே யிருந்து ஒரு நல்ல கடிதாசி வருது...வருது...வருது...!

ஜுண்டுக்காரர் :—ஏன் ஸார்! பத்திரிகை ஆசிரியரே! இதோ இவனுக்கு! ஜோஸ்யம் தெரியும்போலே யிருக்கு. நல்ல பலனாகச் சொல்லுறான். உங்க பத்திரிகையிலே 'கால பலன்' எழுதறதுக்கு இவனை வைத்துக் கொள்ளுங்களேன்!

தான் அனுக்கமமும் ருசியாகவும் இருக்கும். தங்கள் ''கல்கி''யில் வந்த ''வாழ்க, நாகரிகம்'' என்ற கதையில் கூறப்பட்டிருந்த ரங்கூன் பேடா, வார்தா சீ, சூரத் சொஜ்ஜி முதலியவைகளையும் நம் பக்கத்தில் செய்யும் தோசை, அடை முதலியவைகளையும் செய்து பார்த்தேன். என் வங்கத் தோழிகளுக்கும் கொடுத்தேன். அவர்கள் மதராஸிகள் ரொம்பக் கெட்டிக்காரர்கள் என்று என்னைப் புகழ்ந்தார்கள்.

கல்கத்தா
22—8—49 பார்வதி பூமிநாதன்

○●○

சிபார்சு விகிதம்

தற்காலத்தில் இந்த சிபார்சு என்னும் ஆயுதம் இல்லாமல் நாம் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாது என்பது எல்லோருமறிந்த ரகசியம். மேற் படிப்பிற்காகக் காலேஜுகளில் சேர வேண்டுமானாலும் சிபார்சு இல்லாமல் முடியாது. தனது பரீட்சை மார்க்குகள் மேற்படிப்பிற்கு இடம் வாங்கித் தரும் என்று ஒரு மாணவன் நினைப்பானாலும் அவனைக் கண்டு நாம் பரிதாபப்படுவதை விட வேறென்ன செய்யமுடியும்? படித்து முடித்த பிறகோ வேலை தேடுவதற்குச் சிபார்சு தேவதை மனமிரங்கினால்தான் உண்டு. வேலையில் பிரமோஷன் வேண்டுமானாலும் உண்மையான உழைப்பல்ல வேண்டியது; அதற்கும் சிபார்சுதான்! வகுப்பு விகிதம், ஜில்லாவாரி விகிதம் போன்ற வரம்புகளைத் தாண்டி விட்டாலும் இந்தச் சிபார்சு விகிதம் என்ற கடலைத் தாண்டக் கூடிய அனுமார்களுக்குத் தான் மேற் படிப்போ, வேலையோ கிடைக்கும்! சொந்த அனுபவத்திலிருந்துதான் கூறுகிறேன். நான் பி. எஸ் ஸி. தேறிய மாணவன். முதல் வகுப்பில் நிறைய மார்க்குகளுடன்தான் தேறினேன். ஆயினும் எந்த வேலையோ மேற் படிப்போ கிடைக்காதவர்களில் நானும் ஒருவன். உதாரணமாக ஒரு குறிப்பிட்ட படிப்பிற்கு ஒரு யூனிவர்ஸிடியில் விண்ணப்பம் செய்திருந்தேன். விண்ணப்பம் வீணாயிற்று. என்னைவிடக் குறைவான மார்க்குகள் வாங்கிய மாணவர்கள் (என் ஜில்லா, என் ஜாதிதான் அவர்களும்) தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். எனக்கு இடம் கிடைக்காததற்குக் காரணம் எனக்குச் சிபார்சு இல்லாததுதான்!

திருச்சி
19—8—49 நா. இராமச்சந்திரன்

○●○

★ புத்தக மாற்றம் தீராதா?

பள்ளிக்கூடங்களில் இப்போது, வகுப்புகளுக்கு ஒரு வருடம் இருந்த புத்தகங்களையே மறு வருடமும் வைப்பதில்லை. இதனால் ஏழைப் பையன்கள் ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்பிற்கு மாறும்போது பழைய புத்தகங்கள் வாங்கிக் கொண்டிருந்ததில் மண் விழுந்தது. பெரியவரான பையன்கள் சென்ற வருஷம் இருந்த புத்தகங்களையே வைத்துக் கொண்டு படிக்கவும் இயலவில்லை. இதனால் ஏழைப் பையன்கள் தங்கள் ஏழ்மையை உத்தேசித்துப் புதுப் புத்தகங்கள் வாங்க முடியாமல் படிப்பை நிறுத்தவும் நேரிடுகிறது. ஒரு வருடமிருந்த புத்தகத்தையே மறு வருடமும் வைப்பதில் இவர்களுக்கு ஒன்றும் குறை வந்து விடாது. ஏதோ கடன் வாங்கியாவது புதுப் புத்தகங்கள் வாங்கிப் படிப்போம் என்றாலும், அதுவும் இப்போது துர்லபமாகி விட்டது. ஏனெனில் மாறின புத்தகங்கள் வைத்த பிறகும் சில நாள் சென்று அதையும் மாற்றிவிடுகிறார்கள். வேறு புத்தகங்கள் வைக்கின்றனர். முதலில் வாங்கின புத்தகங்களை அழுக்காக்காமல் வைத்துக் கொண்டு வாங்கிய இடத்திலேயே திருப்பிக் கொடுப்பதென்பதும் முடியாத காரியம். இவ்வாறு அடிக்கடி புத்தகங்களை மாற்றுவதால் ஏழைச் சிறுவர்கள் படிப்பதென்பதே முடியாத காரியமொன்று ஆகிவிடுகிறது.

உதாரணமாக என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். நான் தமிழ்ப் பாடத்திற்காக 1 தமிழ்ப் புத்தகம் (ரூ. 1—4—0) 1 தமிழ் இலக்கணம் (ரூ. 0—14—0) 2 தமிழ்க் கதைப் புத்தகங்கள் (ஒவ்வொன்றும் ரூ 0—12—0) இவ்வளவும் வாங்கினேன். இப்போது இத்தனையும் மாற்றிவிட்டார்கள். இதனால் எனது குடும்பத்திற்கு ரூ. 3—10—0 நஷ்டம். இப் பணத்தைக்கொண்டு எங்கள் ஏழைக்குடும்பம் எத்தனையோ செய்யலாம். இப்போது நான் மறுபடியும் புத்தகங்கள் வாங்கவேண்டும். இவையும் ஒரு வேளை மாறுமென்றனவோ என்னமோ? இந்த நிலையில் என்னைப்போன்ற ஏழைச் சிறுவர்கள் எப்படிப் படிப்பது?

பாளையங்கோட்டை
18—8—49 ஸ்ரீனிவாஸராகவன்

○●○

திருந்தச் செய்க!

உயர்தரப் பள்ளிக்கூடங்களில் தாய்பாஷையிலேயே கணிதம், சுகாதாரம், சரித்திரம் முதலியவைகளைப் போதிக்க ஆரம்பித்தனர். ஆங்கில பாஷையில் போதிப்பதை

திருத்தினர். ஆனால் பிற்காலப் போக்கை அவர்கள் அறியவில்லை போலும். நானும் ஒரு மாணவன். எங்கள் பள்ளிக்கூடத்தில் நாங்கள் எல்லாவற்றையும் தமிழிலேயே கற்றோம். எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்து காலேஜுக்கும் மனுப் போட்டு எங்கள் இடத்தைத் திண்டாடிப் பிடித்தோம். ஆம், பிறகுதான் தெரிகிறது எங்கள் உயர்தரப் படிப்பின் லக்ஷணம்!

எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்திலேயே கற்க வேண்டியிருக்கிறது. எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. எங்கள் பணத்தைக் கலாசாலைப் படிப்பிற்காக ஒன்றும் புரியாத அன்னிய பாஷையில் படிப்பதற்காக ஏன் செலவழிக்க வேண்டும்?

உயர்தரப் படிப்புக்கான திட்டம் வகுத்தவர்களும் மந்திரிகளும் எங்கள் கஷ்டத்தை உணர்ந்தனரா? இன்னும் பத்து வருடங்கள் வரை கலாசாலையில் மாறுதல் ஏற்படாது எனச் சில கலாசாலையினர் கூறுகின்றனர். ஏன் இந்த உயர் நிலைப் பள்ளியில் மட்டும் எங்களைத் தாய் மொழியில் கற்கச் செய்து கலாசாலையில் அந்நிய பாஷையில் கற்கச் செய்ய வேண்டும்? எங்களைப் போல் எவ்வளவு பேர் தவிக்கின்றனரோ? செய்ததைத் திருத்தச் செய்ய வேண்டும். அரசாங்கத்தினர் எங்கள் கஷ்டத்திற்கு உடனடியாக ஏதாவதும் வழி செய்ய வேண்டும்.

சென்னை
22—8—49 கி. சம்பத்குமாரன்

○●○

வாழிய செந்தமிழ்!

நம் மாகாண அரசாங்கத்தார் மொழிக்கு ஓர் ஆஸ்தான கவிஞரைத் தேர்ந்தெடுத்து, அவர்களைச் சென்ற மாதம் பதினைந்தாம் தேதி மரியாதை செய்து பாராட்டினார்கள். அதற்காக நாம் அரசினருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனெனில் கவிஞர்களை அரசாங்கமே பாராட்டுவது அந்தந்த மொழிகளையும் மக்களையும் போற்றுவது போலாகும். ஆனால் அதே நேரத்தில் மேற்சொன்ன கவிஞர்களின் 'நிலை' நிச்சயிக்கப் படாமலிருக்கிறது. அந்தப் பதவி அவர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு மட்டுந்தான் என்றும் அது தாற்காலிகமானதுதானே! அரசியலிலே உள்ள "போட்டி முறை" அரசவைப் புலவர்களையும் பாதிக்க வேண்டுமா? இந்த ஏற்பாடு அர்த்தமற்றது என்று நான் கருதுகிறேன். மேல் நாடுகளில் 'அரசவைக் கவிஞர்'களாக நியமிக்கப்பட்டவர்கள் தங்கள் ஆயுட்காலம் வரையில் அதே பதவியிலிருந்து பணியாற்றி வந்ததாகத்தான் தெரிகிறது. சான்றாக ஆங்கில நாட்டு 'டென்னிசனை'ச் சொல்லலாம். நம் நாட்டு மன்னர்களும் இதே முறையில்தான் புலவர்களை ஆதரித்து வந்தார்கள் என்பது வெளிப்படை. அப்படியிருக்கும்போது இப்போது மட்டும் ஏன் இந்த அவசியமில்லாத புது முறை?

ஆகவே, தற்சமயம் பதவியில் இருப்பவர்களை ஆயுள் முடிவு வரையில் இருக்கச் செய்வதே சிறப்புடையதாகும்.


அம்பத்தூர்
24—8—49 சி. மகாலிங்கம்

○●○

தமிழ் மரபல்ல!

தாங்கள் 21-8-48 "கல்கி"யில் ஆஸ்தான கவிகளுக்கு அரசியலார் ஐந்தாண்டு வரையறை செய்திருப்பதைக் கண்டித்திருப்பது மிகவும் பொருத்தமானது. ஒட்டக்கூத்தர் சோழவவைக் களத்துக் கவிச் சக்கரவர்த்தியாக

ச ண் டி த் த ன ம்!



மூன்று தலைமுறை விளங்கியதும், அவர் அடுத்தடுத்து மூன்று சோழ மன்னர்கள் மீது மூவருலாப் பாடியதும் பிரசித்தம். அண்மையில், சேது சமஸ்தான மகா வித்வானாக விளங்கிய பிரும்மஸ்ரீ ரா. ராகவையங்காரும் அங்ஙனமே மூன்று தலைமுறை சேது மன்னர்களுக்கு ஆஸ்தான வித்வானாக விளங்கிப் பின்னர் செட்டி நாட்டரசர் வேண்டுகோளுக்கு இணங்கி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சித் துறையில் ஈடுபட்டார். ஆதலின் ஆஸ்தான வித்வான்களுக்கு ஆண்டு வரையறை செய்தல் பொருந்தாது.

ஆஸ்தான பீடத் தமர்ந்தும் அனிபுலவோர்
நாத்தானம் உற்றும் நனிவாழி !—எத்தேறும்
நாமக்கல் ராமலிங்கம் நற்கவிஞ! நாளுநும்
பூமிக்குள் மார்க்கண்டன் போல்.

காந்தி அடிகள் கருத்தாக் கருதலர்க்குச்
சாந்தி அருளுமுயர் தத்துவங்கள்—தேன்தமிழில்
பல்லோர் விரும்பப் பரவும் இராமலிங்க
நல்லோய்! நீ வாழி நயந்து.

அரங்கநாதபுரம்
திருக்காட்டுப்பள்ளி
23—8—49

திராவிடக் கவிமணி
வே. முத்துசாமி ஐயர்

○●○

சரித்திரப் பட்டம்

பி. ஏ. வகுப்பில் பொருளாதார சரித்திரத்தை முக்கிய பாடமாக எடுத்துக் கொண்ட மாணவர்களுள் நானும் ஒருவன். என் போன்றவர்களைச் 'சரித்திரப் பட்டதாரிகள்' என்று சொல்லுவர்.

படித்துப் பட்டம் பெற்று ஒரு வருடத்திற்கு மேல் ஆகிறது. எவ்வளவு பகீரதப் பிரயத்தனம் செய்தும் வேலை கிடைக்கவில்லை. வருமான வரி இலாகாவில் எங்களை எடுப்பதில்லை. அந்த உத்தியோகத்திற்கு இவ்வளவு படிப்பு வேண்டியதில்லையாம்! சாதாரண எஸ். எஸ். எல். ஸி. போதுமாம். அந்தப் பாழாய்ப் போன உபாத்தியாயர் வேலையாகிலும் கிடைக்கிறதா? அதற்கும் அதிர்ஷ்டம் இல்லை. பி. டி. பயிற்சிக்கு அனுபவமுள்ளவர்களையே எடுத்துக் கொள்கிறார்கள். ஹைஸ்கூல்களில் கணக்கு, விஞ்ஞான பட்டதாரிகளையே, பி. டி. க்கள் கிடைக்காத சமயத்தில் எடுத்துக் கொள்கின்றனர். சரித்திரப் பட்டதாரிகளுக்குக் கிராக்கி இல்லை. இந்த நிலைமையில் நாங்கள் வேலையில்லாமல் திண்டாட வேண்டியிருக்கிறது.

வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவரும் இக்காலத்தில், இனிமேலாவது மாணவர்கள் பி. ஏ. வகுப்பில் சரித்திரத்தை எடுத்துக் கொண்டு அல்லல் படாதிருக்கட்டும் என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

மதுரை
19—8—49

கி. சு. ஹாலாஸ்யம்

○●○

ராஜாஜியின் யோசனை

ராஜாஜி அவர்களின் யோசனையின் அடிப்படையிலேயே திரு என். நடராஜன் அவர்கள் கூறும் யோசனைகள் போற்றத்தக்கவையாக விளங்குகின்றன.

நாம் சுயராஜ்யம் பெற்று இரு ஆண்டுகள் ஆகிவிட்டன. இதுவரையும் கல்வியின் ஆக்கம் குறித்து எவ்வித உருப்படியான திட்டமும் அரசாங்கத்தார் வெளியிடவில்லை. ஆனால் சுயராஜ்யம் பெறுவதற்கு முன்னிருந்த நிலைமையே இன்றும் இருந்து வருகிறது.

ராஜாஜி அவர்கள் கூறிய யோசனையாகிய "வாரம் மூன்று நாட்களாவது ஏழை மக்களுக்குக் குறிப்பாக நாட்டுப்புற பாலர்களுக்குக் கல்வி போதித்து மற்றைய நாட்களில் தம் பெற்றோர்களின் இஷ்டப் பிரகாரம் வேறு எந்தத் தொழில்களில் ஈடுபடச் செய்வது" என்பது இன்றைய நிலைக்கு மிகப் பொருத்தமானது. ஏனெனில் நாட்டில்—கிராமாந்தரங்களில் குழந்தைகளைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பினால், எங்கே தங்கள் தொழிலில் தங்களுடன் தம் குழந்தைகள் ஒத்துழைக்கவோ அல்லது அக் குழந்தைகள் தனிப்பட்ட முறையில் சம்பாதிக்கவோ இயலாமல் போய் விடுமோ என்ற எண்ணம் பெரும்பாலான கிராம மக்களின் மனதில் குடிகொண்டுள்ளது.

இந்தச் சமயத்தில் நான் பார்த்த ஓர் சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. நான் ஒரு கிராமப் பள்ளிக்கூட ஆசிரியரும் என் நண்பருமான ஒருவரைப் பார்க்கச் சென்று கொண்டிருந்தேன். பள்ளிக்கூடத்தை அடையும் பொழுது ஒரு பையன் அழுது கொண்டே தன் தகப்பன் பின்னால் சென்று கொண்டிருந்தான். அப்போது தகப்பன் கூறுகிறான் "ஏண்டா! கழுதே! குடிக்கக் கஞ்சியில்லே, உனக்குப்படிப்பு வேறே? வாடா! அதோ பூட்டியிருக்கும் எருதுகளை அவிழ்த்துக் கொண்டு மேய்த்துவிட்டு வாடா!" இம்மாதிரியான ஏழைக் குடியானவர்கள் எத்தனையோ? இவர்களுக்கெல்லாம் ஆறுதல் அளிக்கும் ராஜாஜியின் ஏற்பாடு.

ஒரு காலத்தில் கல்வியிற் சிறந்த நாடு நம் பாரத நாடு. நாகரிகத்திற் சிறந்தது நம் நாடு என்று உலகம் புகழ்ந்தது. ஆனால் இன்றைய நிலை என்ன? இதற்கு ஓர் முற்றுப் புள்ளி வைக்க வேண்டாமா? ராஜாஜி அவர்களின் யோசனைக்கு நம் சென்னை மாகாண அரசாங்கத்தார் செவி சாய்க்கவேண்டும்.

புதுக்கோட்டை
22—8—49

கா. மு. கனி

○●○

வரவேற்பு

ஆகஸ்டு 21-ம் தேதி "கல்கி" இதழில் வெளியான 'ராஜாஜியின் யோசனை' என்னும் கட்டுரையை வரவேற்கிறேன். நான் ஒரு ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயர். தொழிலுக்கு டிரயினிங் படித்துக் கொண்டிருக்கிறேன். எங்கள் சொந்தக் கிராமத்தில் ஒரு பள்ளிக் கூடம்தான் இருக்கிறது. ஆனால் எங்கள் ஊரில் பையன்கள் அதிகமாக விருப்பதால் பள்ளிக்கூடத்துக்குப் அனுப்பாமல் சிலபேர் கூலி வேலைக்குக் கையாளாகக் கூட்டிக் கொண்டு போகிறார்கள். அதனால் அவர்களுக்கு எழுத்தறிவு வாசனை யில்லாமல் போகிறது. மேன்மை தங்கிய நம் ராஜாஜியின் யோசனைப்படி வாரத்திற்கு மூன்று நாள் பள்ளியில் சென்று பயின்றும், மற்ற நாட்களில் தங்கள் பெற்றோர்களுடன் கூலி வேலை செய்யச் சௌகரியமாக இருக்கும். மேற்படி யோசனை அமுலுக்கு வரும் நன்னாளை வெகு ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

திருநெல்வேலி
21—8—49

எஸ். வள்ளிநாயகம்

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ 'சென்னை நகரம்' என்ற கடிதம் எழுதிய கல்கத்தா ஸ்ரீ கோபாலனுக்கும், 'புத்தக மாற்றம் தீராதா?' என்ற கடிதம் எழுதிய பாளையங்கோட்டை ஸ்ரீ ரா. ஸ்ரீனிவாசனுக்கும் ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.



சிறந்த சலவை ...
இந்த
OK
கொண்டுதான்!

கல்கி



KALKI செப்டம்பர் 4, 1949 4 அணா

REGD. NO. M. 4392



துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகச்
சலவை செய்கிறது

S. 109-172 TM